பக்கங்கள்: 24 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2048 | கார்த்திகை 17 | ஞாயிற்றுக்கிழமை 03.12.2017 | கதிர் 28

குறைந்த செலவில் குடும்பமாக கனடாவில் குடியேற...
WINSTAR VISA CONSULTANTS
இல.106, தபாற்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி,யாழ்ப்பாணம்.
web: www.winstarjaffna.com
fb.winstar visa consultants
தொலைபேசி: 021 300 4641

# வடக்கில் இராணுவம் அரசியல் செய்யலாகாது

## முல்லைத்தீவுக்குப் பயணம் செய்த படைத் தளபதி கண்டிப்பான உத்தரவு



**கொழும்பு, டிசெம்பர்03**

**வடக்கு மாகாணத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினர் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடக்கூடாது.**

**இவ்வாறு கண்டிப்பான அறிவுரை வழங்கியுள்ளார் இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மஹேஷ் சேனாநாயக்க.**

பக்கம் 22

# பொறுப்புக் கூறுவதற்கு பின்னிற்காது நல்லாட்சி

## தேசிய சமாதானப் பேரவை கருத்து

கொழும்பு, டிசெ.03

நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் செயற்பாட்டை அரசு தாமதித்தாலும் அதனை முன்னெடுக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இன்னும் இருக்கின்றது. கூட்டு எதிரணி மிகவும் பலமாகச் செயற்படுகின்றமையின் காரணமாக அரசு இந்த விடயத்

பக்கம் 22

# இடரால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 15 ஆனது



கொழும்பு, டிசெ. 03

சீரற்ற காலநிலை காரணமாக இடர்களில் சிக்கி உயிரிழந்தவர்களின்எண்ணிக்கை 15 ஆக அதிகரித்

பக்கம் 22

# 20 இந்திய மீனவர்கள் பருத்தித்துறையில் கைது



யாழ்ப்பாணம், டிசெ. 03

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 20 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு பருத்தித்துறைக் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டபோதே இந்த 20 மீனவர்களையும் கடற்படையினர் கைது செய்திருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட

பக்கம் 22

# மஹிந்த தலைமையில் வருகிறது புதிய கூட்டு

## உள்ளூராட்சித் தேர்தலில் களமிறங்க

கொழும்பு, டிசெ. 03

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்காக மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் கூட்டு பொதுஜன முன்னணி என்ற பெயரில், புதிய கூட்டணி அமைக்கப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில்செயற்படும்

பக்கம் 22

# கே.பிக்கு எதிரான மனு நிராகரிப்பு



கொழும்பு, டிசெ. 03

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் சர்வதேசப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதனை (கே.பி.) கைது செய்ய வேண்டும் என்று ஜே.வி.பி. தாக்கல் செய்திருந்த மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

பக்கம் 22

# ஜனவரி 1 இல் அதிரடி மாற்றம்

கொழும்பு, டிசெ. 03

எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி இலங்கை அரசியல்களத்தில்அதிரடி மாற்றங்கள் நிகழக்கூடும் என்று எதிர்வு கூறல் வெளியிடப்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சிக்கும், ஐக்கியதேசியக்கட்சிக்கும் இடையில் 2015ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட கூட்டாட்சி ஒப்பந்தம் எதிர்வரும் 31ஆம் திகதிமுடிவடையவுள்ளது.

இதற்கிடையில் கூட்டாட்சியில் இருந்து பிரிவதா அல்லது தொடர்ந்து

பக்கம் 22

# முல்லைத்தீவில் கன மழை; இயல்பு வாழ்க்கை பாதிப்பு



முல்லைத்தீவு, டிசெ. 03

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது

கடும் மழையால் முல்லைத்தீவில் சிறிய குளங்கள் நிரம்பி வான் பாய்கின்றன. அதனை விட வீதிகளைக் குறுக்கறுத்து வெள்ளம் பாய்வ

பக்கம் 22

# வேலையற்ற பட்டதாரிகள் வவுனியாவில் போராட்டம்

## வேலைவாய்ப்பைத் துரிதமாக வழங்கக் கோரி




வவுனியா, டிசெ. 03

அரசினால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நீண்ட காலமாக நிறைவேற்றப்படாமையைக் கண்டித்தும், வேலை வாய்ப்புக்களை உடனடியாக வழங்குமாறு கோரியும் வடக்கு மாகாண வேலை

பக்கம் 22

# 2020 இல் இலங்கையில் இராணுவ ஆட்சி வரும்

## கொழும்பு பல்கலை வெளியிட்ட தகவல்

கொழும்பு, டிசெ.03

2020 இல் இலங்கையின் ஜனாதிபதியாக நாட்டை நேசிக்கின்ற, படித்த, ஏகாதிபத்திய இராணுவ ஆட்சி அமைப்பைக் கொண்ட தலைவரே பொருத்தமானவர் என்று கொழும்புபல்கலைக்கழக ஊடகப் பிரிவு நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

2020ஆம் ஆண்டில் இலங்கையின் ஆட்சி அதிகாரம் யார் கையில் இருக்கும் என்பது தொடர்பில் கொழும்புபல்கலைக்கழக ஊடகப் பிரிவு ஆய்வு ஒன்றை நடத்தியுள்ளது.

பல்கலைக்கழக ஊடகப் பிரிவு ஆய்வின் பெறுபேறுகளின்படி,

2020 ஆம் ஆண்டில் இலங்கையின் ஜனாதிபதியாக முன்னாள் பாதுகாப்புச்செயலாளர்கோட்டாபய

பக்கம் 22

# ரிசாத் -ஹசன் அலி கிழக்கில் கூட்டணி

கொழும்பு, டிசெ.03

உள்ளூராட்சித் தேர்தலில்ரிசாத்பதியுதீன்தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், கிழக்கு மாகாணத்தில் ஹசன் அலி தலைமையிலான ஐக்கிய சமாதானக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிட முடிவு செய்துள்ளது.

அதேவேளை, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து பிரிந்து, ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பை உருவாக்கியுள்ள ஹசன் அலி,

பக்கம் 22

# தேவநம்பியதீசன் தமிழ் மன்னனா? மறுக்கிறார் சரத் வீரசேகர



கொழும்பு,டிசெ.03

தேவநம்பியதீசன் ஒரு தமிழ் மன்னன் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரன் கூறியிருந்த நிலையில், தீசன் என்பது சிங்கள அரசரின் பெயர் என்றும், இலங்கையின் மூலப் பெயர் சிங்கலே என்றும் கூறியிருக்கிறார் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் பிரதியமைச்சராக இருந்த ரியர் அட்மிரல் சரத் வீரசேகரவிடம், கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று எழுப்பிய கேள்விகளுக்கே இவ்வாறு பதிலளித்துள்ளார்.

கேள்வி:தேவநம்பியதீசன் உண்மையில் ஒரு தமிழ் மன்னன் என அண்மையில் வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் கூறியுள்ளார். இது தொடர்பான தங்களது கருத்து என்ன?

பதில்: தேவநம்பியதீசன் ஒரு தமிழ் மன்னன் என விக்னேஸ்வரன் தெரிவித்திருந்தார். தீசன் என்பது சிங்கள அரசரின் பெயராகும். தேவநம்பிய என்பது இந்த அரசனைக் கௌரவிக்கும் முகமாக வழங்கப்பட்ட பெயராகும்.

இந்தியாவின் லும்பினியில் காணப்படும் அசோகரின் தூணில் (Ashok Pillar) செதுக்கப்பட்டுள்ள Rummindei கல்வெட்டில், அசோகச்சக்கரவர்த்தியை கௌரவிக்கும் முகமாக வழங்கப்பட்ட தேவன பியேன பிரியதர்சன அசோக (Devena Piyena Priyadarshana Ashoka) எனப் பொறிக்கப்பட்டுள்ளது.

வடமாகாண முதலமைச்சர் இந்தியாவுக்குச் சென்று 'தீசன்' கதையைக் கூற வேண்டும், இந்தியர்களிடம் போய் மௌரியப் பேரரசனான அசோகனும் தமிழ் மன்னன் என்று அவர் கூறட்டும்.

கேள்வி: இது சிங்கள பௌத்த நாடல்ல என முதலமைச்சர் விக்னேஸ்வரன் கூறுகிறார். இது தொடர்பான தங்களின் கருத்து என்ன?

பதில்: இந்த நாட்டின் மூலப் பெயர் 'சிங்கலே'(Sinhale) என்பதாகும். 1815 இல் பிரித்தானியத்தலைவர்களாலும் 'சிங்கலே' தலைவர்களாலும் கண்டிய சாசனம் எழுதப்பட்டது. எமது நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் 'சிங்கலே' என்ற பெயரைத் தொடர்ந்தும் நாம் பயன்படுத்தியிருந்தால் இந்த நாட்டிலுள்ள அனைவரும் 'சிங்களவர்களாகவே' இருந்திருப்பார்கள்.

உலகிலுள்ள அனைத்து நாடுகளும் பல்லினங்களைக் கொண்ட நாடுகளாகவே உள்ளன. ஆனால் பொதுவாக நாடுகளில் உள்ள பெரும்பான்மைச் சமூகத்தினர் மற்றும் பெரும்பான்மை மதங்களை அடிப்படையாகக் கொண்டே அந்தந்த நாடுகள் அடையாளம் காணப்படுகின்றன.

ஆகவே எமது நாடானது சிங்கள பௌத்த நாடு என அழைக்கப்படுவதை எவரும் எதிர்க்க முடியாது. ஏனெனில், இந்த நாட்டில் 74 சதவீதமான சிங்களவர்களும் இவர்களில் 85 சதவீதமானவர்கள் பௌத்தர்களாகவும் உள்ளனர். இதுவே உண்மையான நிலைப்பாடாகும்.

சிங்களவர்கள் வடக்கில் குடியேறுவதை முதலமைச்சர் விக்னேஸ்வரன் விரும்பவில்லை. யாழ்ப்பாணத்திலுள்ள புத்தர் சிலைகளை அகற்றுமாறும் முதலமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார். ஆனால் கொழும்பிலுள்ள சிங்களவர்கள் மத்தியில் தமிழர்கள் மிகவும் மகிழ்ச்சியாக வாழ்கின்றனர். ஏனெனில் இது சிங்கள பௌத்த நாடாகும்.

முஸ்லிம் நாடொன்றில் வாழும் முல்லாக்களை முதலமைச்சர் விக்னேஸ்வரன் இவ்வாறு துன்பப்படுத்தினால், அவரது தலை துண்டிக்கப்படும். ஆனால் இது சிங்கள பௌத்த நாடு என்பதை விக்னேஸ்வரன் அறிந்துள்ளதால் தான் அவர் தனது அதிருப்திகளை வெளியிட்டு வருகிறார்.

பௌத்தர்கள் ஏனைய மதங்களை மதிக்கின்றனர். இதன் காரணமாகவே இந்த நாட்டில் பல ஆயிரக்கணக்கான கோயில்கள், தேவாலயங்கள் மற்றும் பள்ளிவாசல்கள் போன்றன அமைக்கப்பட்டுள்ளன.

வெசாக் போயா தினத்தை அனைத்துலக விடுமுறை தினமாக அறிவிக்குமாறு ஜெனீவாவில் வைத்து லக்ஸ்மன் கதிர்காமர் பரிந்துரை செய்திருந்தார். இதுவே உண்மையான நல்லிணக்கமாகக் காணப்பட்டது. ஆனால் இன்று இந்த நல்லிணக்கத்தை விக்னேஸ்வரன் போன்றவர்கள் அழிக்க முயற்சிக்கிறார்கள்-என்றார்.

## மாகாண எல்லை நிர்ணயம் இறுதிக் கட்டத்தை எட்டியது

கொழும்பு, டிசெ.03

மாகாண சபைகள் எல்லை நிர்ணய பணிகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாக எல்லை நிர்ணயக் குழு தெரிவித்துள்ளது.

மாகாண சபைகள் எல்லை நிர்ணயம் தொடர்பில் 19 மாவட்டங்களில் பொதுமக்களின் கருத்துகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக அதன் செயலாளர் சமன் ரத்நாயக்க தெரிவித்தார்.

ஏனைய மாவட்டங்களில் மக்கள் கருத்துக்களைப் பெறும் பணிகள் நிறைவடைந்ததன் பின்னர், எதிர்வரும் பெப்ரவரி மாத மளவில், அதன் இறுதி அறிக்கையை விடயத்துடன் தொடர்புடைய அமைச்சரிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்க உள்ளதாக அவர் கூறினார்.

(ஐ)

## மட்டக்களப்பு மீனவர்களின் வலைகளில் சிக்கிய பாம்புகள்



மட்டக்களப்பு, டிசெ.03

மட்டக்களப்பு, நாவலடியில் நேற்றுமுன்தினம் காலை கரை வலைத் தொழிலில் ஈடுபட்ட அனைத்து மீனவர்களின் வலைகளிலும் பாம்புகள் மட்டுமே பிடிபட்டுள்ளன.

அண்மைக் காலமாகக் கடல் கொந்தளிப்பு காரணமாக மீனவர்கள் சிரமங்களுக்கு மத்தியில் தங்களது வாழ்க்கையைக் கொண்டு செல்கின்ற நிலையிலேயே இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

நாட்டில் அசாதாரண சூழ்நிலை தொடர்ந்து வரும் நிலையில், இவ்வாறு பாம்புகள் மட்டும் பிடிபட்டுள்ளமையானது மக்கள் மத்தியில் ஒருவித அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதேநேரம், அரசு தங்களுக்கு எந்தவிதமான உதவிகளையும் வழங்குவது இல்லை என்றும் மீன்பிடித் தொழிலை ஜீவனோபாயமாகக் கொண்ட மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இவ்வாறு அதிகளவில் பாம்புகள் ஏன் பிடிபடுகின்றன என்பது தொடர்பாக அதிகாரிகள் ஆராய வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தமிழகம் மற்றும் இலங்கையில் சுனாமி இடர் ஏற்படலாம் என அண்மைக்காலமாகப் பல தகவல்கள் வெளியாகி உள்ளன. இந்நிலையில் பெருந்தொகைப் பாம்புகள் கடற்கரையை அண்மித்த பகுதியில் பிடிபட்டுள்ளன.

2004ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி இடரின்போதும் இவ்வாறு பெருந்தொகைப் பாம்புகள் கரைக்கு வந்திருந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# தனித்தும் சேர்ந்தும் தேர்தலில் போட்டி

### இறுதிச் சுற்றுப் பேச்சு இன்று

கொழும்பு,டிசெ.03

உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்கள் தொடர்பில், ஐக்கிய தேசிய முன்னணியின் கட்சித் தலைவர்கள், இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை, அலரி மாளிகையில் சந்தித்து இறுதிச் சுற்று பேச்சில் ஈடுபடவுள்ளார்கள் என முற்போக்கு கூட்டணி மற்றும் ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர், தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் முற்போக்குக் கூட்டணி போட்டியிடவுள்ள உள்ளூராட்சிச் சபைகள் தொடர்பாக, இதுவரை நுவரெலியா மாவட்ட உள்ளூராட்சி சபைகள் தொடர்பிலேயே ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஆசனப் பங்கீட்டுப் பேச்சுகளில் ஏறக்குறைய முடிவுகள் எட்டப்பட்டுள்ளன. ஏனைய சபைகளைப் பொறுத்தவரை பேச்சுகள் முடிவு பெறவில்லை.

அதேவேளை உள்ளூராட்சிச் சபைகளை, எமது வாக்காளர்களின் எண்ணிக்கை அடிப்படையில், மக்கள் பெரும்பான்மையாக வாழும் சபைகள், குறைவாக வாழும் சபைகள், கணிசமாக வாழும் சபைகள் என நாம் தரம் பிரித்துள்ளோம். எமது மக்கள் பெரும்பான்மையாக வாழும் சபைகள் மற்றும் குறைவாக வாழும் சபைகளை பொறுத்தவரை ஐ.தே.கவிடன் கூட்டிணைந்து ஐக்கிய தேசிய முன்னணி என்ற அடிப்படையில் போட்டியிடுவதில் சிக்கல் கிடையாது.

ஆனால், எமது வாக்காளர்கள் கணிசமாக வாழும் சபைகளைப் பொறுத்தவரை ஐக்கிய தேசிய முன்னணியாகப் போட்டியிடுவதில் நமக்குப் பாதிப்பு ஏற்படும் என்ற கருத்து நிலவுகிறது. ஏனென்றால் புதிய கலப்பு தேர்தல் முறையில் வட்டாரங்களில் மட்டுமல்லாமல், பட்டியலிலும் உறுப்பினர்களைப் பெறவேண்டியுள்ளது. ஆகவே, நமது வாக்காளர்கள் கணிசமாக வாழும் சபைகளில் அனைத்து வட்டாரங்களிலும் நாம் போட்டியிடுவதன் மூலமே நாம் உரிய இலக்கை அடைய முடியும். இதனால் சில சபைகளில் சேர்ந்து ஐக்கிய தேசிய முன்னணியாகவும், சில சபைகளில் தனித்து முற்போக்கு கூட்டணியாகவும் போட்டியிடவேண்டும் என்பதுவே தமிழ் முற்போக்குக் கூட்டணியில் தற்போது கலந்தாலோசிக்கப்படும் நிலைப்பாடாக இருக்கின்றது.

எவ்வாறாயினும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.க குழுவுடன் பேச்சுகள் நடத்திய பிறகு, ஐந்தாம் திகதி கொழும்பில் கூடும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் அரசியல் குழுவில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் -என்றார்.

## தமிழக மீனவரின் பாதுகாப்பு: கடற்படைகள் ஜனவரி பேச்சு

கொழும்பு,டிசெ.03

இலங்கை – இந்தியக் கடற்படையினருக்கு இடையில், கடல் எல்லைப் பகுதியில் தமிழக மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் அடுத்த மாதம் பேச்சு நடைபெறும் என்று இந்திய கிழக்கு பிராந்தியக் கடற்படையின் ரியர் அட்மிரல் அலோக் பட்நாகர் தெரிவித்தார்.

ஆண்டு தோறும் டிசெம்பர் மாதம் 4ஆம் திகதி இந்தியக் கடற்படை தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. இதனை முன்னிட்டு தமிழகம், புதுச்சேரி கடல் பகுதியை உள்ளடக்கிய கிழக்குப் பிராந்திய கடற்படையின் ரியர் அட்மிரல் அலோக் பட்நாகர் சென்னை துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான சுமித்ரா போர்க் கப்பலில் செய்தியாளர்களைச் சந்தித்தபோதே இது தொடர்பில் கருத்து வெளியிட்டார்.

மேலும், ஆழ்கடலில் மீன் பிடிக்கச் செல்லும் தமிழக, புதுச்சேரி மீனவர்களுக்கு ஏதேனும் பாதுகாப்புக் குறைபாடு ஏற்பட்டால் அவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் கிழக்குப் பிராந்தியக் கடற்படை செய்து வருகிறது என்றும் அவர் கூறினார்.

(ஐ)

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டஈடு வழங்கல் ஆரம்பம்

கொழும்பு, டிசெ. 03

அசாதாரண காலநிலை காரணமாக இடர்களை எதிர்நோக்கியுள்ள பொதுமக்களுக்கு 10 ஆயிரம் ரூபா நட்டஈடு வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நட்டஈட்டுத் தொகைகளைப் பிரதேச செயலகங்களில் சென்று பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அமைச்சு அறிவித்துள்ளது.

இதன் பொருட்டு, இடர் நிலைமைகளால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகம் என்பன இன்று ஞாயிற்றுக்கிழமையும் திறந்திருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நுவரெலியாவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கல்

கொழும்பு, டிசெ.03

நுவரெலியா மாவட்டத்தில் அம்பகமுவ மற்றும் நுவரெலியா பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் இயற்கை இடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு மலையக புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

பலத்த காற்றினால் சேதத்துக்கு உள்ளாகிய கூரைத்தகரங்களுக்குப் பதிலாக புதிய கூரைத் தகரங்களையும் ஏனைய அத்தியாவசிய பொருள்களையும் வழங்குவதற்கான நிதியை அமைச்சர் திகாம்பரம் ஒதுக்கீடு செய்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களின் விவரங்கள் தோட்ட முகாமையாளர் மற்றும் கிராம சேவகர்கள் மூலமாகப் பெறப்பட்டு பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியத்தின் ஊடாக நிவாரணப் பொருள்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொகவந்தலாவை, நோர்வூட், சாமிமலை, மஸ்கெலியா, டிக்கோயா, டயகம போன்ற பகுதிகளில் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதற்கட்டமாகக் கூரைத்தகரங்கள் மற்றும் ஏனைய நிவாரணங்கள் நாளை அமைச்சர் பழனி திகாம்பரத்தினால் வழங்கப்படவுள்ளன.

# காணாமற்போன குடும்பஸ்தர் மடுக் காட்டில் சடலமாக மீட்பு



மன்னார், டிசெ.03

மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட ஆண்டாங்குளம் பகுதியில் காணாமற்போன நபர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்த நபர் கடந்த 35 தினங்களாகக் காணாமற் போயிருந்த நிலையில், அவரது சடலம் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை மடு காட்டுப் பகுதியிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஆண்டாங்குளம் கிராமத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை சன் நீக்கிலாஸ் (வயது56) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

ஆண்டாங்குளம் சந்தியில் சிகை அலங்கார நிலையமொன்றை நடத்தி வந்த இந்தக் குடும்பஸ்தர், கடந்த ஒக்ரோபர் மாதம் 25ஆம் திகதி காணாமற்போனதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அவரைப் பொலிஸார் தேடி வந்தனர். இந்நிலையில், காட்டுப் பகுதியில் மிகவும் உருக்குலைந்த நிலையில் சடலம் ஒன்று காணப்படுவதாக மடு பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து மடுப் பொலிஸார் சடலத்தை அங்கு சென்று பார்வையிட்டனர்.

இதன்போது குறித்த சடலம் கடந்த ஒக்ரோபர் மாதம் காணாமற்போனவரினது என அவரது உறவினர்கள் உறுதிப்படுத்தினர்.

மடு பொலிஸார், கிராம அலுவலர் மற்றும் விசேட தடயவியில் நிபுணத்துவப் பொலிஸார் ஆகியோர் சடலம் மீட்கப்பட்ட இடத்திற்கு சென்று பார்வையிட்டதோடு, மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 40 அடி பள்ளத்தில் பாய்ந்தது வாகனம்

## 6 பேர் படுகாயம்

பதுளை – களுகஹகந்துர என்ற பகுதியில் இடம்பெற்ற விபத்தில் 6 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்றுச் சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்றதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

வீதியில் பயணித்த வான், வீதியை விட்டு விலகி 40 அடி பள்ளத்தில் பாய்ந்துள்ளது.

விபத்தில் வானில் பயணித்த 6 பேர் காயமடைந்த நிலையில் மீகஹகிவுல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பிட்டமாருவ என்ற பகுதியில் இடம்பெற்ற விருந்து ஒன்றில் கலந்துகொண்ட பின்னர், பனாகொட பிரதேசத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த வானே இவ்வாறு விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

இந்த விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தகெட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வழக்குகளைத் துரிதப்படுத்த 3 விசேட மேல் நீதிமன்றங்கள்

## நீதியமைச்சர் நேற்றுத் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.03

விசேட வழக்குகளைத் துரிதப்படுத்த அடுத்த ஜனவரி மாதம் முதல் மூன்று நீதிபதிகள் அடங்கிய மூன்று மேல் நீதிமன்றங்கள் அமைக்கப்படும் என நீதி மற்றும் வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பு விவகார அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.

400 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படும் மாத்தளை புதிய நீதிமன்றத் தொகுதிக்கான அடிக்கல் நடும் நிகழ்வில் நேற்றுக் கலந்து கொண்டு பேசும்போதே அமைச்சர் இதனைக் கூறினார்.

பெண்கள் மற்றும் சிறுவர் துன்புறுத்தல்கள் தொடர்பான 19 ஆயிரம் வழக்கு ஆவணங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்தில் உள்ளன. அந்த வழக்குகளை விசாரிக்க தனியான பிரிவு ஆரம்பிக்கப்படும் எனவும் அமைச்சர் தலதா அத்துகோரள குறிப்பிட்டுள்ளார்.

# பாதுகாப்பை அதிகரிக்க கோருகின்றார் மஹிந்த

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனக்கான பாதுகாப்பை அதிகரிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவுப் பிரதானியான சரத்சந்திர லுனதிகலவின் ஊடாக முக்கியஸ்தர்களின் பாதுகாப்பு மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பாதுகாப்புப் பிரிவுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் விக்ரமசிங்கவுக்கு இந்தக் கோரிக்கைக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷவுக்குத் தற்போது 154 அதிகாரிகள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்களைத் தவிர, ஜீப் வண்டிகள் இரண்டும், பஸ் ஒன்றும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில், எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு தனக்கான பாதுகாப்பை அதிகரித்து தருமாறு மஹிந்த கோரிக்கை விடுத்துள்ளார்.

# தமிழர் – முஸ்லிம்கள் இடையே கலவரத்தை உண்டுபண்ணாதீர்

## வவுனியா பொலிஸ் பொறுப்பதிகாரி கோரிக்கை





தமிழ் – முஸ்லிம் இனங்களுக்கிடையே கலவரத்தை உண்டுபண்ண வேண்டாம் என வவுனியா பொலிஸ் பொறுப்பதிகாரி மஹிந்த வில்வோராச்சி தெரிவித்துள்ளார்.

வவுனியா நகர கிராம சேவையாளர் அலுவலகத்தில் நேற்று வவுனியா பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி மஹிந்த வில்வோராச்சி, வவுனியா நகர், வைரவர்புளியங்குளம், கற்குழி, தோணிக்கல் மற்றும் வைரவர்புளியங்குளம் பகுதிகளைச் சேர்ந்த சிவில் அமைப்புக்களை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாடலில் உரையாற்றிய போதே இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியாவில் அண்மைக் காலமாக இடம்பெற்றுவரும் சில அசம்பாவிதச் சம்பவங்களைப் பற்றியும் பள்ளிவாசலுக்கு முன்பாகவுள்ள கடைகள் தீப்பற்றி எரிந்தமை பற்றியும் உங்களுக்கு தெரியும். இந்தச் சம்பவங்களை வைத்து ஒரு சிலர் தமிழ் – முஸ்லிம் மக்களுக்கிடையில் இனக் கலவரம் ஒன்றை தூண்டுவதற்கு முயற்சித்துள்ளனர். அவர்களை இனம் கண்டு எமது மக்கள் விழிப்புடன் செயற்படவேண்டும்.

வேப்பங்குளம் பகுதியில் வியாபார நிலையம் தீப்பற்றியமை குறித்தும் ஒரு சாரார் வீண் வதந்திகளைப் பரப்பி வருகின்றனர்.

எதிர்வரும் காலங்கள் பண்டிகை காலங்களாக இருப்பதால் இளைஞர்கள் மதுபோதையில் மோட்டார் சைக்கிள்களை வேகமாக செலுத்துவதாலும், குழுக்களாக நின்று பொதுமக்களுக்கு இடையூறு செய்வதாலும் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இவ்வாறானவர்கள் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். உங்களின் பிள்ளைகளை நீங்களே திருத்திக்கொள்ள வேண்டும் – என்றார். (ஐ-100)

# தேர்தலுக்குப் பின்னர் அமைச்சரவை மாற்றம்

கொழும்பு, டிசெ.03

எதிர்வரும் உள்ளூராட்சிச் சபைத்தேர்தலின் பின்னர் அமைச்சரவையில் மாற்றங்களைச் செய்து செயற்படக்கூடிய திறமையானவர்களுக்குப் பதவிகளை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வருடம் வரவு – செலவுத் திட்டத்தில் அமைச்சுக்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை அபிவிருத்தித் திட்டங்களுக்கு பயன்படுத்தாமை மற்றும் முன்னேற்றங்களைக் காண்பிக்காமை ஆகிய காரணங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த அமைச்சரவை மாற்றம் மேற்கொள்ளப்பட உள்ளது.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலின் பின்னர் ஜனாதிபதியும் பிரதமரும் இந்த விடயம் சம்பந்தமாக கலந்துரையாட உள்ளதுடன் அப்போது அமைச்சரவை மாற்றம் குறித்து முடிவு செய்யப்படும்.

இதன் பின்னர் ஜனாதிபதி சுதந்திரக் கட்சியுடனும் பிரதமர் ஐக்கிய தேசியக் கட்சியுடனும் கலந்துரையாடி அமைச்சுப் பதவிகள் தொடர்பாகத் தீர்மானிக்க உள்ளதாகத் தகவல்கள் கூறுகின்றன.

அரசியல் ரீதியாக முன்னோக்கிச் செல்வது தொடர்பாக அரசுக்குள் பல்வேறு விதமான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

# நாகவிகாரையின் பெரஹரா இன்று

யாழ்ப்பாணம், டிசெ.03

புத்தபெருமானின் சிறப்பினையும் பௌத்த மத மரபினையும் யாழ்ப்பாண நகரில் எடுத்துக் கூறும் ஸ்ரீ நாகவிகாரையின் மார்கழி பெரஹரா ஊர்வலம் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

மங்களகரமான இந்த ஊர்வல உற்சவமானது நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் அனைத்து மத கலாசாரங்களுடனும் யானைகளின் அழகுமிகு அலங்காரத்துடனும் இன்று மாலை 7.00 மணிக்கு சிறப்பாக நடைபெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேவை

தனியார் தொலைத்தொடர்பு நிறுவனம் ஒன்றிற்கு அனுபவமுள்ள Marketing Executive ஆக பணியாற்ற அனுபவமுள்ள பணியாளர்கள் தேவை. தொடர்பு கொள்ளவும்.

மே/பா - காலைக்கதிர்,
30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

(சு/உ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## இலங்கைக்கு வருகின்றது ஐ.நா. விசேட செயலணிக் குழு

“ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் நிலைமாறு கால நீதி, யுத்தக் குற்றங்கள், பொறுப்புக்கூறல் போன்ற விடயங்கள் தொடர்பில் 2015 மார்ச்சில் நிறைவேற்றப்பட்டு, இரண்டு வருடங்களின் பின்னர் மீண்டும் மேலதிகமாக இரண்டு வருடங்கள் வழங்கப்பட்ட - இலங்கை தொடர்பான - தீர்மானம் சம்பந்தமாக இலங்கை அரசு இனிமேலும் வாளாவிருக்க முடியாது. தானும் சேர்ந்து நிறைவேற்றிய இந்தத் தீர்மான வாசகங்களை நிறைவு செய்வதில் இலங்கை இனிமேலும் காலத்தை இழுத்தடிக்குமானால் அதன் விளைவுகளை இலங்கை எதிர்கொண்டாக வேண்டி நேரிடும்.”

- இவ்வாறு ஐ.நா. மனித உரிமைகள் மட்டத்திலிருந்து எச்சரிக்கை வெளியாகி இருக்கின்றது.

நிலைமாறு கால நீதி தொடர்பான ஐ.நா. நிபுணரான பப்லோ டி கிறீவ், இந்த எச்சரிக்கையை விடுத்திருக்கின்றார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

நிலைமாறு கால நீதியை நிலைநாட்டல் மற்றும் பொறுப்புக்கூறல் விடயங்களில் இலங்கையின் போக்கை - செயற்பாட்டை - உன்னிப்பாகக் கவனிப்பதற்காக ஐ.நாவின் நிபுணர்கள் குழுக்கள் அடிக்கடி இலங்கை வருகின்றன. பல்வேறு இடங்களுக்கும் நேரில் சென்று, பல்வேறு தரப்புகளுடனும் பேசி, தேவையான தகவல்களை எல்லாம் திரட்டி வருகின்றன.

அந்த வரிசையிலே, நாளை ஓர் உயர்மட்ட ஐ.நா. குழு வருகின்றது. அது எதிர்வரும் 15 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருக்க உள்ளது.

சட்டவிரோதமான கைதுகள் தொடர்பான ஐ.நாவின் விசேட செயற்குழுவே நாளை வருகின்றது. ஆஸ்திரேலியரான லீ டூமி தலைமையிலான இக்குழுவில், மெக்ஸிக்கோவின் ஜோஸ் பூவீரா, லத்வியாவின் எலீனா ஸ்ரெனிரெட் ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

மனித உரிமைகள் மற்றும் பயங்கரவாத எதிர்ப்புச் செயற்பாடுகள் தொடர்பான ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் பென் எமர்ஸன் கடந்த ஜூலை மாதமும் -

உண்மை, நீதியை மேம்படுத்தல், மீள நிகழாமையை உறுதிப்படுத்தல் ஆகியன தொடர்பான ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் பப்லோ டி கிறீவ் கடந்த ஒக்ரோபரிலும் -

இலங்கைக்கு வருகைதந்து, நிலைமைகளை நேரில் ஆராய்ந்திருந்தனர். அவர்களும் இலங்கையில் பல இடங்களுக்கும் சென்று, பல திறத்தாருடனும் பேசியிருந்தனர்.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில், இலங்கை தானும் சேர்ந்து நிறைவேற்றிய தீர்மானத்தின் விடயங்களை நடைமுறைப்படுத்துவதில் மெத்தனமாக - பொறுப்பின்றி - நடந்துகொள்கின்றது என்று இந்த இருவருமே வெளிப்படையாகக் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

அதே வரிசையில், இப்போது - நாளை - வருகின்ற, சட்டவிரோத கைதுகள் தொடர்பான ஐ.நாவின் விசேட செயற்குழுவின் உறுப்பினர்களும் வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் பல பகுதிகளுக்கும் விஜயம் செய்வர் எனக் கூறப்படுகின்றது.

நாளை முதல் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை இலங்கையில் பல இடங்களுக்கும் செல்லும் அவர்கள், டிசெம்பர் 15 ஆம் திகதியன்றே கொழும்பில் ஊடகவியலாளர்களைச் சந்திப்பர். அப்போது தங்களது அவதானிப்புக்கள், கருத்துக்கள் பற்றிய விட யங்களை அவர்கள் கோடிகாட்டுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதுவும் கூடப் பெரும்பாலும், ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் நிறைவேற்றிய தீர்மான வாசகங்களை நிறைவுசெய்வதில் இலங்கை காட்டும் மெத்தனப் போக்கை விமர்சனம் செய்வதாகவே இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் நிலைமாறு கால நீதி தொடர்பாகவும், பொறுப்புக்கூறல் சம்பந்தமாகவும், இலங்கை அளித்த உறுதிமொழிகள் மிக முக்கியமானவை. காலம் ஓடிக்கொண்டிருக்கின்றது. ஆனால், இலங்கைத் தரப்போ பிரயோசனமான எந்த நடவடிக்கையையும் இதுவரை எடுத்ததாக இல்லை. அதை ஐ.நா. தரப்பும் சர்வதேச சமூகமும் வெறுமனே பார்த்துக்கொண்டிருக்கப் போவதில்லை. சர்வதேச சமூகத்தின் பொறுமையும் எல்லையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது.

இனி, ஐ.நா. தரப்பிலிருந்தும், சர்வதேச சமூகத்திலிருந்தும் இலங்கைக்கு எதிரான கண்டன அம்புகள் நேரடியாக - வெளிப்படையாக - வரத் தொடங்கும் என எதிர்பார்க்கலாம்.

காணாமலாக்கப்பட்ட தங்கள் உறவுகளைத் தேடிக் கண்டுபிடித்துத் தருமாறு கோரி கடந்த முந்நூறு நாள்களுக்கு மேலாகத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் பொதுமக்கள், தங்களின் உறவுகள் எங்கோ ஓரிடத்தில் இன்னும் மறைவாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கலாம் எனத் திடமாக நம்புகின்றனர்.

சட்டவிரோதமான கைதுகள் தொடர்பான ஐ.நா. செயலணிக் குழுவே நாளை இலங்கை வருகின்றமையால், அந்தக் குழு ஊடாகக் காணாமற்போயிருக்கும் தங்களின் உறவுகளின் நிலைமை குறித்து சிறு துரும்புத் தகவலேனும் கிடைக்கலாம் என அந்த உறவுகள் நம்புகின்றன. அந்தச் செயலணிக் குழுவும் பல தரப்பினருடனும் பேச்சு நடத்தவிருக்கின்றமையாலும், பல்வேறு தடுப்பு முகாம்களுக்குச் செயலணிக் குழு விஜயம் செய்கின்றது எனக் கூறப்படுவதாலும், இந்த விடயத்தில் உண்மை நிலைவரத்தை - யதார்த்த நிலைமையை - இந்தச் செயலணிக் குழு கண்டுபிடிக்க முடியும் எனக் கருதப்படுகின்றது. அதனால், இக்குழுவின் வருகை இந்த வேளையில் மிக முக்கியமானது எனக் கருதப்படுகின்றது.

# அரசியலில் பெண்கள் பங்களிப்பை உறுதிப்படுத்த யாழில் செயற்றிட்டம்



யாழ்ப்பாணம், டிசெ.03

தேர்தலில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழித்து பெண்களின் பங்களிப்பை அரசியலில் உறுதிப்படுத்தும் விதமாக வாக்காளர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் தேசிய வேலைத்திட்டம் நேற்று யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டது.

’அவளை தேர்ந்தெடுப்போம் வன்முறையை ஒழிப்போம்’ எனும் தொனிப்பொருளில் பால்நிலை வன்முறைக்கெதிரான பதினாறு நாள் பரப்புரைச் செயற்றிட்டத்தின் கீழ் இந்த தேர்தல் விழிப்புணர்வுச் செயற்பாடு யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் நேற்று இடம்பெற்றது.

அரசியலில் பெண்களுக்கு சமமான வாய்ப்புக்களை வழங்குவதற்கும் தேர்தலில் போட்டியிடும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிக்கும் பொருட்டு இந்த விழிப்புணர்வுச் செயற்பாடு நாடு முழுவதும் பால்நிலை வன்முறைக்கெதிரான அரசகுழுமத்தின் ஒழுங்கமைப்பில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தித் தேர்தலில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்கும் விதமாக துண்டறிக்கைகள் இதன்போது விநியோகிக்கப்பட்டன. அத்துடன் கையெழுத்துப்பெறும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன.

யாழ். சமூக செயற்பாட்டு மையத்தின் தலைவர் சுகிர்தராஜன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் ஏ.அகிலன் உள்ளிட்ட பெரும் எண்ணிக்கையிலானவர்கள் கலந்து கொண்டனர். (ஐ-7)

# நாட்டில் 52 வீதமான பெண்கள் ஆயினும் அரசியலில் 5 வீதமே

## உதவித் தேர்தல் ஆணையாளர் அகிலன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், டிசெ.03

நாட்டில் பெண்களின் எண்ணிக்கை 52 வீதமென அதிகமாக இருந்தாலும், அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் 5 விதமாகவே காணப்படுகின்றது எனத் தெரிவித்துள்ள யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் அகிலன், அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

இதற்கமைய நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலில் 25 வீதம் பெண்களின் பிரதிநிதித்துவம் இருப்பதை அரசியல் கட்சிகள் உறுதிப்படுத்த வேண்டும் எனவும் அவர் கூறினார்.

தேசிய பால்நிலைக்கு எதிரான குழுவுடன் சமூக செயற்பாட்டு மையம் இணைந்து ’அவளைத் தேர்ந்தெடுப்போம் வன்முறையை ஒழிப்போம்’ எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வுப் போராட்டம் ஒன்று நேற்று யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இந்த நாட்டில் பெண்களின் எண்ணிக்கை 52 வீதமாக இருக்கின்றபோதும் நாடாளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் 5 வீதமாக மாத்திரமே காணப்படுகின்றது.

அரசியலில் பெண்களின் பிரதித்துவம் என்பது மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே உள்ளது. நடைபெறவிருக்கும் உள்ளூராட்சிச் சபைகளில் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்படுவதற்குரிய நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக நடைபெற உள்ள உள்ளூராட்சித் தேர்லில் ஒவ்வொரு சபைகளிலும் 25 வீதம் பெண்கள் பிரதிநிதித்துவம் இருக்கவேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்துச் சபை அமைக்க முடியாது.

அதாவது தேர்தல் வேட்பு மனுப் பத்திரத்தில் பெண்களை இணைக்க வேண்டும். இல்லாவிட்டால் அதனைத் தாக்கல் செய்ய முடியாது. ஆகவே இதனை வெற்றிகரமாகச் செயற்படுத்தக் கட்சியின் செயலாளர்கள், தலைவர்கள் ஒத்துழைக்க வேண்டும்.

அரசியலில் தீர்மானம் எடுப்பதில் பெண்களின் பங்கு குறைவாக இருக்கிறது. அத்தோடு, பெண்களுக்கு எதிராக அவதூறு பிரசாரங்களும் மேற்கொள்ளப்படுகின்றன. இத்தகைய பிரசாரங்கள் எல்லாம் தடுத்து நிறுத்தப்படவேண்டும். இவ்வாறு பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நிறுத்தப்பட்டு, பெண்கள் அரசியலில் அதிகளவில் ஈடுபட முன்வரவேண்டும். ஆகவே இதற்கு அனைத்துத் தரப்பினர்களும் ஒத்துழைக்க வேண்டும் – என்றார். (ஐ-7)

# பரிசளிப்பு விழா

வட்டுக்கோட்டை, டிசெ. 03

வட்டு. மேற்கு அ.மி.த.க. பாடசாலை பரிசளிப்பு விழா, நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு, அதிபர் திருமதி ஜெ.தருமராசா தலைமையில் நடைபெறும்.


நிகழ்வில் முதன்மை விருந்தினராக சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் சூ. நோபேட் உதயகுமாரும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். கரித்தாஸ் நிர்வாக உத்தியோகத்தர் ஆர்.ஏ.திலகரட்ணமும் வலிகாமம் வலய ஆரம்பக் கல்வி சேவைக்கால ஆலோசகர் கே. சிவகுமாரும், கௌரவ விருந்தினராக கிராம அலுவலர் சி.சிவகுமாரும் கலந்து கொள்வர்.(இ)

பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்புச் செயற்பாடு
JSAC
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
ஊடகங்களே உங்கள் ஊதியத்திற்காய் பெண்களை ஊனமாக்காமல் ஊர் புகழ்ந்திட உத்தமமான கருத்துக்களால் ஊக்கம் கொடுத்திடுவீர்.
16
2017
யாழ். சமூக செயற்பாட்டு மையம்

## நாளை

04.12.2017
திங்கட்கிழமை
நட்சத்திரம் : ரோகிணி மு.ப. 8.34 வரை
திதி : பிரதமை மு.இ. 8.15 வரை
சுபநேரம் :12.15 – 1.45 வரை
இராகுகாலம்: 7.45 – 9.15 வரை

# 'சாகர்' புயல் செவ்வாயன்று வடக்கு - கிழக்கைத் தாக்கும்?



கொழும்பு, டிசெ. 03

அந்தமான் தீவுப் பகுதியில் உருவாகியுள்ள காற்றமுத்தம், தீவிரமடைந்து வருவதால், இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்கு அடுத்த வாரத்தில் கடும் மழை பெய்வதற்குச் சாத்தியங்கள் இருக்கின்றன எனஎச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்கள வட்டாரங்கள் நேற்று முன்தினம் இரவு தகவல் வெளியிடுகையில், இலங்கைக்குக்கிழக்கே, அந்தமான் தீவுப் பகுதியில் உருவாகியுள்ள காற்றமுத்தத்தாழ்வுப் பகுதியை அவதானித்து வருகிறோம்.

ஆழ்ந்த காற்றமுத்தமாக மாறி வடக்கு-கிழக்குப் பகுதிகளில் பாதிப்புகளை ஏற்படுத்தலாம். தற்போது, மழை பெய்வதற்கான சாத்தியங்கள் குறைவாகவே இருந்தாலும், 60 கி.மீ வேகத்தில் காற்று வீசக் கூடும்.

அந்தமான் கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றமுத்தம், புயலாக மாறுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. அதுபற்றி அடுத்த சில நாள்களில்தான் கூற முடியும் என்று கூறியுள்ளன.

அதேவேளை, அந்தமான் கடலில் உருவாகியுள்ள காற்றமுத்தத் தாழ்வுப்பகுதி, புயலாக மாறி இலங்கையின் வடக்குப் பகுதியில் எதிர்வரும் 5ஆம் திகதி தாக்கக் கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களத்தை மேற்கோள்காட்டும் மற்றொரு செய்தி கூறுகிறது.

இது குறித்து அடுத்த இரண்டு நாள்களின் பின்னரே சரியான கணிப்புகளைச் செய்ய முடியும் என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

அதேவேளை, ஒக்கி புயலின் தாக்கத்தால் இலங்கையில் தொடர்ந்து கொட்டி வந்த மழை, குறையும் என்றும், வடக்கு, கிழக்கு, ஊவா, தென், மேல், சப்ரகமுவ மாகாணங்களில் சில இடங்களில் மாத்திரம், 100 மி.மீ வரையான மழை பெய்வதற்கு சாத்தியங்கள் உள்ளன எனவும், வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரி ஒருவர் கூறினார்.

இதனிடையே, வடக்கு, கிழக்கில் அடுத்த வாரம் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய புயலைக் கண்காணித்து வருவதாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

வடக்கு, கிழக்கிலும் இந்தியாவிலும் கடும் மழையும் காற்றும் எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் இடர் முகாமைத்துவப் பிரிவு கூறியுள்ளது.

இதற்கிடையே அந்தமான் கடல் பகுதியில் உருவாகியுள்ள காற்றமுத்தம், புயலாகத் தீவிரம் பெற்றால், அதற்குச் சாகர் என்று பெயரிடப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# வெளிநாட்டில் பணிபுரிவோரின் பிள்ளைகள் நேற்று கௌரவிப்பு



யாழ்ப்பாணம், டிசெ.03

நடப்பு ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த புலம்பெயர் நாடுகளில் பணியாற்றுவோரின் பிள்ளைகளைக் கௌரவிக்கும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சால் யாழ்ப்பாணம் ஞானம்ஸ் ஹோட்டலில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மகளிர் விவகாரங்கள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக அதிகாரிகள் மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் பங்கேற்றனர்.

(ஐ)

# நாளை மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை –

**வவுனியா பிரதேசத்தில்** - பம்பைமடு, கற்பகபுரம், பத்தினியார்மகிழங்குளம், சமயபுரம், மறக்கறம்பளை, மணிபுரம், சாஸ்திரிகூழாங்குளம், சுந்தரபுரம், ஈச்சங்குளம், கற்குளம், தரணிக்குளம், கருவேப்பங்குளம், கிடாச்சூரி, மறவன்குளம், ஈஸ்வரிபுரம், கல்மடு, பூம்புகார், காக்கையன் குளம், கோவில் புளியங்குளம், இரணையிலுப்பைக்குளம், பரசங்குளம், சின்னவலயங்கட்டு, நொதேர்ண் பாம், ஆசிரியர் தொழில்நுட்பக் கல்லூரி, வரன் அரிசி ஆலை ஆகிய இடங்களிலும் –

**மன்னார் பிரதேசத்தில்** - கங்காணிக் குளம், கபீப் சிற்றி, முள்ளிக்குளம், கீரிசுட்டான் ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் செல்வி அனுஷா செல்வராசா அறிவித்துள்ளார். (இ

# ஜனாதிபதியின் சகோதரரை கொலை செய்தவருக்குச் சிறை

கொழும்பு, டிசெ.03

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சகோதரரைப் படுகொலை செய்த குற்றவாளிக்கு 18ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் இஷான் லக்மால் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டு, அவருக்கு 18 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கொலை செய்யப்பட்ட பிரியந்த சிறிசேனவின் மனைவிக்கு 10 இலட்சம் ரூபா நட்டாடும் நீதிமன்றத்துக்கு அபராதத் தொகையாக 20 ஆயிரம் ரூபாவும் செலுத்துமாறும் உத்தரவிடப்பட்டது.

நட்டஈட்டுத் தொகையைச் செலுத்தத் தவறினால் மேலதிகமாக இரண்டு வருடச் சிறைத் தண்டனையும், அபராதத் தொகையை செலுத்தத் தவறும் பட்சத்தில் மேலதிகமாக ஆறு மாத சிறைத்தண்டனையும் அனுபவிக்க நேரிடும் என்றும் நீதிபதி நிமல் ரணவீர தனது தீர்ப்பில் தெரிவித்தார்.

கடந்த 2015ஆம் ஆண்டு மார்ச்மாதம் 26ஆம்திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சகோதரர் பிரியந்த சிறிசேன படுகொலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# முப்பது வருடங்களுக்கு மேலாக கவனிப்பாரற்று இருட்டுமடு வீதி!



முல்லைத்தீவு, டிசெ.03

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் இருட்டுமடு–உடையார்கட்டு பிரதான வீதி மக்கள் பாவனைக்கு உதவாத நிலையில் 30 வருடங்களுக்கு மேல் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றது.

பாடசாலைமாணவர்கள், அரச அதிகாரிகள், விவசாயிகள், சாதாரண பொதுமக்கள் என நாளாந்தம் பல்வேறு தேவைக்காக மக்கள் பயன்படுத்தும் இந்த வீதியைப் பிரதேச அரசியல்வாதிகளோ, அதிகாரிகளோ கவனத்தில் கொள்ளவில்லை என மக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

இதனை உடனடியாகக் கவனத்தில் எடுத்து வீதியைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு ரூபா 9.5 லட்சம் பெறுமதியான உதவி

யாழ்ப்பணம், டிசெ 03

வடக்கு மாகாண சபையின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரனால் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 19 பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு ஒன்பதரை லட்சம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.



மருதங்கேணிப் பிரதேச செயலக வளாகத்தில் கடந்த செவ்வாய்கிழமை முற்பகல் 10 மணியளவில் மருதங்கேணிப் பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய அனந்தி சசிதரன் –

வடக்கு மாகாணத்துக்குட்பட்டு மாவட்ட ரீதியாக மகளிர் விவகார அமைச்சின் கீழான வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம். அதற்கு மருதங்கேணிப் பிரதேச செயலரின் ஒத்துழைப்பு குறிப்பிட்டுச் சொல்லும் வகையில் அமைந்துள்ளது.

பிரதேச செயலாளர்களுக்குத்தான் கிராமமட்ட கட்டமைப்பும் தொடர்பாடலும் இருக்கின்றது. அவர்களது ஒத்துழைப்பும் ஆதரவும் இருந்தால்தான் மக்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்யமுடியும். வடக்கு மாகாணத்தைப் புறக்கணித்து மத்திய அரசு நேரடியாக உதவிகளைச் செய்து வருகின்றது. தேசியநல்லிணக்கத்திற்கும் ஒருமைப்பாட்டிற்குமான அமைச்சு மற்றும் புனர்வாழ்வு அமைச்சு ஊடாக மத்திய அரசு உதவித் திட்டங்களை வழங்கி வருவதானது எங்களையும் மக்களையும் அந்நியப்படுத்தும் முயற்சியாகும்.

அவ்வாறு வழங்கப்படும் உதவிகள் சரியான முறையில் மக்களுக்கு கிடைத்தால் கூடப் பரவாயில்லை. மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் செயற்பட்டு வரும் நிர்வாகக் கட்டமைப்புகளின் ஊடாக அவ்வாறு மேற்கொள்ளப்படும் உதவிகள் உண்மையில் பாதிக்கப்பட்டவர்களுக்குக்கிடைப்பதில்லை என்பதனை எமக்கு கிடைக்கும் முறைப்பாடுகள் மூலம் அறியமுடிகின்றது. தமது தேசியக் கட்சிகளின் அரசியல் இலாபத்துக்காகவே இவ்வாறான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது– என்றார்.

# பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுத்த ராணுவச் சிப்பாய் கைது

கிளிநொச்சி, டிசெ.03

கிளிநொச்சி முழங்காவில் பகுதியைச்சேர்ந்த பெண் ஒருவர் பஸ்ஸில்பயணித்த போது, பாலியல் ரீதியாக தொந்தரவு செய்தார் என்ற குற்றச்சாட்டில் இராணுவச் சிப்பாய் ஒருவரை நாச்சிக்குடா பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்தனர்.

பெண் ஒருவர் பஸ்ஸில் பயணம் செய்துள்ளார். அதே பஸ்ஸில் பயணம் செய்த 35 வயதுடைய இராணுவச் சிப்பாய் தனது அந்தரங்க உறுப்பை 41 வயதுடைய பெண்ணுக்குக் காட்டினார். அத்துடன் ஆபாசச்சைகைகளையும் வெளியிட்டுப் பாலியல் தொந்தரவு கொடுத்துள்ளார்.

அது தொடர்பில் பெண் நாச்சிக்குடா பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை முறைப்பாடு செய்தார். முறைப்பாட்டின்பிரகாரம் இராணுவச் சிப்பாயைக் கைது செய்த பொலிஸார் அவரிடம் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir







தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகர் சமூக ஜோதி வாமதேவா தியாகேந்திரனின் 66 ஆவது அகவையை முன்னிட்டு நேற்றுக் காலை பல்வேறு நற்பணிகளை அவரது மகன் அர்ஜுன் மற்றும் வாழ்நாள் பேராசிரியர் பாலசுந்தரம் பிள்ளையும் கல்வித் திணைக்கள அதிகாரிகள் பலரும் வழங்கினர். நிகழ்வின் சில பதிவுகள்....

(இ-19)

















நவாலி தெற்கு முதியோர் சங்கத்துக்கு வட மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரனால் கதிரைகள் வழங்கப்பட்டுள்ளன.
2017 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நிதியில் இருந்து இந்தக் கதிரைகள் வழங்கப்பட்டன. (இ)





2017ஆம் ஆண்டுக்கான மீலாத் விழா யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 18,19 ஆம் திகதிகளில் நடைபெறும். அதற்கான முன் ஏற்பாடுகளைக் கவனிக்கும் பொருட்டு முஸ்லிம் சமய கலாசாரத்திணைக்களத்தின் பணிப்பாளர்கள் எம். மலிக், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் எம். மஸ்தான், யாழ். ஒஸ்மானியக் கல்லூரிக்கு கடந்த 30ஆம் திகதி மாலை வருகை தந்து ஆலோசனை நடத்தினார்கள்.

(இ-19)

# FIFA உலகக் கிண்ண குழு நிலை அணிகள் அறிவிப்பு




## ரஷ்யாவின் 11 நகரங்களில் அடுத்தடுத்து 64 போட்டிகள்




ரஷ்யாவில் அடுத்த ஆண்டு நடைபெறும் FIFA உலகக் கிண்ண கால்பந்து போட்டியில் 2010 உலக சம்பியன் ஸ்பெயின் அணியும் ஐரோப்பிய சம்பியனான கிறிஸ்டியானோ ரொனால்டோவின் போர்த்துக்கல் அணியும் ஒரே குழுவில் இடம்பிடித்திருப்பதோடு, இங்கிலாந்து அணி பலம் மிக்க பெல்ஜியத்தை எதிர்கொள்ளவுள்ளது.

2018 உலகக் கிண்ணத்தில் விளையாடத் தேர்வாகி இருக்கும் 32 அணிகளையும் எட்டு குழுக்களாகப் பிரிக்கும் வண்ணமயமான நிகழ்வு ரஷ்யாவில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிடிமை நடைபெற்றது. இதில் நெய்மாரின் பிரேஸில் அணி இருக்கும் குழுவில் சுவிற்ஸர்லாந்து, கொஸ்டரிக்கா மற்றும் செர்பிய அணிகள் இடம்பெற்றுள்ளன. பிரேஸில் ஆறாவது உலகக்கிண்ணத்தை வெல்லும் நோக்குடனேயே களமிறங்கவுள்ளது.

நடப்பு சம்பியன் ஜேர்மனி அணி மெக்சிக்கோ, சுவீடன் மற்றும் தென் கொரிய அணிகள் இருக்கும் குழுவில் இடம்பிடித்துள்ளது. ஜோசிம் லொவேஸ் பயிற்சியில் ஆடும் ஜேர்மனி 1962இல் பிரேஸில் நிகழ்த்திய சாதனைக்குப் பின் தொடர்ச்சியாக இரண்டாவது முறை உலகக் கிண்ணத்தைக் கைப்பற்ற எதிர்பார்த்துள்ளது.

எவ்வாறாயினும் கடந்த இரு உலகக் கிண்ண போட்டிகளிலும் நடப்பு சம்பியன்கள் முதல் சுற்றிலேயே வெளியேறின. 2010இல் நடப்பு சம்பியன் இத்தாலி மற்றும் 2014 நடப்புச் சம்பியன் ஸ்பெயின் அடுத்த சுற்றுக்கு முன்னேறவில்லை.

உலகக் கிண்ணத்துக்குத் தகுதி பெறவே பெரும் போராட்டம் நிகழ்த்திய லியோனல் மெஸ்ஸியின் ஆர்ஜென்ரீன அணி, முதல் முறை உலகக் கிண்ணத்தில் ஆடவிருக்கும் ஐஸ்லாந்து, அதேபோன்று அபாய அணியாகப் பார்க்கப்படும் குரோஷியா மற்றும் நைஜீரிய அணிகள் இருக்கும் குழுவில் இணைக்கப்பட்டுள்ளன.

### 11 நகரங்களில் 64 போட்டிகள்

கிரெம்ளின் மாளிகையில் நடைபெற்ற குழுக்களைப் பிரிக்கும் நிகழ்வு முந்தைய நிகழ்வுகள் போலன்று மிக விரைவாக முடிவுற்றது. ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் மற்றும் FIFA தலைவர் கியன்னி இன்பன்டினோவின் உரைகளுக்கு பின் நான்கு சாடிகளிலும் வைக்கப்பட்ட 32 அணிகளின் பெயர்களை குலுக்கல் முறையில் தேர்வுசெய்யும் நிகழ்வு விரைவாக ஆரம்பிக்கப்பட்டது.

இந்தக் குலுக்கல் செயல்முறைக்கு, ஆர்ஜென்ரீனாவின் முன்னாள் கால்பந்து ஜாம்பவான் டியாகோ மரடோனா மற்றும் பிரான்ஸின் 1998ஆம் ஆண்டு அணித் தலைவர் லோரென்ட் ப்ளான்க் உதவியாகச் செயற்பட்டனர்.

போட்டியை நடத்தும் ரஷ்யாவின் முதல் சுற்று எதிர் அணிகள் தேர்வாவதற்கு சற்று முன்னர் உரையாற்றிய ரஷ்ய அதிபர் புடின் – அதிகம் போராடும் திறன் கொண்ட அணியே அதிகம் விரும்பப்படும்; கிண்ணத்தை வெல்லும். வெற்றி பெறுவதற்கு அனைத்து அணிகளுக்கும் நான் வாழ்த்துத் தெரிவிப்பதோடு விசுவாசமான அனைத்து ரசிகர்களும் ரஷ்யாவுக்கு வந்து 2018 உலகக் கிண்ணத்தைக் கண்டுகளிக்க நான் அழைப்பு விடுக்கிறேன் என்று இந்நிகழ்வில் குறிப்பிட்டார்.

### இறுதிப் போட்டி தலைநகர் மொஸ்கோவில்

2018, ஜுன் 14 ஆம் திகதி தொடக்கம் ஒரு மாதம் நீடிக்கும் உலகக் கிண்ண போட்டிகள் ரஷ்யாவின் 11 நகரங்களில் நடைபெறவுள்ளன. நாட்டின் மேற்கில் கலிங்கார்ட் தொடக்கம் கிழக்கில் 2,500 கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் எகடெரின்போர்க் நகர் வரை போட்டிகள் இடம்பெறும்.

ஒட்டுமொத்தமாக 64 போட்டிகள் நடைபெறவிருக்கின்றன. இதன் இறுதிப் போட்டி தலைநகர் மொஸ்கோவின் லுஸ்னிக்கி அரங்கில் ஜுலை 15ஆம் திகதி நடைபெறும்.

### முதல் போட்டியில் ரஷ்யா-சவூதி

போட்டியை நடத்தும் அணி என்பதால் இம்முறை உலகக் கிண்ணத்திற்கு ரஷ்யா தகுதிகாண் போட்டி இன்றியே தேர்வானது. எனினும், தாம் ஸ்பெயினை எதிர்கொள்ள விரும்பவில்லை என்று ரஷ்ய அணியின் பயிற்சியாளர் ஸ்டெனிஸ்லேவ் செர்சசோவ் குறிப்பிட்டிருந்தார்.

அவர் எதிர்பார்த்தமை போல் ஸ்பெயின் இருக்கும் குழுவில் ரஷ்யா இடம்பெறாதபோதும் அந்த அணி சவால் கொண்ட A குழுவிலேயே இடம்பெற்றுள்ளது. அந்தக் குழுவில் பார்சிலோனாவின் லுயிஸ் வச்ரேஸ் தலைமையிலான உருகுவே, லிவர்பூல் முன்கள வீரர் மொஹமது சலாஹ்வின் எகிப்து அணிகள் இடம்பெற்றுள்ளன. ஆசிய மண்டலத்தில் இருந்து தேர்வான சவூதி அரேபியாவும் A குழுவில் உள்ளது.

மொஸ்கோ நகரில் உலகக் கிண்ணத்தை ஆரம்பித்து வைக்கும் முதல் போட்டியில் ஜுன் 14 ஆம் திகதி ரஷ்யா மற்றும் சவூதி அரேபியா அணிகள் பலப்பரீட்சை நடத்தும்.

எனவே, உலகக் கிண்ண ஆரம்ப போட்டி ஒன்றில் ஆசிய அணி பங்கேற்பது முதல்முறையாக அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலகக் கிண்ணத்தை நடத்தும் நாடு ஒரே ஒரு தடவை மாத்திரமே இரண்டாவது சுற்றுக்கு முன்னேறாமல் இருந்துள்ளது. 2010 உலகக் கிண்ணத்தை நடத்திய தென்னாபிரிக்கா குழு நிலை போட்டிகளோடு வெளியேறியது. சுமார் 30வீதமான உலகக் கிண்ணத்தை, போட்டியை நடத்திய நாடே வென்றமை குறிப்பிடத் தக்கது.

B குழுவில் ஸ்பெயின் மற்றும் போர்த்துக்கல் என்ற பலம்மிக்க போட்டியாளர்களுடன் மொரோக்கோ மற்றும் ஈரானும் இடம்பெற்றுள்ளன. ஈரான் அணி ஆசிய மண்டல உலகக் கிண்ணத் தகுதிகாண் போட்டிகளில் 10 போட்டிகளில் தோல்வியுறாத அணியாகவே உலகக் கிண்ணத்துக்கு முன்னேறியது. அதேபோன்று ஆபிரிக்க மண்டலத்தில் பலம் கொண்ட ஐவரிகோஸ்ட் அணியை பின்தள்ளியே மொரோக்கோ உலகக் கிண்ணத்துக்கு முன்னேறியது.

வலுவான முன்கள வீரர்களான அன்டொயினே கிரியஸ்மான் மற்றும் பதின்ம வயது வீரர் கைலியன் ம்பப்பே ஆகியோரைக் கொண்டிருக்கும் பிரான்ஸ் C குழுவில் ஆஸ்திரியா, பெரு மற்றும் டென்மார்க் அணிகளை எதிர்கொள்ளும்.

ஆர்ஜென்டீனா மோதும் D குழுவில் அண்மைக் காலமாக சோபிக்கும் இரு ஐரோப்பிய அணிகளான ஐஸ்லாந்து, குரோஷியா ஆகியன இடம்பெற்றிருப்பதோடு எதிர்வுகூற முடியாத அணியாகக் கருதப்படும் நைஜீரியாவும் இந்தக் குழுவிலேயே உள்ளது.

இதில் H குழு குறிப்பிடத்தக்கதாகும். இந்தக் குழுவில் முன்னணி அணியாக போலந்துடன் ஆபிரிக்காவின் செனகல், தென் அமெரிக்காவின் கொலம்பியா மற்றும் ஆசியாவின் பலம்கொண்ட அணியான ஜப்பான் ஆகியன இடம்பெற்றுள்ளன. எனினும், கால்பந்து அரங்கில் மிகப் பெரிய கிண்ணங்களை வெல்லாத அணிகளைக் கொண்ட குழுவாகவே இது உள்ளது.

உலகக் கிண்ண குழுநிலை போட்டிகள் முடிவில் ஒவ்வொரு குழுவிலும் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள், நொக் அவுட் சுற்றான (knockout) 16 அணிகள் மோதும் சுற்றுக்குத் தேர்வாகும். ●

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?

03.12.2017 – 09.12.2017

**சந்திராஷ்டம நாள்** - சித்திரை 3 ஆம் 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1ஆம், 2ஆம், 3ஆம் பாதங்களில் பிறந்தோர் சுப கருமங்களில் ஈடுபடுவதை தவிர்க்கவும்.

**கணிப்பு:** 'ஜோதிடமணி' பிரம்ம ஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா (ஜே.பி.)

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பிவருடம், கார்த்திகைத் திங்கள் 18ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை. பூரணைத்திதி இரவு 9.17வரை. பின்னர் பிரதமை. நட்சத்திரம் கார்த்திகை காலை 9.21வரை. பின்னர் ரோகிணி சித்தயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - மாலை4.20 மணிமுதல் 5.46 மணிவரை
**சுபநேரம்** - பகல் 9.19 மணிமுதல் 10.48 மணிவரை
**திவசம் செய்ய வேண்டிய திதி**- கார்த்திகை மாத பூரணை
**பிறந்தநட்சத்திர வழிபாடு**- ரோகிணி

## மேஷம்:

யோகமான வாரம். பணபலம் அதிகரிக்கும். குடும்ப உறவு நன்றாக இருக்கும். புதிய முயற்சிகள் நல்வரவேற்பைத் தரும். அரசு வழியால் வீடு, காணி என்பன சிலருக்குக் கிடைக்கும். மாணவர்கள் உயர் கல்வியில் மேன்மை அடைவார்கள்.

பணிபுரியும் இடங்களில் வந்த நெருக்கடிகள் நீங்கும். உயர் அதிகாரிகளின் நன்மதிப்பால் உயர் பதவி அடைவார்கள். விரும்பிய மண வாழ்வு அமையும். வாகனயோகம் உண்டாகும்.

## ரிஷபம்:

மகிழ்ச்சியான வாரம். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். எண்ணிய கருமங்கள் துல்லியமாக நிறைவேறும். வியாபாரம் சுறுசுறுப்பாக நடக்கும்.

உத்தியோகத்தர்களுக்கு விரும்பிய இடமாற்றமும் பதவி உயர்வும் ஊதிய உயர்வும் கிடைக்கும்.

பிரிந்த உறவுகள் மீண்டும் ஒன்று சேரும் வாய்ப்பு உண்டாகும். வேலை தேடித் திரிவோருக்கு வேலை கிடைக்கும்.

## மிதுனம்:

சலனம் மிகுந்த வாரம். பணவரவு குறையும். வாழ்க்கைச் செலவுகளைச் சமாளிக்க முடியாமல் தடுமாற்றம் உண்டாகும். கடன்படநேரும். குடும்பத்தில் ஒற்றுமை உணர்வு குறையும். வியாபாரத்தில் பெரிய நட்டம் உண்டாகும். தொழிலில் நிறையபாடுபடவேண்டும். உத்தியோகத்தில் கடின உழைப்பும் அலைச்சலும் அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வியில் குழப்பநிலை உண்டாகும். பெண்களுக்கு விருந்தினர் வரவால் ஓய்வில்லாத வேலை இருக்கும். கொடுக்கல் வாங்கலில் சிக்கல்கள் உண்டாகும்.

## கடகம்:

ஆக்கபூர்வமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் அன்னியோன்யம் அதிகரிக்கும். வியாபாரம் பன்மடங்கு பெருகும். உறவினர்கள் நண்பர்களின் சகாயம் கிடைக்கும். உத்தியோகத்தில் திறமை வெளிப்பட்டு அதிகாரிகள் நன்மதிப்பையும் சலுகைகளையும் பெறுவார்கள்.

அரச காரியங்கள் அனுகூலமாக அமையும். பிரிந்திருந்த குடும்பம் மீண்டும் ஒன்று சேரும். வாய்ப்புண்டாகும். பிள்ளைகளால் பெருமையும் மகிழ்ச்சியும் உண்டாகும்.

## சிம்மம்:

மத்திமமான வாரம். வரவும் செலவும் சரி சமமாக இருக்கும். எண்ணிய காரியங்கள் தடைப்படும். குடும்ப உறவு சீராக இருக்கும். தேக குறைவும் உண்டாகும். வைத்திய செலவும் உண்டாகும். வெளிநாட்டு வரவு உண்டாகும். நண்பர்கள் வீட்டு சுபகாரியங்களால் செலவு உண்டாகும். திருமணப் பேச்சுகள் இழுபறிநிலையில் இருக்கும். பயணத்தின் போது உடைமைப் பொருள்கள் மிக அவதானமாக இருக்க வேண்டும். கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை.

## கன்னி:

இனிமையான வாரம். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் இனிமை கொலுவிருக்கும். நினைத்தவை நிறைவேறும். சிலருக்கு அன்னியநாட்டில் தொழில் பயிற்சி நடைபெறும்.

உறவினர்கள், நண்பர்களுடன் நல்லிணக்கம் உண்டாகும். சிலர் குடும்பத்தோடு புண்ணிய யாத்திரைகள் மேற்கொள்வார்கள். பெரிய ஞானிகளின் ஆசிகளும் கிடைக்கும். சகோதர வழியால் நன்மை உண்டாகும்.

## துலாம்:

அலைச்சல் மிகுந்த வாரம். சுய தொழிலில் அலைச்சல்கள் அதிகரிக்கும். சிலர் அரச வேலை தேடி த்திரிவார்கள். சிலர் உடல் நலக்குறைவால் மருத்துவ உதவியை நாடுவார்கள்.

தொழிலாளர்கள் தொழில் தேடித்திரிவார்கள். பாடசாலை முடிந்த மாணவர்கள் சிறந்த கல்வி தேடி அலைவார்கள்.

சிலர் வெளிநாடு செல்லும் ஏஜன்சியை நாடுவார்கள். சிலர் தொழிலில் இடமாற்றத்தால் குடியிருக்க வாடகை வீடு தேடித் திரிவார்கள்.

## விருச்சிகம்:

சமபலன் உள்ள வாரம். பொருளாதாரம் சுமாராக இருக்கும். வரவுக்கு மீறிய செலவு உண்டாகும். தேக சுகம், குடும்ப சுகம் ஓரளவு சீராக இருக்கும். செய் தொழிலில் ஓரளவு முன்னேற்றம் காணப்படும்.

வியாபாரத்தொழில் ஏற்றமும் இறக்கமுமாக இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு வேலைச்சுமை பொறுப்பு அதிகரிக்கும். சிலர் வீட்டைத் திருத்தி புதுப்பிப்பார்கள். உறவினர் வீட்டுச் சுப நிகழ்ச்சிகளும் உண்டாகும். சுபசெலவுகளும் அதிகரிக்கும்.

## தனுசு:

ஆக்கபூர்வமான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்ப உறவில் அன்னியோன்யம் அதிகரிக்கும். பணிபுரியும் இடங்களில் வசை பாடியவர்களும் இணக்கமாக இருப்பார்கள்.

அதிகாரிகளின் நன்மதிப்பும் பாராட்டும் கிடைக்கும். பெண்களின் ஆசைகள் நிறைவேறும். மாணவர்கள் கல்வியில் ஆக்கபூர்வமடைவார்கள்.

வியாபாரத்தில் வெளிநாட்டுத் தொடர்புகளால் வருமானம் அதிகரிக்கும். கொடுக்கல் வாங்கலில் நாணயம் உண்டாகும்.

## மகரம்:

இன்பமான வாரம். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்பத்தில் சந்தோசம் இதுவரை பிரிந்திருந்த உறவினர்கள் மீண்டும் ஒன்று சேர்வார்கள்.

பெண்களுக்கு மணவாழ்வு கைகூடிவரும். பூர்வீக சொத்துக்கள் தடையின்றி வந்துசேரும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டாகும். எடுத்த காரியங்கள் வெற்றி அடையும்.

மாணவர்களுக்கு உயர்கல்வி நிமித்தம் வெளிநாடு செல்லும் வாய்ப்பு உண்டாகும். காணாமற்போன பொருள்கள் மீண்டும் கிடைக்கும்.

## கும்பம்:

கவலையான வாரம். பொருளாதாரம் நலிவடையும். குடும்பத்தில் வீண் வாக்கு வாதங்கள் ஏற்படும். தொழிலாளர்கள் முன்னேற்றம் சிரமமாக இருக்கும். கடன் தொல்லை கவலையைத் தரும். உடல் நலனில் குறைபாடு உண்டாகும். யாருக்கும் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் போகும்.


வருமானக் குறைவால் பிரச்சினைகளைச் சந்திக்கும் நிலை உண்டாகும். உடல்நலனில் குறைபாடு உண்டாகும்.

## மீனம்:

மத்திமமான வாரம். தொழில் வரவுக்கு அதிகமான செலவுகள் தொழிலில் மந்தநிலை உண்டாகும். பழக்கமில்லாதவர்களிடம் ஏமாற வேண்டி வரும்; கவனம் தேவை. தேகநலக் குறைவால் மருத்துவச் செலவு உண்டாகும்.

வியாபாரத்தில் சில பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டிவரும். பெண்களின் எதிர்பார்ப்புகள் முயற்சியால் நிறைவேறும். பயணங்களைத் தவிர்க்க வேண்டும். பிற விடயங்களில் தலையிடுவதைத் தவிர்க்கவும். கொடுக்கல் வாங்கலில் அவதானம் தேவை.

# 'கார்த்திகை' விளக்கீடு இன்று



உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற சைவ சமய முழுமுதற் கடவுளான ஒப்புவமையில்லாத பரம்பொருள் சிவபெருமான். அப்பேர்ப்பட்ட எல்லாம்வல்ல ஈசனின் திருவிளையாடல்களில் கார்த்திகை மாதத்தில் வருகின்ற திருக்கார்த்திகை தீப தரிசனமும் ஒன்றாகும். இப்பரந்த நிலவுலகின் கண்ணே ஆதியும் அந்தமும் இல்லாத அருட்பெருஞ்சோதியாக விளங்குகின்ற சிவபெருமானுக்குரிய இன்றைய திருக்கார்த்திகை விரதம். தனித்துவமான மகிமையும் மகத்துவமும் மங்களமும் மாண்பும் நிறைந்த சிவ விரதமாகும்.

முன்பொருமுறை பிரம்மாவும் விஷ்ணுவும் தாம் தாம் பெரியவர் என்று சொல்லித் தமக்குள்ளேயே அடிபட்டுக் கொண்டார்களாம். அப்போது சிவபெருமான் ஒரு பெரிய தீபப் பிழம்பாகத் தோன்றி, ''ஏ பிரம்ம விட்ணுக்களே! ஏன் வீணாகச் சண்டையிடுகின்றீர்கள். உங்களுக்கு முன்னே தோன்றியுள்ள தீப்பிழம்பு ஜோதியின் அடியையோ அல்லது முடியையோ யார் காண்கின்றார்களோ அவர்தான் பெரியவர்'' என்று அசரீரியாகக் கூறி வைத்தாராம்.

அதைக் கேட்ட பிரம்மா, ''நான் முடியைக் கண்டு வருகின்றேன்'' என்று கூறிஅன்னப்பறவையாகஉருவெடுத்து மேலே சென்றார். விஷ்ணுவோ தான் அடியைக் காண்பதாகக் கூறிப் பன்றி



உருவெடுத்துக் கொண்டு நிலத்துக்கு அடியிலே சென்றாராம்.

இருவராலும் ஒன்றையும் காண முடியவில்லை. பிரம்மா தான் முடியைக் கண்டு விட்டதாகச் சொல்லி தாழம்பூவைச் சாட்சியும் சொல்ல வைத்தார். பொய் கூறிய காரணத்தால் பிரம்மாவுக்குக் கோயிலே இல்லாது போயிற்று. பொய்ச் சாட்சி சொன்னதால் தாழம்பூவைப் பூசைக்கு எடுப்பதில்லை. விஷ்ணு தன்னால் அடியைக் காணமுடியவில்லை என்று கூறித் தோல்வியை ஒப்புக் கொண்டார்.

**சொக்கப்பானை**

இவ்வாறு அளவிடற்கரிய அருட்பெருஞ் சோதியாக விளங்கிய சிவபெருமான்இ தீப்பிழம்பாகக் காட்சியளித்ததால்தான் இன்றைய திருக்கார்த்திகைத் தீபத் திருநாள். இதனை நம்மவர் ''சொக்கப்பானை'' என்று கூறுவர். கோயில்களிலே இன்றைய தினத்தில் கோபுர வாசலிலே பனை ஓலை, தென்னோலையால் ஆக்கப்பட்ட ஒரு பெரிய உயரமான பொதியைக் கட்டி வைப்பர்.


அந்த இடத்தில் சுவாமியை எழுந்தருளப் பண்ணி அந்த ஓலையாலான கூட்டினைத் தீமூட்டி முளாசி எரிய வைப்பர். அது வானளாவ எழுந்து சோதியாகச் சுடர்விட்டு சுவாலை காட்டி எரியும். அதை எல்லோரும் ''அரோகரா'' என்று சொல்லி வணங்குவார்கள். இதுதான் சொக்கப்பானை.

''சொக்கபாவனை'' என்பதே ''சொக்கப்பானை'' என்று மருவிற்று என்று கூறுவாருமுளர். இந்த வகையில் எல்லாக் கோயில்களிலும் திருக்கார்த்திகை நாளில் ''சர்வாலயதீபம்'' என்று பெருவிழாதிருவிழாவாக நடைபெறும்.

முருகன் கோயில்களில் ''குமாராலயதீபம்'' என்று தீபத்திருநாள் கொண்டாடப்படும். சைவசமயிகள் பலர் தேனும் தினைமாவும் கொண்டு நெய் விளக்கேற்றியும் வழிபாடியற்றுவர். விஷ்ணு கோயில்களிலும், ''விஷ்ணுவாலய தீபம்'' என்று இன்றைய திருக்கார்த்திகை விழா மிகச் சிறப்பாக நடைபெறும். வீடுகளிலும் இன்றைய தினம் விளக்குகளை ஏற்றிவைத்து அந்தத்தீப ஒளியிலேசிவபெருமானைக் கண்டு வழிபாடியற்றுவர். அத்துடன், இது ஒரு சிறப்பான மங்கலகரமான திருநாள் என்பதால் நம்மவர் பள்ளிக்கூடங்கள், வியாபார ஸ்தலங்கள், வர்த்தக நிறுவனங்கள், தொழில் ஸ்தாபனங்கள், உற்பத்தி நிறுவனங்கள் என்ற இன்னோரன்னபல இடங்களிலும் விளக்குகளை அழகாக அடுக்கி, வடிவாகத்திரியிட்டு தீபத்தை ஏற்றிவைத்து அந்த ஒளியிலே ஆண்டவனைக் கண்டு அகம்மிக மகிழ்வர்.

இன்றைய ''திருக்கார்த்திகை'' விளக்கீட்டு நன்னாளில் இல்லங்களை முறைப்படி வெகுவாக அலங்கரித்து வரிசை வரிசையாக எண்ணெய்ச் சிட்டிகளை அடுக்கி வைத்து ஒளியேற்றி, அது சுடர்விட்டு எரியும் அழகைக் கண்டு ஆனந்திப்பர்.

ஆகவே, சைவசமயிகளாகப் பிறந்துள்ள நாம் ஒவ்வொருவரும் இன்றைய தீபம் ஏற்றி வழிபாடு செய்கின்ற திருக்கார்த்திகைத் திருநாளில், ஒளியிலே இறை ஆசி பெற்று, அருள்பெற்று உய்யும் வழியைத் தேடிக் கொள்ள வேண்டும்.



புனிதப் பிறவியாகிய மனிதப் பிறவி எடுத்திருக்கும் ஒவ்வொருவரும் இன்றைய திருக்கார்த்திகைத் தீபத் திருநாளில் தத்தமது இல்லங்களிலும் தொழில் பார்க்கும் இடங்களிலும் விளக்கேற்றி வைத்து இறைவழிபாடியற்றுதல் முக்கியமாகும். நாம் விளக்கேற்றி வழிபாடு செய்து வணங்கி மகிழ்வதால் எமது இல்லங்களில் பீடை நீங்கி மங்களமும் சுபீட்சமும் உண்டாகும் என்பது நம்பிக்கை.

அத்துடன், இன்றைய விளக்கீட்டு நன்னாளில் ஏழைகளுக்கு அன்னதானம் கொடுத்து முடிந்தால் வஸ்திர தானமும் செய்துகொண்டால் எம் வாழ்க்கையில் ஒளி ஏற்பட்டு துன்ப துயரம் அகன்று பிரகாசமான நல்வாழ்வு மலரும் என்பது மட்டும் உண்மை.

- ''தெய்வத்தமிழ்ச் சுடர்'' -

**இராசையா ஸ்ரீதரன்**

**தீபங்கள் ஏற்றி பீடைகளை விரட்டி மங்கலம், சுபீட்சம் பெற்றிடுவோம்**



# தீபம் ஏற்ற வேண்டிய இடங்களும், விளக்குகளும்

1. கோலமிடப்பட்ட வாசலில் ஐந்து விளக்குகள் ஏற்றி வைத்தால் லட்சுமி கடாட்சம்.
2. பூஜையறையில் இரண்டு கார்த்திகை விளக்குகள் ஏற்றி வைத்து வணங்கினால் சர்வ மங்கலங்கள் உண்டாகும்.
3. சமையல் அறையில் ஒரு விளக்கு ஏற்றி வைத்து வணங்கினால் அன்ன தோஷம் ஏற்படாது.
4. தோட்டம் முதலான வெளிப்பகுதிகளில், எமனை வேண்டி தீபம் ஏற்ற வேண்டும். இதனால் மரண பயம் நீங்கும், ஆயுள்விருத்தி உண்டாகும்.
5. திண்ணைகளில் நான்கு விளக்குகள் ஏற்றுவதன் மூலம் தீயவைகள் வீட்டில் அண்டா.
6. மாடக்குழிகளில் இரண்டு விளக்குகள் ஏற்றுவது சிறந்த பலனைக் கொடுக்கும்.



## விளக்கேற்றும் திசை

கிழக்கு – துன்பம் நீங்குதல், குடும்ப அபிவிருத்தி.
மேற்கு – கடன், தோஷம் நீங்கும்.
வடக்கு– திருமணத்தடை அகலும்.
தெற்கு நோக்கி விளக்கேற்றக்கூடாது. (மரணபயம் உண்டாகும்)

## எண்ணெயின் பலன்

தீபமேற்ற பயன்படுத்தும் எண்ணெயின் பலனைப் பொறுத்தும் பலன் கிடைக்கும்.
நெய் –செல்வவிருத்தி, நினைத்தது கைகூடும்.
நல்லெண்ணெய்– ஆரோக்கியம் அதிகரிக்கும்.
தேங்காய் எண்ணெய் – வசீகரம் கூடும்.
இலுப்பை எண்ணெய் – சகல காரிய வெற்றி.
விளக்கெண்ணெய் – புகழ் தரும்.





தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா

**சுதந்திர ஜனநாயகக் கட்சி (FDP) கூட்டணி பேச்சுகளில் இருந்து முறித்துக் கொண்டமை எதிர்பாராத ஒன்றல்ல, நீண்ட காலத்துக்கு முன்பிருந்தே அது அவ்வாறு செய்யத் திட்டமிட்டிருந்ததாகப் பலர் நம்புகின்றனர். பெருவணிகங்களின் பணக்கார நன்கொடையாளர்களைச் சார்ந்திருக்கும் இக் கட்சி, ஒருபோதும் பெருந் திரளான மக்கள் செல்வாக்கைப் பெற்றிருக்கவில்லை என்பதுடன், ஜேர்மன் வரலாற்றின் பிரதான மாற்றங்களின் போதெல்லாம் எப்போதுமே ஒரு வழிகாட்டும் பாத்திரம் வகித்துள்ளது.**

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், சுதந்திர ஜனநாயகக் கட்சி (FDP) அரசியல் கட்சிகளுக்குள் அதி வலதுசாரியாக நின்றுள்ளதுடன், பல முன் னாள் தேசிய தாராளவாதிகளையும் நாஜிக்களையும் அதன் பதவிகளுக்கு ஈர்த்து, CDU இன் கொன்ராட் அடினோவர் (Konrad Adenauer) உடன் ஒரு கூட்டணியை உருவாக்கியது. 1969 இல், தரப்பு மாறிய அக் கட்சி, சமூக ஜனநாயகவாதி வில்லி பிராண்ட் (Willy Brandt) சான்சிலராவதற்கு உதவியது. 1982 இல் FDP மீண்டும் அதன் போக்கை மாற்றிக் கொண்டு, ஹெல்முட் ஷிமித் இன் SPD தலைமையிலான அரசைப் பதவியிலிருந்து கீழிறக்கி, அதற்கு அடுத்த 16 ஆண்டுகள் CDU இன் ஹெல்முட் கோல் ஆட்சியில் பங்கேற்றிருந்தது.

இப்போது அதன் மூலவேர்களுக்குத் திரும்பி வரும் FDP பிரதான கட்சிகளுக்கான வாக்குகள் பொறிந்ததில் இருந்து இலாபமடைந்து தேர்தல்களில் ஆதாயமடைந்த நவ-பாசிசவாத கட்சியான ஜேர்மனிக்கான மாற்றீட்டை (AfD) நோக்கி, தன்னை தகவமைத்து வருகிறது. நான்காண்டுகளாக FDP இற்குத் தலைமை கொடுத்துள்ள 38 வயதான கிறிஸ்டியான் லிண்ட்னர், கட்சியை அதிவலதை நோக்கி எடுத்துச் சென்று கொண்டிருக்கிறார். புதிய தேர்தல்கள் நடத்தப்பட்டால், அவர்



“தேசிய தாராளவாதிகளைத் தாண்டிச் சென்று வலதுசாரிக் குழுக்களின் ஆதரவைப் பெற்று ஒரு புதிய வகையான மக்கள் கட்சியாக மாறுவதற்கு” முயல்வார் என்று Tagesspiegel நாளிதழ் எழுதியது. ஆஸ்திரிய சுதந்திரக் கட்சியின் (FPO) முன்னாள் தலைவர் ஜோர்ஜ் ஹைடரின் பிம்பத்தில் தன்னைத்தானே “ஹைடர்மயப்படுத்திக் கொள்வதற்காக” கூட்டணி பேச்சுகளைத் துஷ்பிரயோகம் செய்தார் என Suddeutsche Zeitung லிண்ட்னரை குறை கூறியது.

லிண்ட்னர், அவரது வலதுசாரி வேலைத் திட்டத்துக்கு CDU/CSU இற்குள் பலமான ஆதரவு கிடைக்கும் என்றும் கணக்கிடுகிறார். CSU இல் மார்க்கூஸ் ஷோடர் உம் மற்றும் அலெக்சான்டர் டோபிரிண்ட் உம் CSU தலைவரான ஹோர்ஸ்ட் சீகோ வரை வெளியேற்றத் தயாரிப்புச் செய்து வருகின்றனர். இருவருமே ஒரு கடுமையான பழைமைவாதத் திட்டநிரலைப் பிரதிநிதித்துவம் செய்கின்றனர். அங்கேலா மேர்க்கெலும் அவர் கட்சியின் வலதுசாரிப் பிரிவுகளிடமிருந்து வரும் அழுத்தத்தின் கீழ் உள்ளார். இந்த அரசியல் நெருக்கடியிலிருந்து அவர் தப்பிப் பிழைப்பாரா என்பதே தெளிவின்றி உள்ளது.

மேர்க்கெல் அல்லாமல் வேறெவரேனும் சான்சிலர் பதவியை ஏற்றுக் கொண்டு, புதிய அரசு உள்நாட்டு ஒடுக்குமுறையை விரிவாக்கவும், ஜேர்மனியில் உள்ள தங்கள் குடும்பங்



களுடன் மீண்டும் இணையவரும் அகதிகள் நாட்டினுள் வருவதைத் தடுக்கவும் ஒப்புக்கொண்டால், நாடாளுமன்றத்தில் CDU/CSU இன் சிறுபான்மை அரசைச் சகித்துக் கொள்ளவதற்கு AfD இன் முன்னணி அரசியல்வாதி அந்திரே பொக்கென் பூர்க் முன்மொழிந்துள்ளார்.

**சமூக ஜனநாயகக் கட்சியின் (SPD) அரசியலும் வேகமாக வலதுக்கு மாறி வருகிறது. இக்கட்சி, குறிப்பாக ஹம்பேர்க் ஜி20 உச்சி மாநாட்டுக்குப் பின்னர், ஜேர்மன் இராணுவ வாதத்திற்குப் புத்துயிரூட்டுவதில் முக்கிய பாத்திரம் வகித்ததுடன், பொலிஸ் மற்றும் உளவுத்துறை சேவைகளைப் பலப்படுத்துவதற்கும் ஆலோசனை வழங்கியுள்ளது. அது, “இடதுசாரி தீவிரவாதத்திற்கு” எதிராகப் பிரசாரம் என்ற பெயரில் இதைச் செய்தது. இடதில் இருந்து வரும் எதிர்ப்புக்கு ஒரு பாதுகாப்பு அரணை நிறுவும் அதன் பாரம்பரிய நோக்கத்தை சமூக ஜனநாயகக் கட்சி பரிசீலித்து வருகிறது.**

இதனால்தான் கட்சிகள் மாபெரும் கூட்டணியைத் தொடர விரும்பவில்லை. சான்சிலர் மேர்க்கெல்லும் ஜனாதிபதி பிராங்க் - வால்டர் ஸ்ரைன்மையரும் (SPD) சமூக ஜனநாயகக் கட்சிக்கு குறிப்பிடத்தக்க அழுத்தம் அளித்தனர் என்றபோதும், அரசுக்குள் நுழைவதைக் காட்டிலும் எதிர்க்கட்சியாக இருப்பதற்கே அண்மையில் ஒருமனதாக SPD இன் நிர்வாகக்குழு உடன்பட்டது. CDU/CSU உடன் நெருக்கமாகத் தொடர்ந்து செயற்பட்டால், ஒரு சோசலிச முன்னோக்கு பார்வையாளர்களை ஈர்த்துவிடும் என்றும், நாடாளுமன்றத்தில் AfD மிகப்பெரிய எதிர்க்கட்சியாக உருவெடுத்துவிடும் என்றும் அது அஞ்சுகிறது.

இடது கட்சி இந்த போக்கை ஆதரிக்கிறது. அது, புதிய தேர்தல்களுக்கு அழைப்பு விடுப்பதன் மூலமாகவும், CDU/CSU மற்றும் FDP உடனான ஒரு கூட்டணி உருவாவதற்கு பசுமைக் கட்சி பெரும் பிரயத்தனம் செய்து வருகின்ற நிலையில், SPD மற்றும் பசுமைக் கட்சியினருடன் ஓர் அரசாங்கத்தை அமைக்குமாறு முன்மொழிந்தும் இந்தக் கூட்டணி முறிவுக்கு விடையிறுத்துள்ளது.

இந்நெருக்கடி அடுத்து வரவிருக்கும் நாள்கள் மற்றும் வாரங்களில் எவ்வாறு அபிவிருத்தி அடைந்தாலும் சரி, தொழிலாளர்களும் இளைஞர்களும் பாரிய தாக்குதல்கள் மற்றும் வர்க்கப் போராட்டத் தீவிரப்பாட்டுக்குத் தயாரிப்பு செய்துகொள்ள வேண்டும். நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் ஜேர்மன் பிரிவான சோசலிச சமத்துவக் கட்சி (Sozialistische Gleichheits Partei - SGP) தேர்தல் பிரசாரத்தின் போது, இத்தேர்தல்கள் ஓர் அரசியல் திருப்புமுனை என்பதையும், அனைத்துக் கட்சிகளும் “இராணுவ வாதத்தை முன்பில்லாதளவில் அதிகரிக்கவும், ஒடுக்குமுறை அரசு எந்திரங்களைப் பலப்படுத்தவும் மற்றும் சமூக வெட்டுக்களுக்கும்” அழுத்தம் அளிப்பதற்குச் செயற்பட்டு வருகின்றன என்பதையும் அறிவித்தது.

**பழைமைவாத, தாராளவாத மற்றும் பசுமை கட்சியினருக்கு இடையிலான ஜமைக்கா கூட்டணி அமைப்பது குறித்து ஆராயும் பேச்சுகள் தோல்வி அடைந்து நான்கு நாள்களுக்குப் பின்னர், ஜேர்மனியின் சமூக ஜனநாயகக் கட்சி (SPD) இது வரை இருந்துவந்த மாபெரும் கூட்டணியைத் தொடர்வதற்கான பாதைக்குத் தயாரிப்பு செய்கிறது.**

அண்மையில் அக்கட்சி செயற்குழு, அரசில் பங்கெடுப்பதற்கு எதிராகவும், புதிய தேர்தல்களுக்கு ஆதரவாகவும் ஒருமனதாக வாக்களித்திருந்தது. ஆனால், SPD தலைவர் மார்ட்டீன் சூல்ஸ் மற்றும் ஜேர்மன் ஜனாதிபதி பிராங்க் - வால்டர் ஸ்ரைன்மையருக்கு இடையிலான பேச்சு மற்றும் SPD தலைமையை உள்ளடக்கிய ஓர் எட்டு மணிநேர பேச்சு என இவற்றுக் குப் பின்னர், பொது செயலாளர் ஹூபேர்ட் டுஸ் ஹெயில், அண்மையில் அதன் நிலைப்பாட்டில் மாற்றத்தை அறிவித்தார். “பேச்சு அவசியம் என்பதில் SPD உறுதியாக உடன்படுகிறது” என்று அவர் தெரிவித்தார். அரசு அமைப்பதற்கான பேச்சுகளில் இருந்து SPD தன்னை விலக்கிக் கொள்ளாது என்பதையும் அவர் சேர்த்துக்கொண்டார்.

இருப்பினும், இந்தக் கட்டத்தில் அது வெளிப்படையாக மாபெரும் கூட்டணிக்கு ஒப்புதல் வழங்க விரும்பவில்லை. “SPD இனுள், மாபெரும் கூட்டணி தன்னிச்சையாக நடக்காது” என்று செயற்குழு அங்கத்தவர் மனுவேலா ஷ்வேஸிக் அறிவித்தார். ஆனால், இதன் நோக்கம், புதிய போக்கை நடைமுறைப்படுத்துவதற்கு வெறுமனே அவகாசம் எடுத்துக் கொள்வதாகும்.

(கேள்வி தொடரும்...)





தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. 'உன்னைச் சரணடைந்தேன்' என்ற அவரது தொகுப்பில் 'யாழில் கம்பன்' பற்றிய தொடர் பதிவு இது.



# ஐந்தாவது கம்பன் விழா 25.09.1981

கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 24

# உன்னைச் சரணடைந்தேன்



### துணைசெய்த வைத்தியநாதன் தம்பதியினர்

இவ்விழாவில் வங்கி முகாமையாளர் வைத்தியநாதன் ஐயா எமக்கு நிறைய உதவிகள் செய்தார். கல்வியங்காட்டில் அமைந்திருந்த குமாரதாசன் வீட்டில் தான் முதலில் குருநாதர் வந்து தங்கினார். எங்களுக்கு இந்திய பிராமண உணவினைத் தயாரிக்கத் தெரியவில்லை. குருநாதர் நாங்கள் கொடுத்ததை முகஞ்சுழிக்காமல் ஏற்றுக்கொண்டிருந்தார். ஒரு நிலையில் அவரது சங்கடத்தைத் தெரிந்து கொண்டு வசதி கருதி வைத்தியநாதன் ஐயா வீட்டிலேயே அவரைத் தங்க வைத்தோம். வைத்தியநாதனின் துணைவியார் வசந்தா அம்மையார், குருநாதருக்கு விதம் விதமாய் சமைத்துப்போட்டார். இந்தியாவைச் சேர்ந்தவர் என்பதாலும் பிராமண குடும்பத்தைச் சார்ந்தவர் என்பதாலும், அவரது சமையல் ஐயாவுக்கு நிரம்பப் பிடித்துப் போனது. எந்தக்குறையுமின்றி குருநாதரை அவர்கள் பார்த்துக்கொண்டனர். இடையிடையே விழா நாள்களில் எங்களையும் அன்போடு அழைத்து அம்மையார் விருந்திடுவார். குருநாதரின் வருகையோடு வைத்தியநாதன் ஐயா குடும்பம் எங்களுக்கு மிக நெருக்கமாயிற்று.

***

### கேசரி மண்ணாயிற்று!

எனக்குச் சமையலில் விருப்பம் அதிகம். இரண்டு தரம் தமிழகம் சென்று வந்த அனுபவத்தில் நானும் இந்திய சமையலைப் பழகி விட்டதாய் அப்போது நினைத்திருந்தேன். ஆனாலும், முப்பது ஆண்டுகள் கழிந்தும் அந்தச் சமையல் கைவண்ணம் இன்றுவரை முழுமையாய்க் கைவரவில்லை. அப்போது நான் நன்றாகக் கேசரி செய்வேன். குருநாதர் வந்ததும், அவருக்கு இனிப்பாக ஏதாவது செய்து போட வேண்டும் என நினைந்து என் கைவண்ணம் காட்ட கேசரி செய்யத் தொடங்கினேன். அப்போது நெய் கிடைப்பது பெரிய கஷ்டம். குமாரதாசன் வீட்டில், நெடுந்தீவிலிருந்து கொண்டு வந்த நெய் இருந்தது. நிறைய முந்திரிப்பருப்பு, திராட்சை வற்றல் எல்லாம் வாங்கிப் போட்டு வழிய வழிய நெய் விட்டு அற்புதமான ஒரு கேசரியைச் செய்து முடித்தேன். முடிந்ததும் வாயில் போட்டுப்பார்த்தால் அதில் நறநற வென ஒரே மண்ணாய்க் கடிபட்டது. அன்று நான் பட்ட கவலைக்கு ஓர் அளவே கிடையாது. எப்படி மண் வந்தது என ஆராய்ந்து பார்த்தேன். எங்கள் பிழையால் மண்வர வாய்ப்பிருக்கவில்லை. பிறகு தான் அந்த வாரத்தில் யாழ்ப்பாணக் கடைகளுக்கு வந்த அவ்வளவு ரவையிலும் மண் கலந்திருந்த செய்தி வந்தது. பெருங் கவலையோடு அவ்வளவு கேசரியையும் குப்பையில் கொட்டினேன்.

***

### பேராசிரியர் சிவத்தம்பி முரண்பட்டார்

குருநாதரின் உரைக்கு யாழ்ப்பாணத்தில் பெரிய வரவேற்பு. ஆதீனம் நிரம்பி வழிந்தது. அந்தணர்கள் பலர் மேடையில் நிரம்பியிருந்தனர். இவ் விழாவின் முதல்நாள் நிகழ்ச்சியில் தொடக்க உரையாற்ற பேராசிரியர் சிவத்தம்பியை அழைத்திருந்தோம். அப்போது அவர் தன்னை முழுமையான 'மார்க்சீயவாதி'யாய்க் காட்டி வந்தார். அக்காலத்தில், அவர்கள் மரபுக் கல்வியை ஏற்கவில்லை. மரபுக்காரர்கள் நவீன எழுத்தாளர்களை ஒதுக்கிய காலம்போய் 'மார்க்சீய' பலத்தால் நவீனவாதிகள் மரபு அறிஞர்களை இழிவு செய்யத் தொடங்கியிருந்த காலமது. சிவத்தம்பியும் அந்த நவீன குழுவைச் சார்ந்தவராய் இருந்தார். ஆனாலும், நாங்கள் சென்று அழைத்ததும் விழாவுக்கு வரச்சம்மதித்தார். எங்கள் குருநாதரையும் சிவத்தம்பியையும் முதல் நாளன்று நல்லூர் கோயில் வாசலில் இருந்து ஊர்வலமாய் அழைத்துவந்தோம். ஆதீனவாசலில் அவர்களுக்குப் பாதபூசை செய்தோம். குருநாதர் கண்மூடி மௌனித்து, எங்கள் பூசையை ஏற்றுக்கொண்டார்.

பின்னால் வந்த பேராசிரியர் சிவத்தம்பி "Are You Mad?" எனக் கேட்டு காலுதறிச் சென்றார். அவர் செயலால் மனம் நொந்தோம். அன்றைய தொடக்க உரையில் சிவத்தம்பி எம் மரபுக் கல்விமுறையை இழித்துப் பேச, அம்மேடையிலேயே அவருக்குக் கழகத்தாலும் எங்கள் ஆசிரியர்களாலும் பதிலுரைக்கப்பட்டது. இவ் விழாவிலிருந்தே, சிவத்தம்பிக்கும் கழகத்துக்கும் முரண்பாடு தொடங்கி விட்டது. அம்முரண்பாடு பின்னும் தொடர்ந்தது. வேடிக்கை என்னவென்றால், எங்கள் பாத பூஜையை இழித்துரைத்த பேராசிரியர், பிற்காலத்தில் அவரது மணிவிழாவின் போது அவரது மாணவர்கள் நாம் செய்தது போலவே நல்லூர் வாசலில் இருந்து அவரை ஊர்வலமாய் அழைத்து வந்து பாத பூஜை செய்யக் கண் கலங்கி உருகினார். அக்காட்சி மறக்க முடியாதது. எல்லாம் காலத்தின் கோலம்!

***

### குருநாதருக்குப் பாராட்டு



அமிர்தலிங்கம், குருநாதர், எஸ்.ரி.ஆர்.

### விழாவில் அமிர்தலிங்கம் பேசினார்

அப்போது யாழில் புகழ்பெற்ற பிரமுகராயிருந்த, 'எஸ்.ரி.ஆர்.பிலிம்' அதிபர் தியாகராஜா அவர்கள் எங்கள் கழகத்தின் ஆதரவாளர். யாழ்ப்பாணத்தில் இருந்த 'ராஜா தியேட்டர்' அவருடையதுதான். யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகில் மாளிகை போன்ற பெரிய வீடு அவருக்கு இருந்தது.

அந்த வீட்டுக்குப் பெரும்பெரும் கலைஞர்கள் எல்லாம் வந்து போவார்கள். அந்தக் காலத்தில் எம்.ஜி.ஆரையும், சரோஜாதேவியையும் அழைத்து வந்தவர் அவர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியில் அவருக்குப் பெரும் செல்வாக்கு இருந்தது. என் குருநாதரின் பேச்சில் மயங்கிப்போன அவர், குருநாதரின் பேச்சுத்திறன் பற்றி எடுத்துச் சொல்ல, அது கேட்டு, அப்போதைய எதிர்க்கட்சி முதல்வராய் இருந்த அமிர்தலிங்கமும், சிவசிதம்பரம், யோகேஸ்வரன், நவரட்ணம் போன்ற மூத்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் விழாவின் முதலிரண்டு நாள்களிலும் முழுமையாய்க் கலந்துகொண்டு குருநாதரின் பேச்சை மிகவும் இரசித்துக் கேட்டனர். அமிர்தலிங்கத்தோடு அவருடைய துணைவியார், மங்கையர்க்கரசி அவர்களும் விழாவிற்கு வருகை தந்தார்.

அக்காலத்தில் அரசியல் மேடைகளில் புகழ்பெற்றிருந்த பெண் பேச்சாளர் அவர். பிரபாகரனைப்போல அமிர்தலிங்கத்திற்கு பெரும் ஆதரவு இருந்த நேரம் அது. விழாவிற்கு வந்த அமிர்தலிங்கத்தையும் துணைவியாரையும் முதலிரண்டு நாள்களும் மேடையிலேற்றாமல் பொதுமக்களோடு சபையிலேயே உட்கார வைத்தோம். கூட்டணி ஆதரவாளர்கள் பலர் அதை எதிர்த்தனர். பிரதம விருந்தினராய் அழைத்தாற்கூட செல்ல முடியாத அளவிற்கு அமிர்தலிங்கம் 'பிஸி'யாய் இருந்த காலம் அது. எந்தவித அழைப்புமின்றி வெறும் பார்வையாளர்களாய், மூன்று, நான்கு மணித்தியாலங்கள் நிலத்தில் இருந்து, பேராசிரியரின் சொற்பொழிவு கேட்டு, தங்கள் தமிழார்வத்தை அவர்கள் நிரூபித்தனர். நாங்கள் தனித்த மரியாதை ஏதும் செய்யாத போதும், அதைப் பொருட்படுத்தாமல் அமிர்தலிங்கம் தம்பதியினர், அடுத்தநாள் விழாவுக்கும் வர, உண்மையில் நாங்கள் மகிழ்ந்து போனோம். தொடர்ந்தும் குருநாதரின் உரையைக் கேட்க வந்ததால், அவர்களின் தமிழார்வத்தை மதித்து, விழாவின் நிறைவு நாள் அன்று நடந்த குருநாதரின் பாராட்டு நிகழ்வில், அமிர்தலிங்கத்தை மேடையேற்றிக் கௌரவித்தோம். மேடையில் அவர் குருநாதரைப் பாராட்டிப் பேசினார். எங்கள் கழக ஆதரவாளர்களான, அப்போதைய கூட்டணியின் மகளிர் அமைப்பைச் சார்ந்தவர்கள், திருமதி மங்கையர்க்கரசியையும் மேடையேற்ற வலியுறுத்தினார்கள். எதிர்க்கட்சி முதல்வருக்கு மட்டுமே மேடையில் இடம் என, அப்போதும் அவர்கள் கோரிக்கையை நிராகரித்தோம். அரசியல் சார்பற்றுத் தமிழை முதன்மைப் படுத்தி, நிகழ்ச்சிகளை நடத்தும் ஆளுமையை நாம் பெற்றதற்கு இந்நிகழ்வே வித்திட்டது.

***

### பழ. நெடுமாறனைப் பேச அனுமதிக்கவில்லை

இவ்விழாவின் நிறைவு நாளில் எஸ்.ரி.ஆர். தனது வீட்டில், குருநாதருக்கும் கழக உறுப்பினர்களுக்கும் ஒரு பெரிய விருந்தளித்தார். அவ்விருந்தில் அமிர்தலிங்கம், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் உட்பட, பல கூட்டணித் தலைவர்களும், அப்போது, ஏதோ காரணமாய் யாழ். வந்திருந்த, தமிழக அரசியற் தலைவர் பழ. நெடுமாறன் அவர்களும் கலந்து கொண்டனர். அரசியல் தலைவர்களோடு அதிகம் நெருங்க எனது குருநாதர் விரும்பமாட்டார். விருந்து முடிந்ததும் எஸ்.ரி.ஆர். அவர்கள், அன்று நடக்கவிருந்த கம்பன் விழாவின் நிறைவுநாள் நிகழ்வில், பழ. நெடுமாறனைப்பேச அனுமதிக்கும்படி கேட்டுக்கொண்டார். நானும் சம்மதித்து வந்துவிட்டேன். அலுவலகம் வந்ததும், அரசியல்வாதிகளை மேடையேற்றுவதில், எங்கள் ஆசிரியர்களுக்கும் குருநாதருக்கும் உடன்பாடில்லாதது தெரிய வந்தது. உடனே தொலைபேசியில் எஸ்.ரி.ஆருடன் பேசி, அந்நிகழ்வை இரத்துச்செய்தோம்.

*** (தொடரும்...)

# மாற்றுத்திறனாளிகளை கௌரவிப்போம்


- புன்னியா மீன் -



உலகளாவிய ரீதியில் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் ஒவ்வோர் ஆண்டிலும் டிசெம்பர் 3 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது. மாற்றுத்திறனாளிகளின் பிரச்சினைகளை சர்வதேச ரீதியில் அனைத்து மக்களும் நன்கு அறிந்து கொள்ள வேண்டும். அவர்களுக்குரிய இடத்தையும், உரிமைகளையும் வழங்குவதில் யாரும் பின் நிற்கக்கூடாது என்ற எண்ணக் கருவை மக்கள் மத்தியில் உருவாக்குவதே இத்தினத்தின் பிரதான எதிர்பார்க்கையாகும். மாற்றுத்திறனாளிகள் எனும் போது இவர்கள் நோயாளிகளாக அல்லாமல் சமுதாயத்தில் நம்பிக்கைக்குரிய பிரஜைகள் என்ற அடிப்படையில் நோக்கப்படுவதுடன் இவர்களும் மனிதாபிமான சிந்தனை மிக்கவர்களே என்பதை மையமாகக் கொண்டு உலகம் முழுவதும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

உலகின் மக்கள் தொகையில் பத்து வீதத்தினர் அதாவது 65 கோடி மக்கள் மாற்றுத்திறனாளிகள் என உலக சுகாதார நிறுவகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இவர்களில் 80 வீதத்தினர் அதாவது 40 கோடிக்கு மேற்பட்டோர் மூன்றாம் உலக நாடுகளில் வாழ்கின்றனர். அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளிலுள்ள ஊனமுற்ற சிறாரில் 90 வீதத்தினர் பாடசாலைக்குச் செல்வதில்லை என்று ஐக்கிய நாடுகள் அறிக்கை (2008) கூறுகிறது. ஊனமுற்ற நிலையிலுள்ள 2 கோடிப் பெண்கள் அதனை கருவுற்ற காலத்திலோ அல்லது குழந்தைப் பிறப்பின் போதோ பெற்றுள்ளனர்.

1981 ஆம் ஆண்டை சர்வதேச மாற்றுத்திறனாளிகள் ஆண்டாக அறிவித்த ஐக்கிய நாடுகள் சபை, 1982 ஆம்



ஆண்டு டிசெம்பர் 3 ஆம் திகதி சர்வதேச ஊனமுற்றோர் தினமாகவும் அறிவித்தது. அன்று தொடக்கம் இன்றுவரை ஒவ்வோர் ஆண்டும் இத்தினம் உலக நாடுகளால் ‘சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் என அனுசரிக்கப்படுகிறது.

உலகின் பல நாடுகளிலும் பல்வேறு மட்டத்தில் இத்தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது

**சிறப்பு அரச விடுமுறை தினம்**

இந்திய அரசு 2009 ஆம் ஆண்டு முதல் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினமான டிசெம்பர் 3 ஆம் திகதியை, சிறப்பு அரச விடுமுறை தினமாக அறிவித்துள்ளது.

பல நாடுகள் அரச நிறுவனங்கள், மற்றும் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் மாற்றுத்திறனாளிகளின் நிலையை உயர்த்துவதற்கான செயல் திட்டங்களைத் தீட்டி, அவர்களின் முயற்சிகளுக்கு உறுதுணை புரிந்து வருகின்றன. அத்துடன், சமுதாயத்தில் மாற்றுத்திறனாளிகளின் நிலையை உயர்த்த சிறப்புக் கருத்தரங்குகள், பயிற்சி மற்றும் விழிப்புணர்வு முகாம்களை ஏற்பாடு செய்கின்றன.

மேலும் ஊடகங்கள் மூலமாக விழிப்புணர்வு விளம்பரங்கள், பிரசாரங்களை மேற்கொள்கின்றன. இவற்றினூடாக சமூகத்தில் சம உரிமைகளுடன் ஒவ்வொரு துறையிலும் மாற்றுத்திறனாளிகள் சிறந்து விளங்க வேண்டுமென்ற அடிப்படையிலேயே இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஊனம் என்பது , பொதுவான நிலையில் மற் றவர்களுடன் ஒப்பிடும்போது



இயலாத்தன்மை இருப்பதையே குறிக்கும். இது, உடற் குறைபாடு, புலன் குறைபாடு, மூளை வளர்ச்சி குறைபாடு, உளவியல் குறைபாடு, பிற நோய்கள் தொடர்பான குறைபாடு என்பவை தொடர்புடையதாக இருக்கலாம். ஊனம் ஒருவருடைய வாழ்க்கைக் காலத்தில் அல்லது பிறப்பிலேயே ஏற்படலாம்.

ஊனம் என்பது தனிப்பட்டவரோடு மட்டுமே தொடர்புடையதாகக் காணப்படுவதால் பாதிக்கப்பட்ட தனிப்பட்டவரை எவ்வாறு சிறப்பாகச் செயற்படவைக்க முடியும் என்பது குறித்துக் கவனம் செலுத்தப்பட வேண்டும். இத்தகைய நோக்கு ஊனத்துக்கான மருத்துவ மாதிரியை ஒத்தது. மேலும் இத்தகைய பார்வை ஊனம் தொடர்பில் மக் களுக்கும், அவர்களுடைய சூழல், சமூகம் என்பவற்றுக்குமான தொடர்புகளுக்கு வாய்ப்பை அளிக்கக்கூடும். மனித உரிமைகள் அல்லது ஊனத்துக்கான சமூக மாதிரி என்பவற்றுடன் இவை தொடர்புடையனவாக இருத்தல் வேண்டும்.

இந்தியாவில் 2001 ஆண்டு கணிப்பீட்டின் படி மொத்த சனத்தொகையில் 2.31 சதவிகிதமானோர் மாற்றுத்திறனாளிகள் எனக்கூறப்பட்டுள்ளது. மேலும் ஆசிய பசுபிக் பகுதியில், மாற்றுத்திறனாளிகளின் சம உரிமை மற்றும் முழு பங்களிப்பு குறித்த அறிக்கையில் இந்தியா கையொப்பமிட்டுள்ளது.

அத்துடன், எல்லோரும் இணைந்த தடைகளற்ற உரிமைகளை உடைய சமுதாயத்தை விரும்பும் பிவாக்கோ மில்லேனியம் ஃபிரேம்வேர்க் (Biwako Millennium Framework) ஒப்பந்தத்திலும் இந்தியா கையொப்பம் இட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளையும், கண்ணியத்தையும் பாதுகாக்கும் அல்லது அதிகரிக்கும் நோக்கத்துடன் உலக நாடுகள் கலந்து கொண்ட மாநாடு மார்ச் 30, 2007 இல் நடைபெற்றது. இந்தியா உலகநாடுகளின் ஒப்பந்தத்தை 01.10.2008 இல் ஏற்றுக்கொண்டது.

2008 சர்வதேச ஊனமுற்றவர்கள் தினத்தை முன்னிட்டு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலர் பான் கி மூன் விடுத்த செய்தியில், “மாற்றுத்திறனாளிகளும், அவர்களின் நிறுவனங்களும் அனைத்து வளர்ச்சித் திட்டங்களிலும் ஒருங்கிணைக்கப்பட வேண்டும்” என்று வலியுறுத்தியிருந்தார்.

மேலும் 2008 இல் இத்தினம், சர்வதேச மனித உரிமைகள் சாசனம் அறிவிக்கப்பட்டதன் அறுபதாம் ஆண்டு நிறைவுக்கு ஒரு வாரத்திற்கு முன்னர் இடம் பெறுகிறது என்றும், இவ்விரு உலக தினங்களிலும் நம் அனைவருக்கும் மாண்பும் நீதியும் என்ற தலைப்பே கருப்பொருள் என்றும் குறிப்பிட்ட பான் கீ மூன், மிலேனிய வளர்ச்சித் திட்டங்கள் நிறைவேற்றப்படுவதற்கான எல்லா நடவடிக்கைகளிலும் ஊன முற்றோர் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும். – என்றும் கேட்டுக் கொண்டார்.

முயற்சியுடைய பல மாற்றுத்திறனாளிகள் உலகளாவிய ரீதியில் பல்வேறு சாதனைகளைப் புரிந்துள்ளனர். கல்வி, கலை, கலாசாரம் என்ற அடிப்படையில் இத்தகைய சாதனைகள் தொடர்கின்றன. அது மட்டுமல்ல, ஊனமுற்றவர்கள் இன்று விளையாட்டுத்



துறையிலும் பல்வேறு சாதனைகளை நிகழ்த்திக் கொண்டு வருகின்றார்கள்.

மாற்றுத்திறனாளிகளுக்கான பாரா ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் 1960 முதல் நடைபெறுகிறது. உடல் ஊனமுற்றோர், பார்வைக் குறைபாடு உள்ளவர்களுக்காக நடத்தப்படும் சிறப்பு ஒலிம்பிக் போட்டியான இப்போட்டி, கடைசியாக 2008 ஆம் ஆண்டு சீனாவின் பீஜிங் நகரில் நடைபெற்றது.

அடுத்த ஒலிம்பிக் போட்டிகள் லண்டன் நகரில் 2012 ஆம் ஆண்டிலும் 2016 ஆம் ஆண்டில் பிரேஸிலிலும் நடைபெற்றன. அடுத்த பரா ஒலிம்பிக் 2020 ஆம் ஆண்டில் ஜப்பான் ரோக்கியோ நகரில் நடைபெறவுள்ளது. ஒலிம்பிக் போட்டிகள் மாத்திரமன்றி, நாடளாவிய ரீதியில் தேசிய போட்டிகளும், சர்வதேச ரீதியில் போட்டிகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

எனவே, ஊனம் என்பதை ஒரு தடையாக பார்க்காமல் ஊனம் உள்ளவர்களையும் திறமைமிக்கவர்களாகவும், மனிதாபிமான நோக்குடனும் நோக்குவதும் சாலப் பொருத்தமானதாக இருக்கும். இத்தினத்தில் இத்தகைய உணர்வை வளர்த்துக் கொள்ள ஒவ்வொருவரும் திடசங்கற்பம் பூணுவோமாக. ★

இலங்கையில் மாற்றுத்திறனாளிகள் 16 லட்சம் பேர் காணப்படுகின்றனர் எனவும், இது இலங்கையின் மொத்த சனத் தொகையில் 7.9 வீதம் எனவும் மத்திய வங்கி அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு–

மாற்றுத்திறனாளிகளுக்கு அவர்களுக்கு ஏற்றவாழ்வாதாரங்களை வழங்கி பொருளாதார ரீதியாகப் பாதுகாக்க வேண்டும். சமூகத்தில் மதிப்பு பெற்று அவர்களும் நாட்டை அபிவிருத்தி செய்யும் பணியில் ஈடுபடுத்தப்பட வேண்டும் .

புள்ளி விவரத் திணைக்களத்தின் அறிக்கையின் படி ஒவ்வொரு 1000 ஆண்களில் 77 ஆண்களும் ஒவ்வொரு 1000 பெண்களில் 96 பெண்களும் மாற்றுத்திறனாளிகளாகக் காணப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் உள்ள மொத்த மாற்றுத் திறனாளிகளில் 9 லட்சத்து 96 ஆயிரத்து 936 பேர் பார்வை குறைபாட்டுடனும் 7 லட்சத்து 34 ஆயிரத்து 213 பேர் கால்கள் ஊனமாகவும் 3 லட்சத்து 89 ஆயிரத்து 77 பேர் செவி ஊனமாகவும் 3 லட்சத்து 43 ஆயிரத்து 689 பேர் உளவள பிரச்சினைகள் உள்ளவர்களாகவும் ஒரு லட்சத்து 97 ஆயிரத்து 575 பேர் சுய பாதுகாப்பு இல்லாதவர்களாகவும் காணப்படுகின்றனர்.

இலங்கையில் காணப்படும் 16 லட்சம் மாற்றுத்திறனாளிகளில் 43வீதம் ஆண்களாகவும் 57 வீதம் பெண்களாகவும் காணப்படுகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir





# 'ஜெ' யின் வாரிசு யார்?

## தற்போது விஸ்வரூபம் எடுத்துள்ள சர்ச்சை

ஜெயலலிதாவைப் பற்றிய ஒரு கட்டுரையில், முதல் முறையாக அவர்பெயரை 'ஜெ' எனக் குறிப்பிட்டிருந்தார் அந்தப் பத்திரிகையாளர். அந்தக் கட்டுரை வெளியானபோது, தன் பெயருக்கு இழுக்கு ஏற்படுத்தினார் என அந்தப் பத்திரிகையாளருக்கு நோட்டீஸ் அனுப்பினார் ஜெயலலிதா. பொதுவாக தலைவர்களை அவர்களது பெயரின் முன்னெழுத்தைக் குறிப்பிட்டு சொல்லும் வழக்கத்தை அந்தப் பத்திரிகையாளர் சுட்டிக்காட்டிய பின்னரே ஜெயலலிதா அமைதியானார்.

இது ஓர் உதாரணம்தான். தன்னைப்பற்றிய விமர்சனங்களை ஜெயலலிதா இப்படித்தான் எதிர்கொண்டார். அப்படி ஜெயலலிதா மீது எழுந்த மிகப் பெரிய சர்ச்சை, அவருக்கு மகள் உண்டு என்ற சர்ச்சை. இந்த சர்ச்சை எழுந்த போதெல்லாம் அதீதமாகவே கோபப்பட்டார் ஜெயலலிதா. தனக்கு மகள் இருக்கிறார் எனப்பேட்டிகொடுத்தவர்கள் மீதும், நான்தான் மகள் என்றவர்கள் மீதும், அதைப் பிரசுரித்த பத்திரிகைகள் மீதும் வழக்குத் தொடரவும் செய்தார். ஆனால், இதைக் கடந்து இந்த விவகாரம் குறித்து அவர் எதையும் பேசியதில்லை.

பல ஆண்டுகளுக்கு முன்னர் எழுந்த இந்தப் பிரச்சினை, அவர் மறைவுக்குப் பின்னர் இப்போது விஸ்வரூபம் எடுத்திருக்கிறது. ஜெயலலிதா மருத்துவமனையில் இருந்த போது கூட இதைப்பற்றி யாரும் பேசவில்லை. அவர் இறந்து ஓராண்டான நிலையில், இப்போது பரபரக்கிறது விவகாரம்.

### ஜெயலலிதா உறவினர் லதா

ஜெயலலிதாவின் மகள் நான் தான் என அம்ருதா என்ற பெண் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தமையில் தொடங்கிய பரபரப்பு, ஜெயலலிதாவின் உறவினர் லலிதா சொன்ன தகவல்களால் இப்போது உச்சம் பெற்றிருக்கிறது. ஜெயலலிதாவுக்கு 1980 இல் பெண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தையின் தந்தை நடிகர் சோபன் பாபு எனத் திட்டவட்டமாகச் சொல்கிறார் லலிதா.

என் அம்மாவின் உடன்பிறந்தவர் தான் ஜெயலலிதாவின் அப்பா. ஜெயலலிதா எனது தாய் மாமனின் மகள். ஜெயலலிதாவை நான் இரண்டு முறை சந்தித்துப்பேசியமை எனக்கு நினைவிருக்கிறது. சினிமாவிலிருந்து ஜெயலலிதா அரசியலுக்குச் சென்ற பிறகு, சசிகலா தரப்பினர் எங்களை நெருங்க விடவில்லை. ஜெயலலிதாவின் அப்பா ஜெயராமன் மறைவுக்குப் பின்னர் நாங்கள் ஜெயலலிதா குடும்பத்தோடு உறவைத் தொடரவில்லை. அப்போது ஜெயலலிதா மயிலாப்பூரில்தான் தங்கியிருந்தார்.

ஒரு முறை அவர் எனது பெரியம்மாவை போனில் அழைத்து சென்னை வரச் சொன்னார். என் பெரியம்மாவும் சென்னை சென்று வந்தார். ஜெயலலிதா குடும்பத்தோடு நாங்கள் உறவைத் தொடராத நிலையில், ஜெயலலிதாவை பெரியம்மா சந்தித்தது எங்கள் குடும்பத்தில் சர்ச்சையானது. அப்போது, ஜெயலலிதா பிரசவ வலியில் இருந்தார் என்றும், பிரசவம் பார்க்கத்தான் சென்றார் என்றும் பெரியம்மா சொன்னார். அம்மா இல்லாமல் தனித்திருக்கும் ஜெயலலிதாவை இதுபோன்ற நேரத்தில் எப்படிச் சந்திக்காமல் இருப்பது என்றும், இதை வெளியில் சொல்லக் கூடாது என்றும் எங்களிடம் சத்தியம் வாங்கிக் கொண்டார்.



வளர்ப்புத் தாயுடன் அம்ருதா

சோபன் பாபுவுடன் ஜெயலலிதா ஒன்றாக வாழ்ந்தமை எல்லோருக்கும் தெரியும். ஜெயலலிதாவுக்கு மகள் பிறந்தது உண்மை. ஆனால், அது அம்ருதாவா என்று தெரியாது. அதை நீதிமன்றம்தான் சொல்ல வேண்டும். இதை ஏன் இப்போது சொல்ல வேண்டும் என்ற கேள்வி உங்களுக்கு எழலாம். ஜெயலலிதா எங்கள் உறவினர். அவர் மறைந்துவிட்டார். எங்கள் முறைப்படி அவருக்கு இறுதிச் சடங்கு செய்யவேண்டும் அதை அவரது மகள் செய்ய வேண்டும் என்பது மட்டுமே என் விருப்பம், என்றார் அழுத்தமாக.

இந்தப் பேட்டி பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கிற சூழலில், இது குறித்து கருத்துத் தெரிவித்திருக்கிறார் சுப்பிரமணியன் சுவாமி. இதைப்பற்றி தான் எதுவும் அறிந்திருக்கவில்லை. ஆனால், இது பற்றி ஜெயலலிதாவிடம் தான் கேள்வி எழுப்பினார் என அவர் தெரிவித்திருக்கிறார். 1991 இல் நான் அமைச்சராக இருந்தேன். அப்போது சென்னை வந்தபோது, ஜெயலலிதா விருந்து கொடுத்தார்.

ஜெயலலிதாவிடம் தனியாகப் பேசிக்கொண்டிருந்த போது, உங்களுக்கு மகள் இருக்கிறார் எனச் சொல்கிறார்களே எனக்கேட்டேன். அவர் மிகவும் கோபப்பட்டார். இது கருணாநிதியின் பொய் பிரசாரம் என்றார். அவர் சொன்னதை நான் நம்பினேன். அதன் பின்னர் இப்படியான எந்தத் தகவலையும் நான் கேட்கவில்லை. – என்றார்.

ஜெயலலிதாவுக்குக் குழந்தை பிறந்ததாகச் சொல்லப்படும் 1980 முதல் 81 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டங்களில் பத்திரிகையாளர்கள் பலர் ஜெயலலிதாவை நேரில் சந்தித்து வந்தோம். இதழ்களுக்குத் தொடர் பெறுவதற்காக அந்தச் சந்திப்பு நிகழ்ந்தது, என மூத்த பத்திரிகையாளர்கள் கருத்துத் தெரிவித்து வருகிறார்கள்.

### ஜெயலலிதாவின் வாரிசு என்று சொன்னவர்கள் யாவர்?

ஜெயலலிதாவின் வாரிசாக சிலர் வரிசை கட்டி நிற்கின்றனர். ஜெயலலிதா இறந்து ஒரு வருடம் ஆன பின்னரும், அவரை சுற்றியே இன்னும் சர்ச்சைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

ஜெயலலிதா பல பிரச்சினைகளில் வீம்பாகவே இருந்திருக்கிறார். அதற்கான காரணங்களை அவர் கூறாமல் மௌனம் சாதிக்கவும் செய்திருக்கிறார். சில பிரச்சினைகளில், யார் என்ன எரிச்சலூட்டினாலும் அதைப்பற்றி அவர் விளக்கமாகப் பேசியதில்லை. இது அவருக்கு மிகப்பெரிய பலமாக இருந்திருக்கிறது. ஆனால், இதுவே இப்போது மிகப்பெரிய பிரச்சினையாக மாறியிருக்கிறது.

'வின்னர்' திரைப்படத்தில் ஒரு வசனம் வரும். "வாரிசு இல்லாத சொத்துன்னு ஆட்டயப்போடலாம்னு பார்த்தா. இவன் வந்துட்டானே" என்று வடிவேல் புலம்புவதாக ஒரு நகைச்சுவை காட்சி இடம் பெற்றிருக்கும். இது நாள் வரை நேரடி வாரிசு யாரும் இல்லை என்று கருதப்பட்ட முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கு, வாரிசாக சிலர் வரிசை கட்டி நிற்கின்றனர். ஜெயலலிதா இறந்து ஒரு வருடம் ஆன பின்னரும், அவரைச் சுற்றியே இன்னும் சர்ச்சைகள் தொடர்ந்துகொண்டிருக்கின்றன.

2016 ஆம் ஆண்டு ஜெயலலிதா மரணம் அடைந்த பின்னர், அதே டிசெம்பர் மாதத்திலேயே இவர் ஜெயலலிதா மகள் என்று சொல்லி வ ட்ஸ்அப், முகநூல்களில் ஒரு பெண்ணின் படம் வைரல் ஆனது. அந்தப் பெண் குறித்து பாடகி சின்மயி தன் முகநூலில் ஒரு விளக்கம் கொடுத்திருந்தார். அவர் கேரளத்தைச் சேர்ந்தவர் என்றும், அவருக்கும் தமிழகத்துக்கும் சம்பந்தம் இல்லை என்றும், உலகத்தில் ஒரே முக ஜாடையில் ஏழு பேர் இருக்கின்றனர் எனச் சொல்வார்கள். அதேபோல இவர் ஜெயலலிதா முக ஜாடையில் இருக்கிறார் என்று சொன்னார். அதோடு இந்த விவகாரம் முடிவுக்கு வந்தது.



சோபன்பாபுவுடன் ஜெயலலிதா...!

### இரண்டாவதாக வந்த கிருஷ்ணமூர்த்தி

நான் ஜெயலலிதாவின் மகன். என் பெயர் கிருஷ்ணமூர்த்தி என்று உயர் நீதிமன்றத்தின் கதவைத் தட்டினார் ஒருவர். நான் ஜெயலலிதாவுக்கும், சோபன் பாபுவுக்கும் பிறந்தவன். 1985 ஆம் ஆண்டு பெப்ரவரி 15 இல் பிறந்தேன். ஜெயலலிதா இறப்பதற்கு முன்பு 2016 ஆம் ஆண்டு செப்ரெம்பரில் போயஸ் கார்டனில் அவரைச் சந்தித்தேன்.

(18 ஆம் பக்கம் பார்க்க...)

# அழகாக மாற ஆசைப்பட்டு இப்போது...!



பிரபல மொடலான ஏஞ்சலினா ஜூலி போன்று அழகாக மாற ஆசைப்பட்டு 50 தடவை பிளாஸ்டிக் சர்ஜரி செய்த 19 வயது இளம்பெண் அகோரமாக மாறியுள்ளார்.


ஈரானைச் சேர்ந்த இளம்பெண் சாகர் தாபர் (வயது 19). பார்ப்பதற்கு அழகாக இருப்பார்.

இருந்தாலும் அவருக்கு அமெரிக்க நடிகை ஏஞ்சலினா ஜூலி போன்று தனது முக அழகை மாற்ற வேண்டும் என விரும்பினார். அதற்காக அவர் தனது முகத்தை பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை (மாற்று அறுவை சிகிச்சை) செய்தார். இருந்தாலும் அவருக்குத் திருப்தி ஏற்பட வில்லை.

எனவே 50 தடவை முகமாற்று சத்திர சிகிச்சை செய்து கொண்டார். ஆனால், ஏஞ்சலினா ஜூலி போன்று முகம் மாறவில்லை. மாறாக அழகாக இருந்த முகம் அகோரமாக அவலட்சணமாக மாறி விட்டது.

இருந்தாலும் தனது முக அழகை இன்ஸ்ட்ராகிராம் பக்கத்தில் பலவிதமான போஸ்களில் வெளியிட்டு திருப்திபட்டு வருகிறார். இவரை 4 லட்சத்து 80 ஆயிரம் பேர் பின் தொடர்கிறார்கள்.

அவர்கள் சாகர் தாபரின் முக அழகு தொடர்பாகத் தங்களது கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். அவரது முகம் பிசாசு போன்று இருப்பதாகவும், பிணம் போன்று காட்சி அளிப்பதாகவும் வர்ணித்துள்ளனர். மொத்தத்தில் அவருக்கு பிள்ளையார் பிடிக்க போய் அது குரங்கு போல் ஆன நிலை உருவாகி விட்டது.



# புளூட்டோவில் தண்ணீர்!

சூரிய மண்டலத்துக்கு அப்பால் உள்ள புளூட்டோ உள்ளிட்ட பனிக் கட்டி கிரகங்களில் தண்ணீர் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.


அமெரிக்காவின் நாசா விண்வெளி மையம் வேற்றுக் கிரகவாசிகள் தொடர்பாக ஆய்வு மேற்கொண்டு வருகிறது. இந்த நிலையில், சூரிய மண்டலத்துக்கு அப்பால் உள்ள புளூட்டோ உள்ளிட்ட பனிக்கட்டி கிரகங்களில் தண்ணீர் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

புளூட்டோ கிரகத்தின் அடிப் பகுதியில் கடல் போன்று மிகப் பெரிய அளவில் தண்ணீர் உள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

இதே போன்று நெப்டியூன் கிரகத்திலும் தண்ணீர் இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன என்றும், 'நாசா' விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

புளூட்டோ மற்றும் நெப்டியூன் கிரகங்களில் துணை கிரகங்களின் புவியீர்ப்பு விசை சக்தியால் ஒன்றுடன் ஒன்று மோதி வெப்பம் ஏற்பட்டு அதில் உள்ள ஐஸ்கட்டிகள் உருகி கடல் போன்று தண் ணீர் உருவாகி இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

தண்ணீர் இருப்பதால் அங்கு உயிரினங்கள் வாழும் சாத்தியக்கூறுகள் இருக்கின்றன எனவும் ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.






# இப்படியும் ஒரு போராட்டம்...!

மலேசியாவைச் சேர்ந்த செவ்ரோன் எண்ணெய் நிறுவன ஊழியர் பாட்ஸிலா அப்துல் ஹமீத், தன் கையில் பசையைத் தடவி, தரையில் பதித்து புதுமையான முறையில் போராட்டம் நடத்தி வருகிறார்.

இந்த நிறுவனத்தின் கால்டெக்ஸ் பெற்றோல் நிலையத்தில் 17 ஆண்டுகளாகப் பணிபுரிந்து வந்தார். கடந்த மே மாதம் திடீரென்று 30 நாள்களுக்குள் வேலையை விட்டுச் சென்றுவிட வேண்டும் என்று நோட்டீஸ் வந்தது. அதற்கான காரணத்தைக் கேட்டார் ஹமீத். ஆனால், நிர்வாகம் அவருக்குப் பதில் அளிக்கவில்லை. எண்ணெய் நிறுவனத்தில் தானியங்கி இயந்திரங்களை நிறுவி விட்டதால், மனிதர்களின் தேவை இல்லாமல் போய்விட்டது.

ஒரு நிறுவனம் தனக்காக அர்ப்பணிப்புடன் 17 ஆண்டுகள் பணியாற்றிய ஊழியரை இப்படியா நடத்துவது? திடீரென்று வேலையை விட்டு நீக்கினால் அவரால் என்ன செய்யமுடியும்? என்று கேட்கிறார் சமூக ஆர்வலர் முஹம்மது யூசுப் ஆஸ்மி. தன்னை வேலையில் இருந்து நீக்கியதை எதிர்த்துப் போராட முடிவெடுத்தார் ஹமீத். கோலாலம்பூரில் உள்ள தலைமையகத்தில் உயர் அதிகாரிகளைச் சந்திக்க முயன்றார். ஆனால் முடியவில்லை. வேறுவழி இன்றி அந்த அலுவலகத்திலேயே பசையைக் கையில் தடவி, தரையில் பதித்தபடி அமர்ந்துவிட்டார். வேலையில் இருந்து நீக்கி 175 நாள்களுக்கு மேலாகியும் இன்றும் நிர்வாகம் உரிய பதிலை அளிக்கவில்லை.

ஹமீதும் இடத்தைவிட்டு அகலவில்லை. அவரது மனைவி தினமும் உணவும் உடைகளும் கொண்டுவந்து கொடுக்கிறார். இந்த எண்ணெய் நிறுவனத்தில் ஏராளமான ஊழியர்கள் நிர்வாகத்தால் வெளியேற்றப்பட்டிருக்கின்றனர். நீதி கிடைக்குமா...?

# அழிந்து வரும் நகரம்

ஜேர்மனியில் உள்ள ஸ்டாபென் நகரம் மெதுவாக அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. 8ஆயிரத்து 100 வீடுகள் கொண்ட இந்த நகரத்தில், 2007ஆம் ஆண்டு நிலத்தடி நீர் எடுப்பதற்கான பெரிய திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தால்தான் இன்று நகரில் உள்ள நூற்றுக்கணக்கான வீடுகளில் விரிசல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த நகரம் மென்மையான மண் அடுக்கின் மீது அமைந்திருக்கிறது. தண்ணீர் அடுக்கும் அதற்குக் கீழே இருக்கும் ஜிப்சம் அடுக்கும் கலந்து மண்ணின் தன்மையை மாற்றி விட்டன.

இதனால் கடந்த 10 ஆண்டுகளில் 270 கட்டடங்களில் விரிசல் கள் ஏற்பட்டிருக்கின்றன. நகரின் சில இடங்களில் கட்டங்கள் 62செ.மீ. உயரத்துக்கு உயர்ந்து விட்டன. பக்கவாட்டில் 45 செ.மீ. தூரத்துக்கு நகர்ந்துவிட்டன. இதில் இரண்டு வீடுகள் முற்றிலுமாக இடிந்துவிட்டன. இந்தப் பகுதியில் இருக்கும் ஒவ்வொரு கட்டடத்துக்கும் ஒவ்வொரு விதமான பிரச்சினை. அதனால் இவற்றைப் பழுது பார்ப்பதற்கான வாய்ப்பும் இல்லை. ஒவ்வொரு நாளும் திகிலுடனே கழித்துக்கொண்டிருக்கிறோம்.

எப்போது வேண்டுமானாலும் கட்டடம் இடியலாம், நிலத்துக்குள் புதையலாம். இயற்கை எழிலோடு மிக அழகான நகரமாக ஒரு காலத்தில் இருந்தது இந்தப் பகுதி. அதனால்தான் குடியேறினோம். அமைதியாகச் சென்றுகொண்டிருந்த வாழ்க்கையில், நிலத்தடி நீரை உறிஞ்சுவதற்காக மிகப் பெரிய இயந்திரங்கள் பூமியைத் துளைக்க ஆரம்பித்தன.

அன்று முதல் எங்களின் நிம்மதி பறிபோனது. மெதுவாக ஒரு நகரம் அழிந்து வருவதைக் கண்டு வருகிறோம். சிலர் வேறு நகரங்களுக்குச் சென்றுவிட்டனர். ஆனால், எல்லோராலும் போக முடியாது. என்ன செய்வதென்று புரியவில்லை என்கிறார் இந்த நகரில் வசிக்கும் பீட்டர் காஸ்பர்.



# பெண்களை அதிகம் தாக்கும் நீரிழிவு நோய்



உடலில் சுரக்கும் இன்சுலின் போதுமான அளவு இல்லாமல் போவதால் நீரிழிவு நோய் வருகிறது. குடும்பத்தில் அம்மா அல்லது அப்பாவுக்கு நீரிழிவு நோய் இருந்தாலோ, உடல் பருமனாக இருந்தாலோ நீரிழிவு நோய் பாதிப்பதற்கான சாத்தியம் அதிகம்.

பெண்களையும் அதிகம் தாக்கும் இந்த நோயின் பின்விளைவுகள் பலருக்குத் தெரிவதில்லை. அடிக்கடி சிறுநீர் கழித்தல், பிறப்புறுப்பில் அரிப்பு, அதிக தாகம் எடுத்தல், நாக்கு வறட்சி, அதிக பசி, சோர்வு, எடை குறைதல், தோலில் அரிப்பு, மயக்கம் போன்ற அறிகுறிகள் இருக்கும் பெண்கள் உடனடியாக ரத்தம், சிறுநீர் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும்.

அதில் நீரிழிவு நோய் இருப்பது உறுதி செய்யப்பட்டால் அந்த பெண் மட்டுமல்லாமல் அவரை சார்ந்திருப்பவர்களும் ஒத்துழைத்தால் மட்டுமே நீரிழிவு நோயைக் கட்டுக்குள் வைத்திருக்க முடியும்.



முறையான உணவுக் கட்டுப்பாடு, நடைப்பயிற்சி, உடற்பயிற்சி போன்றவற்றின் மூலம் சர்க்கரை அளவைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும். நீரிழிவு நோய் உள்ள பெண்கள் நேரம் தவறாமல் சாப்பிடாவிட்டால் சர்க்கரை அளவு குறைந்து நினைவிழக்கும் அபாயம் உள்ளது.

அளவுக்கு அதிகம் சாப்பிடுபவர்கள், இனிப்பு சாப்பிடுபவர்கள் ஆகியோருக்கு நீரிழிவு நோய் கட்டுப்பாட்டில் இல்லாமல் பல தொந்தரவுகளைக் கொடுக்கும்.

ஒரு பெண்ணுக்கு நீரிழிவு நோய் ஏற்பட்டால் அவர் மட்டுமல்லாமல் அவருடன் இருப்பவர்களுக்கும் பொறுப்பு அதிகம். ஏனென்றால், குடும்பத்தில் இருக்கும் அனைவரையும் அக்கறையுடன் கவனித்துக் கொள்ளும் பெண்கள், தங்களை கவனித்துக் கொள்வதில்லை. இந்த வழக்கத்தை பெண்கள் மாற்றிக் கொள்ள வேண்டும்.

நீரிழிவு நோய் பெண்களையே அதிகம் தாக்குவதாகவும், மாதவிடாய் நின்ற பெண்களிடம் நீரிழிவு நோய் அதிகமாகக் காணப்படுகிறது எனவும் மருத்துவ ஆய்வு சொல்கிறது.

இந்த நோய்க்கு 1923 ஆம் ஆண்டு இன்சுலின் மருந்து கண்டுபிடிக்கப்பட்டது. அதைக் கண்டுபிடித்த கனடா நாட்டு மருத்துவர் பிரெட்ரிக் பேன்டிங்கின் பிறந்த நாளான நவம்பர் 14 ஆம் திகதி, உலக நீரிழிவு நோய் நாளாக 1991 ஆம் ஆண்டு முதல் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இன்றைய பெண்களுக்கு பெரும் பிரச்சினையாக மாறி வரும் நீரிழிவு நோய் வராமல் தடுக்க அதிக விழிப்புடன் இருக்க வேண்டியது அவசியம். நமக்கான வேலைகளை மற்றவரிடம் ஒப்படைக்காமல் நாமே இழுத்துப்போட்டு செய்தாலே நீரிழிவு நோயில் இருந்து பாதி விடுபடலாம்.



# பெண்களுக்கு ஏற்படும் மனநலப் பிரச்சினைகள்

பெண்களின் வித்தியாசமான உயிரியல்கட்டமைப்பும், ஹோர்மோன்களும் அவர்கள் எளிதில் திடீர் மனநிலை மாற்றங்களுக்கு உட்பட வழி வகுக்கின்றன.

பெண்களுக்கு ஏற்படும் பொதுவான மனநலப் பிரச்சினைகள் நாம் சாதாரண விடயம் என நினைக்கும் பல வியங்கள் மனநலப் பிரச்சினைகளாக இருக்க வாய்ப்புள்ளது. அதுவும் பெண்களுக்கு அதிகம். பெண்களின் வித்தியாசமான உயிரியல் கட்டமைப்பும், ஹோர்மோன்களும் அவர்கள் எளிதில் திடீர் மனநிலை மாற்றங்களுக்கு உட்பட வழிவகுக்கின்றன.

உலக சுகாதார அமைப்பின் கூற்றின்படி, பெண்கள் எதிர் கொள்ளும் மனநலப் பிரச்சினைகளில் மிகவும் பொதுவான ஒன்றாக இருப்பது மன இறுக்கமாகும்.

அதே சமயம் ஆவணப்படுத்தப்படாத நிகழ்வுகள் ஏராளமாக இருக்கலாம். இதற்குக் காரணம், பெரும்பாலான சமயங்களில் அவை வெறும் திடீர் மனநிலை மாற்றங்களாக வந்து சென்றுவிடுகின்றன, ஏதோ சில நாள்கள் நீடிக்கும் மன இறுக்கமாகக் கருதப்படுகின்றன, அவை தானாக சரியாகிவிடும் என்று கண்டுகொள்ளப்படுவதில்லை.

உண்மையில், மனதை வருத்தும் சோகமும், நம்பிக்கையின்மையும் இருக்கும் நிலையே மன இறுக்கமாகும். தினசரி செயல்பாடுகளில் ஆர்வம் குறைவது, மிக அதிகமாக அல்லது மிகக் குறைவாகத் தூங்குவது, அளவுக்கு அதிகமாக சாப்பிடுவது அல்லது சாப்பிடாமல் இருப்பது, நம்பிக்கை இழந்த உணர்வோடு காணப்படுவது, தன்னைப் பற்றிய மதிப்பின்றி இருப்பது, சோர்வாக இருப்பது போன்றவை மன இறுக்கத்தின் பிற அறிகுறிகளாகும்.

மேலே குறிப்பிட்ட அறிகுறிகளும், திடீர் மனநிலை மாற்றங்களும், எரிச்சல் மற்றும் தற்கொலை எண்ணங்கள் ஆகியவையும் மன இறுக்கம் உள்ளது என எச்சரிக்கும் அடையாளங்களாகும்.

இந்த அறிகுறிகளில் ஒன்றோ, சிலவோ இரண்டு வாரங்களுக்கும் மேல் தொடர்ந்து நீடித்தால், உளவியல் நிபுணரிடம் ஆலோசனை பெற்று தகுந்த சிகிச்சை பெற்றுக்கொள்வது அவசியமாகும்.





# கர்ப்ப கால குமட்டலை சமாளிப்பது எப்படி?

மசக்கை ஒவ்வொரு நபருக்கும் வேறுபடும். சிலருக்குக் குமட்டல் ஏற்பட்டு சமாளித்துக்கொள்வார்கள். அறிகுறிகள் காலையிலும், வேறு சிலருக்கு பிற வேளைகளிலும், சிலருக்கு நாள் முழுவதும் நீடிக்கும். இந்த அறிகுறிக்கு, கர்ப்பகாலத்தின் தொடக்கத்தில் ஏற்படும். ஹோர்மோன் மாறுபாடுகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இதிலிருந்து நிவாரணம் பெற, பின்வரும் குறிப்புகளைப் பின்பற்ற முயற்சிக்கலாம்.

தினமும் மூன்று வேளை சாப்பிடுவதற்குப் பதில், குறுகிய இடைவெளிகளில் கொஞ்சம் கொஞ்சமாகச் சாப்பிடுங்கள். இத்தகைய சின்னச் சின்ன மாற்றங்களை மேற்கொள்வதன் மூலம் மசக்கையைச் சமாளிக்கலாம்.

காலையில் எழுந்ததும் குமட்டல் மிகவும் அதிகமாக இருந்தால், வறுத்த, உலர்ந்த உணவு அல்லது பிஸ்கட் போன்றவற்றை எழுந்திருக்கும் போதே சாப்பிடுங்கள்.

குமட்டலைத் தூண்டும் உணவுகளையும், வாசனைகளையும் தவிருங்கள். உங்களுக்கும், பிறருக்கும் ஏற்ற உணவாகத் தேர்தெடுத்து தயாரித்துக் கொடுங்கள். அசௌகரியத்தைத் தராத, அதேசமயம், உடல் நலனுக்கு ஏற்ற உணவுப் பொருள்களைச் சாப்பிடுங்கள்.

குமட்டலைப் பற்றி நினைத்துக் கொண்டே இருந்தால்தான் அது அதிகமாகும். எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்குக் கவனத்தை வேறு பக்கம் திருப்புங்கள். குமட்டல் குறையும்.

அதிகமாக வாந்தி வருவது அரிது தான். அது நீடிக்குமானால் நீரிழப்பு மற்றும் எலெக்ட்ரோலைட் சமசீரின்மை உண்டாகலாம். உடனே மருத்துவரைத் தொடர்பு கொள்ளுங்கள்.

கர்ப்பகாலத்தின் முடிவு வரை குமட்டல் தொடர்ந்தால், ரத்த அழுத்தம் மற்றும் சிறுநீர்ப் பரிசோதனை செய்துகொள்ள மருத்துவரிடம் செல்லுங்கள்.

## பங்களாதேஷ் நாட்டுக்கு 3 ஆவது முறையாக ஒரு திருத்தந்தை

பங்களாதேஷ் நாட்டுக்கு மூன்றாவது முறையாக ஒரு திருத்தந்தை வருகிறார். 1970ஆம் ஆண்டு டாக்கா விமான நிலையத்தில் ஒரு மணி நேரம் செலவழித்த திருத் தந்தை 6ஆம் போல் மற்றும் 1986 ஆம் ஆண்டு ஒருநாள் பயணமாகச் சென்ற திருத்தந்தை 2ஆம் ஜான்பால் ஆகியோரைத் தொடர்ந்து திருத்தந்தை பிரான்சிஸ் மூன்றாவது திருத்தந்தையாக அங்கு செல்கிறார்.

காலைக்கதிர் Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ் TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

## இலங்கைக் கரித்தாஸ் நிறுவன 50 ஆண்டுகள்

இலங்கையில் அன்புப்பணி புரியும் கத்தோலிக்க கரித்தாஸ் அமைப்பு தன் பணிகளைத்தொடங்கிய 50 ஆம் ஆண்டு நிறைவை அண்மையில் கொழும்பில் கொண்டாடியது. இலங்கை கரித்தாஸ் அமைப்பின் தலைவரான கண்டி ஆயர் கலாநிதி வியன்னி பெர்னாண்டோ ஆண்டகை திருப்பலி நிறைவேற்றினார். 1968ஆம் ஆண்டு ஜோ பெர்னாண்டோ அடிகளாரால் தொடக்கப்பட்ட இந்த அமைப்பு 13 மறைமாவட்டங்களில் பணியாற்றுகிறது.

# யாழ். ஆயர் பணியின் இரண்டாம் ஆண்டு திருப்பலி ஒப்புக் கொடுத்து கொண்டாட்டம்



மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப் பிரகாசம் ஆண்டகையின் பணி நிறைவின் இரண்டாம் ஆண்டு நவம்பர் மாதம் 28ஆம் திகதி ஆயர் தலைமையில் குருமுதல்வர் கலாநிதி பி.ஜெ. ஜெபரட்ணம் அடிகளாருடன் அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த மூத்த குரு லூயிஸ் பொன்னையா அ.ம.தி அடிகளார் இணைந்து திருப்பலியை ஒப்புக் கொடுத்துக் கொண்டாடினர்.

மறையுரையாற்றிய குருமுதல்வர், குருத்துவத்தையும் ஆயருக்கும் குருக்களுக்கும் இறை மக்களுக்கும் இடையிலான தொடர்பையும் விளக்கினார். குருக்கள் ஆற்றுகின்ற பணி அனைத்தும் ஆயரின் பணிகள் என்றும் இறை மக்கள் சமூகத்தில் ஆயரை யும் குருக்களையும் இறைமக்களையும் இணைக்கும் பிரதிநிதிகளாக அவர்கள் செயற்படுகிறார்கள் என்றும் தெரிவித்தார்.

குருக்கள் ஆற்றுகின்ற பணிகள் அனைத் தும் ஆயருடையதே. ஆயர் ஒவ்வோர் இடத்திற்குத் தாமாக நேரடியாகச் சென்று செய்ய முடியாத பணிகளை எல்லாம் அவரின் பிரதிநிதிகளாகப் பங்குத் தளங்களில் இருந்து குருக்கள் ஆற்றுகின்றனர். குருக்கள் ஆற்றுகின்ற பணிகளுக்கான கௌரவம் ஆயருக்கு வருகின்றபோது குருக்கள் விடுகின்ற தவறுகளின் தாக்கங்களும் ஆயரையே தாக்குகின்றன.

பங்குகளில் ஏற்படுகின்ற முரண்பாடுகளை யும் குறைகளையும் தீர்த்துவைக்க முற்படுகின்ற போது குருக்கள் துன்பப்படுகின்றார்கள். அந்த துன்பங்களையும் ஆயர் தம்முடைய தாக்கிக் கொள்ளுகிறார். இறை மக்கள் மத்தியில் குருக்கள் பணியாற்றும் போது அவர்கள் ஆயரையும் இறைமக்களையும் இணைத்து நிற்கிறார்கள். - என்றார்.

## உண்மையின் எண்ணங்கள்

மேதகு யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் பணி ஏற்புடன் யாழ்ப்பாண மறைமாவட்டம் புதிய சகாப்தம் நோக்கி; விரையும் என எதிர்பார்க்கப்பட்டது. பலராலும் பல காலம் எதிர்பார்க்கப் பட்ட ஆளுமை மிக்க தலைவர் அவர்.

உயர்ந்த உருவம் - நிமிர்ந்த பார்வை - கம்பீர நடை - சிரித்த முகம் - கனிவான பார்வை - கவனமான பேச்சு - கடமையில் கவனம் - சிறந்த நிர்வாகம் - தூர நோக்கு - துணிவான செயல்முறை - ஆட்கொள்ளும் சுபாவம் என அனைத்தும் நிறைந்த ஆளுமை கொண்ட ஒருவரான மேதகு யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை யாழ். மறைமாவட்டத்திற்கு காலத்தின் தேவை கருதிக் கடவுளால் வழங்கப்பட்ட கொடை. மரியன்னை வழி இயேசுவிடம் - என்னும் விருது வாக்குடன் பணியைத் தொடங்கிய இவர், அன்னை மரியாள் வழி அனைத்தையும் வழிநடத்தப் போகிறார் என எதிர் பார்க்கப்பட்டது.

அவரின் இரண்டு ஆண்டு நிறைவில் அவர் நிறையவே விதைத்துள்ளார். அறுவடையை அனுபவிக்க சில காலம் காத்திருப்போம்.

## மறைந்த முன்னாள் யாழ் மறைவாட்ட ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகையின் பிறப்பின் நூற்றாண்டு விழா



மறைந்த முன்னாள் யாழ் மறை மாவட்ட ஆயர் மேதகு கலாநிதி வ.தியோகுப்பிள்ளை ஆண்டகையின் பிறப்பின் நூற்றாண்டு (1917-2017) கனடா ரொரென்றோவில் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியின் முன்னாள் அதிபர் ஏ.ஐ.பேணாட் அடிகளாரின் திருப் பலியுடன் 24 நவம்பர் 2017 அன்று சிறப்பாக கொண்டாடப்பட்டது. ஆயர் மேதகு வ.தியோகுப்பிள்ளை ஆண்டகையின் தமிழ் இலக்கியத்திற்கான பங்களிப்பும் மறைக்கல்விக் கான பங்களிப்பும் ஏழைகள் மட்டில் அவர் கொண்டிருந்த பரிவும் எல்லோரும் அறிந்த விடயங்களாக இருக்கின்றவேளை அவை பற்றி இத்திருப்பலியில் பேசப்பட்டது.

## "ஆயரும் குருக்களும் இணைந்தே சிறப்பாகப் பணியாற்ற முடியும்"

குருக்கள் இன்றி ஆயரால் ஒன்றும் செய்ய முடியாது அதேபோல ஆயர் இன்றி குருக்களாலும் எதுவும் செய்ய முடியாது. இரண்டு பேரும் இணைந்து பணியாற்றும் போதே சிறப்பாகச் செயற்பட முடியும்.

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையில் குருக்களைப்பற்றிய பேச்சு வருகின்ற போதெல்லாம் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் அவர்களை உருவாக்குகின்ற குருமடங்கள் மேலே செல்கின்றன.

கண்டி தேசிய அம்பிற்றிய குருமடத்தில் தாம் கல்வி கற்ற போது அங்கு பணியாற்றிய அமலமரித் தியாகிகள் குருக்களான ஜிம்குக் அ.ம.தி , போப்ஸ் அ.ம.தி லூயிஸ் பொன்னையா அ.ம.தி. போன்ற பலரின் ஒழுக்கம் மிகுந்த பணியையும் திறமை மிகுந்த கல்வியையும் பாராட்டினார்.

ஆயர் மேலும் தெரிவிக்கும்போது, தம்மோடு இணைந்து பணியாற்றிய அனைத்துக் குருக்களுக்கும் நன்றி தெரிவித்து தமது பணிகளில் நிர்வாகப் பணியைப் பொறுப்பாக ஆற்றி வரும் குருமுதல்வர் கலாநிதி பி.ஜெ. ஜெபரட் ணம் அடிகளாருக்கு நன்றி தெரிவித்தார்.




# தமிழ் நேசன் அடிகளாருக்கு விருதுகள்

தமிழ் நேசன் அடிகளாருடைய பணி களைக் கௌரவிக்கும் முகமாக அவருக்குப் பல விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க குருவும் மன்னார் தமிழ்ச் சங்கத்தின் நிறுவுநரும் மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையமான கலையருவி அமைப்பின் இயக்குநரும் மன்னா கத்தோலிக்க பத்திரிகையின் ஆசிரியருமாகிய தமிழ் நேசன் அடிகளார் கடந்த 20 வருடங்களுக்கும் மேலாகப் பல்வேறு தமிழ்ப் பணிகளை ஆற்றி வருகின்றார்.

25 நவம்பர் 2017 அன்று மன் னார் நகர சபை மண்டபத்தில் இடம்பெற்ற மன்னார் மாவட்ட கலை இலக்கியப் பெரு விழா - 2017 நிகழ்வின்போது கலைச்சுரபி விருது தமிழ்நேசன் அடிகளாருக்கு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வுக்குத் தலைமை தாங்கிய மன்னார் அரச அதிபர் தேசப்பிரிய, இந்த விருதை வழங்கினார். இலங்கை இஸ்லாமிய இலக்கிய ஆய்வகத்தால் 13 டிசெம்பர் 2016 அன்று கொழும்பில் நடைபெற்ற உலக இஸ்லாமிய ஆய்வுப் பொன்விழா மாநாட்டில் தமிழ் நேசன் அடிகளாருக்கு விருது வழங்கப்பட்டது. யாழ் இலக்கிய வட்டத்தால் 22 ஜனவரி 2017 அன்று நல்லூரில் நடைபெற்ற கௌரவிப்பு விழாவின் போது யாழ்ப்பாணத்தில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப் பட்டார்.

இலங்கை கல்வி அமைச்சால் 15 ஒக்ரோபர் 2017 அன்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வின் போது தமிழ் நேசன் அடிகளாரின் ஊடகப் பணிகளைப் பாராட்டி ஊடகத்துறைக்கான வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். மன்னார் பிரதேச செயலகத்தால் 11 செப்ரெம்பர் 2017 அன்று மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் நடைபெற்ற பிரதேச கலாசார விழா - 2017 நிகழ்வின்போது கலைச் செம்மல் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.



## ஊர்வம்பு

■ குருவியார்

thamizhkaalaikathir@gmail.com

# காந்தி சொன்னதைப் போன்றே பிரபாவும் சொல்லியிருந்தால்...!



அடித்துப் பெய்த மழை, கொஞ்சம் விட்டுப் பிடித்த நேரத்தில், சந்தியடியில் ஊர்வம்பளக்க, வாத்தியார், ஏரம்பர், ஜீவன், ரூபன், பேப்பர் தம்பி மற்றும் கச்சான் விற்கும் செல்லாச்சி ஆகியோர் கூடியிருந்தனர்.

‘‘முந்தி வெள்ளைவானுக்குப் பயந்து கொண்டு திரிஞ்ச எங்கடை ஆக்கள், இப்ப தேர்தலுக்கு ஆள் பிடிக்கிறவையைக் கண்டு ஒளிச்சுத் திரிய வேண்டியிருக்காம்’’ என்று சொல்லிச் சிரித்தாள் செல்லாச்சி.

‘‘போராட வரச் சொன்னபோது எங்கடை சனம் ஒளிச்சுத் திரிஞ்சதிலை அர்த்தமிருக்கு. இப்ப உள்ளூராட்சித் தேர்தலிலை போட்டியிட வரச் சொன்னாலும் ஒரு சனமும் போகுதில்லையென்றால், எவ்வளவு தூரம் நாங்கள் அரசியல் நீக்கம் செய்யப்பட்டிருக்கிறம் என்று தெரியுது தானே’’ என்று கவலையுடன் சொன்னான் ரூபன்.

‘‘போற போக்கிலை இருக்கிற சப்புச்சவர் எல்லாம் தேர்தலில் போட்டியிடும். இல்லாட்டி இதுக்கும் தெற்கிலை இருந்து ஆக்களை இறக்குமதி செய்யவேண்டியிருக்கும் போல இருக்கு.’’ என்றான் ஜீவன்.

‘‘மக்களுக்காகக் கட்சி என்று இல்லாமல், தலைவர்களுக்காகக் கட்சி நடத்தினால் இப்படித்தான் தேர்தலில் வேட்பாளர் பட்டியலுக்குக் கூட, பிள்ளை பிடிகாரர்போல ஆள் பிடிக்க வேண்டியிருக்கும்’’ என்றாள் செல்லாச்சி.

‘‘உள்ளூராட்சித் தேர்தல் முடிந்த பிறகு அரசு நிறுவனங்களிலை வேலைக்கு ஆள் தட்டுப்பாடு வரும் போல இருக்கு என்று கதைக்கினம்’’ என்று நமுட்டுச் சிரிப்புடன் சொன்னான் பேப்பர் தம்பி.

‘‘இதென்ன கதை சொல்லுறீர். தேர்தல் நடக்கிறதுக்கும் அரச ஊழியர்கள் வேலை செய்யிறதுக்கும் என்ன சம்பந்தம்’’ என்று ஆச்சரியமாகக் கேட்டார் ஏரம்பர்.

‘‘இதென்ன கேள்வி ஏரம்பர்?’’ என்று வம்பளப்பில் கலந்துகொண்ட வாத்தியார், ‘‘கட்சிகள் பலதும் இளம் ஆக்களை இலக்கு வைச்சுத்தான் வலை விரிக்கின்றனவாம். அதனால் வேலை பார்க்கிறவை பலர் தேர்தலில் குதிக்கிற எண்ணத்திலை இருக்கினமாம். அவை தேர்தலிலை வென்று பதவியேற்றால் மக்களுக்கு உழைக்கப் போயிடுவினம். பிறகு அவை முதல் பார்த்த வேலையைப் பார்க்கிறதுக்கு ஆள் தட்டுப்பாடு வரும்தானே’’ என்று நிலைமையை விளக்கினார்.

‘‘எத்தனை தேர்தல் வந்து, எத்தினை பேர் வென்று,எப்பிடிப்பட்ட கதிரையிலை போய் இருந்தாலும்,’ அரிய மாட்டாதவன் இடுப்பிலை ஐம்பத்தெட்டு அரிவாள்’ என்பதாகத்தானே நிலைமை இருக்கு’’ என்று சலித்துக் கொண்டாள் செல்லாச்சி.

அதற்கு ஏரம்பர் ‘‘உனக்கு எந்த நேரமும் அந்தக் காலம் மாதிரி வருமோ; அவைக்கு நிகர் இருக்கோ’ என்று பழங்கதை கதைக்கிறதே வேலையாகப் போச்சு’’ என்று செல்லாச்சியைக் கடிந்து கொண்டார்.

‘‘நான் பழங்கதை கதைக்கவில்லை. ஆளாளுக்கு வரிவிலக்கு வாகனங்களிலை சொகுசா போயினம். ஆனால், அன்றாடங் காய்ச்சிகள் போய் வாற பேருந்துகள் வேலை நிறுத்தத்தால் ஓடவில்லை. அதிலை தலைப்போட்டு பிரச்சினையைத் தீர்க்கிறதுக்கு வக்கில்லை. வாக்குப் பொறுக்கிறவையிலை ஒருத்தராவது சம்பந்தப்பட்ட தரப்புகளோடை களத்திலை இறங்கிக் கதைச்சு முதலிலை பேருந்துகளை ஓடவைக்கிற வழியைப் பார்த்திருக்க வேணும். நியாயத்தைக் கதைக்கப் பயம். ஒரு தரப்பைப் பகைச்சாலும் அந்த வாக்குகள் கிடைக்காமல் போய்விடும் என்று பயம். எவன் எக்கேடு கெட்டால் என்ன, தமக்கு வாக்கு வந்தால் போதும் என்ற மனோபாவம்தானே காரணம்.பிரச்சினைகள் வராத, எங்கையாவது யாராவது போராட்டம் நடத்திற இடங்களிலை - தங்களுக்குப் பிரச்சினை வராது என்று தெரிந்த பிறகு - போய் முன்னுக்கு நிற்பதுதானே இப்ப வழமையாகிப் போச்சுது’’ என்று பொரிந்து தள்ளினாள் செல்லாச்சி.

‘‘எல்லாம் எங்களின் தலையெழுத்து’’ என்று சொன்ன வாத்தியார், கவலையுடன் கதைக்கத் தொடங்கினார்.

‘‘ஈழத்தமிழருக்கு உரிமைகள் வேண்டும் என்று கேட்கத் தொடங்கினம். பிறகு தனி ஈழம் கேட்டம்.கடைசியிலை இருக்கிற இலங்கையிலும் பற்று இல்லாமல், உரிமையோடு வாழத் தேசமும் இல்லாமல் திரிசங்கு நிலையில் நிற்கிறோம். எமது அரசியல் தலைமைகளோ தேர்தல் காலங்களில் தனி ஈழக் கனவை விசிறி எரிய விட்டுக் கொண்டே, ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வு கிடைக்கும் என்று அங்கலாய்த்துக் கொண்டிருக்குதுகள். கடைசியில் தேசப்பற்றோ, நிர்வாகத்தின் மீது கட்டுப்பாடோ, பொறுப்போ இல்லாததன்மை பரவிக்கிடக்கிறது. எல்லா இடங்களிலும் எந்தத் தவறுக்கும் எவரும் பொறுப்பேற்காத நிலையும், எந்தவொரு மக்கள் பிரச்சினைக்கும் - பொதுநலனின் அடிப்படையில் - தொலைநோக்குப் பார்வையுடன் உடனடியாகத் தீர்வு காண முன்வராத நிலையில்தான் நிர்வாக இயந்திரம் செயற்படுகிறது. ’செக்கு மாட்டுக்கு வைக்கோலை முன்னுக்குக் கட்டி விட்ட மாதிரி,இனப்பிரச்சினை, தீர்வு என்று நாங்களும் சுற்றிச் சுற்றி வருகிறமே தவிர, நிர்வாகக் குளறுபடிகளைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. இந்த நிலை புற்றுநோய் மாதிரி எங்களை அழிச்சுக் கொண்டிருக்கிறது என்பதுதான் உண்மை’’ என்று சொல்லி முடித்தார் வாத்தியார்.

இதற்கு ரூபன், ‘‘மக்களால் போற்றப்படும் தலைவர்களாக இருந்தவர்களை, இன்று வணங்கப்படும் தலைவர்களாக்கி, அவர்கள் பெயரால் பலரும் அரசியல் நடத்துகிறார்களே தவிர, தத்தமது தலைமைத்துவப் பண்பினால் வழிநடத்தும் தலைமைகளைக் காணத் தவம் கிடக்க வேண்டியிருக்கு’’ என்று சலிப்பாகச் சொன்னான்.

அப்போது கைபேசியிலிருந்து தலையை நிமிர்த்திய ஜீவன், ‘‘இந்தியா சுதந்திரம் அடைந்த போது மகாத்மா காந்தி சொன்ன மாதிரி, விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனும் சொல்லியிருந்தால் இப்ப எங்கடை அரசியல் இப்போதைய நிலையை விடச் சீராக இருந்திருக்கும் என்று நினைக்கிறன்’’ என்று புதுக்கதையை ஆரம்பித்தான்.

‘‘அப்பிடி காந்தி என்ன சொன்னவர்?’’ என்று கேட்டார் ஏரம்பர்.

அதற்கு விளக்கமளித்த ஜீவன், ‘‘இந்தியக் கொங்கிரஸ் கட்சித் தலைமையில் பலதலைவர்களும் இணைந்து அரசியல் நடத்தியபோதுதான் இந்தியா சுதந்திரம் அடைந்தது. அதே நேரம் சுபாஸ் சந்திரபோஸ் போன்ற தலைவர்கள் ஆயுத வழிப் போராட்டத்தையும் நடத்தினார்கள். இப்படி அவரவர் தமக்குச் சரியென்று தோன்றிய வழிகளில் போராடினார்கள். ஒட்டுமொத்தப் போராட்டங்களின் பயனாகவும், அப்போதைய உலக ஒழுங்கமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களின் காரணமாகவும் பிரிட்டன் இந்தியாவை விட்டு வெளியேறியது. அப்போது அரசியல் அமைப்பாக இயங்கிய இந்தியக் கொங்கிரஸ் கட்சியின் கையில் சுதந்திர இந்தியா கிடைத்தது.’’ என்று சொல்லி நிறுத்தினான்.

‘‘அட இது பழங்கதை. காந்தி சொன்னதைச் சொல்லன்’’ என்று அவசரப்பட்டார் ஏரம்பர்.

அவரது அவசரத்தைப் பார்த்துச் சிரித்தபடியே மீதிக்கதையைச் சொல்லத் தொடங்கிய ஜீவன், ‘‘இந்தியா சுதந்திரம் அடைந்ததற்குக் காரணமான கட்சி என்று மக்கள் இந்தியக் கொங்கிரஸ் கட்சிக்கே தொடர்ந்து ஆதரவளிப்பது எதிர்காலத்தில் இந்தியாவுக்கு ஆபத்தாகிவிடும் என்று நம்பிய காந்தி, சுதந்திரத்துக்குப் பிறகு இந்தியக் கொங்கிரஸ் கட்சியைக் கலைத்துவிட்டு, அதிலிருக்கும் தலைவர்கள் தத்தமது கொள்கைக் கோட்பாடுகளின் அடிப்படையில் கட்சிகளை உருவாக்கி அரசியலில் ஈடுபடவேண்டும் என்று சொன்னார். ஆனால், சுதந்திர இந்தியாவின் பிரதமராகப் பதவியேற்ற இந்தியக் கொங்கிரஸ் கட்சியின் நேரு அதனைச் செய்யவில்லை.’’ என்று சொல்லி முடித்தான் ஜீவன்.

‘‘அதுதான் நேரு பரம்பரையில் அவரது மகள் இந்திரா, அவவின் மகன் ராஜீவ், அவரின் மனைவியான இத்தாலி நாட்டுச் சோனியா கடைசியாக அவவின் மகன் ராகுல்காந்தி என்று இந்தியக் கொங்கிரஸ் கட்சியின் தலைவராகி இருக்கிறதிலை வந்து நிற்குது. இதிலிருந்தே மகாத்மா காந்தியின் அச்சம் நியாயமானது என்று தெரியுது’’ என்று தனது அரசியல் அறிவைக் காட்டினாள் செல்லாச்சி.

‘‘இதிலை இன்னொன்றும் இருக்கு. இந்தியாவின் சுதந்திரத்துக்காகப் போராடிய இந்தியக் கொங்கிரஸ் கட்சியிலிருந்து பல தலைவர்களும் வெளியேறி அல்லது திட்டமிட்டு வெளியேற்றப்பட்டு அந்தக் கட்சி இடையிலை இந்திரா கொங்கிரஸ் என்று பெயரும் பெற்று, இறுதியாகத் தலைமைக்கு வால்பிடிக்கிறவையும், தலையாட்டுறவையும் மட்டுமே நிறைந்த ஒரு கும்பலாக மாறிவிட்டது. ஆனாலும் இந்தியாவுக்குச் சுதந்திரம் பெற்றுக்கொடுத்த இந்தியக் கொங்கிரஸ் கட்சி இதுதான் என்று இன்றும் நம்பவைக்கப்படுகிறது’’ என்று தனக்குத் தெரிந்ததைச் சொன்னான் ரூபன்.

அதனைத் தலையாட்டி ஆமோதித்த ஜீவன், தனது கதையைத் தொடர்ந்தான்.

‘‘காந்தி சொன்னது போன்றே விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனும்’ விடுதலைப் புலிகள் அமைப்பு இல்லாமல் போனால், அதன் பிறகு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கலைத்துவிட்டு அதில் உள்ள கட்சிகளும் அமைப்புகளும் தத்தமது கொள்கை கோட்பாடுகளை முன்வைத்து அரசியலில் ஈடுபடவேண்டும் என்று சொல்லியிருந்தால் இப்ப ஈழத்தமிழரின் அரசியல் இன்னும் செம்மையான திசையில் போயிருக்கும் என்று நினைக்கிறன்’’ என்று சொன்னான் ஜீவன்.


இதைக்கேட்ட பேப்பர் தம்பி, ‘‘ஒரு போராட்டம் அடைய வேண்டிய இலக்கையும், அந்த இலக்கை அடைவதற்கான வழிமுறையையும் கொண்டிருக்கவேண்டும். ஆனால், எதை அடையப்போகிறோம் என்ற உறுதியான இலக்கு ஈழத் தமிழருக்கு இருக்கா என்பதோ, அதனை அடைவதுக்கு என்ன வழியைப் பின்பற்றப் போகிறோம் என்பதோ, அதுக்கு மக்களின் பங்களிப்பை எப்படி செயற் படுத்துவது என்பது பற்றியோ இங்கு எந்தக் கட்சிக்கும் ஒரு நிலையான - தெளிவான- பகிரங்க - நிலைப்பாடு கிடையாது. எல்லாக் கட்சிகளும் அடைய நினைக்கும் இலக்கை உச்சமாகத்தான் சொல்கின்றன. ஆனால், அதனை அடைவதற்கான வழிகளும் செயற்பாடுகளும் கொஞ்சம் கூட நம்பிக்கை தருவனவாக இல்லை என்பதே கவலை தருகிறது.’’ என்றான்.

அதைக் கேட்ட செல்லாச்சி, ‘‘கனடாவிலை இறக்கி விடுவதாகச் சொல்லி முழுக்காசையும் வாங்கிக் கொண்டு, கூட்டிக்கொண்டு போய் இடை நடுவிலை விட்டுப் போட்டு’ இப்பிடியே நேராப் போய் வலது பக்கம் திரும்பினால் கனடாதான்’ என்று பேய்க்காட்டும் வெளிநாட்டு முகவர்கள் மாதிரித்தானே அரசியல்வாதிகளும் இருக்கினம். உரிமைகளைப் பெற்றுத்தருவதாகச் சொல்லி வாக்கு வாங்கி, தங்கடை வசதிகளை வளர்க்கினம். கடைசியாக நாங்கள் நட்டாற்றிலை நின்றாலும் அவைக்கு இழப்பிருக்கப் போவதில்லை என்பதுதானே உண்மை’’ என்று யதார்த்தத்தைப் போட்டுடைத்தாள்.

‘‘நாங்களும் எங்களுக்கு வேண்டியதை’ எவராவது வாங்கித் தருவினம் என்று, அரசியல் பங்களிப்பைப் புறம்தள்ளினால் இப்படித்தானே இருக்கும்’’ என்றான் ரூபன்.

இதை கேட்ட வாத்தியார், ‘‘வட்டுக்கோட்டைத் தீர்மானம் என்று வாய் கிழியக் கதைக்கிறம். அதில் சொல்லப்பட்ட தனிநாட்டுக் கோரிக்கையைப் பிடிச்சுத்தான் இன்றும் தொங்குகிறோம். ஆனால், அதில் ‘தமிழ்த் தேசிய இனத்தின் இறைமையையும் சுதந்திரத்தையும் வென்றெடுப்பதற்கான போராட்டத்திற்கான செயல் திட்டமொன்றை மிதமிஞ்சிய தாமதமின்றி வகுத்தமைத்து அதனைத் தொடங்கவேண்டுமென தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் செயற்குழுவை இம்மாநாடுபணிக்கின்றது’ என்று சொல்லப்பட்டிருப்பதை இன்று எவரும் கதைப்பதில்லை. தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து வாக்கு வாங்கிப் பதவிகளைப் பிடித்த பின்னர் சரியான - தெளிவான - யதார்த்த - நிலைக்கு ஏற்ற செயற்திட்டம் வகுக்கப்படவில்லை. ஒருவேளை செயற்றிட்டம் வகுக்கப்பட்டிருந்தால் இத்தனை அழிவுகள் வராமல் போயிருக்கலாம். மீண்டும் அதே தவறுதான் நடக்குது. இன்னும் என்னென்னெல்லாம் பார்க்க வேண்டியிருக்கோ?’’ என்று வேதனையுடன் சொல்லியபடியே எழுந்து நடந்தார்.

மற்றவர்களும் அவரைத் தொடரவே, கச்சான் கடையைக் கட்டத் தொடங்கினாள். செல்லாச்சி.



## செப்புகிறார்... சின்னப்பு!

வணக்கமுங்கோ!

கனநாளைக்குப்பிறகு போன கிழமை இதாலை வந்தாப் போல, சில விசயங்களைப் பறைஞ்சு போட்டுப் போனநிலையிலிருந்து ஒரு சில ஆள்கள் 'என்ன பேந்து பழையபடி இந்த மனிதன் 'நோண்ட' வெளிக்கிட்டிருக்கிறான்?' எண்டு உங்கினேக்கை புறுபுறுத்தவையாம்.

ஆரெவை புறுபுறுத்தென்ன? அலட்டித்துப்பியென்ன? சரி அது கிடக்கட்டும்.

நான் இப்ப விசயத்துக்கு வாறன்.

இந்த இலங்கை நாட்டிலை உண்மையான ஜனநாயக மரபான ஆட்சி நடக்குதெண்டு சொன்னால், எந்தவொரு குடிமகனுக்கும், பேசுறதுக்கும், கதைக்கிறதுக்கும், எழுதுறதுக்கும் பூரண சுதந்திரம் இருக்க வேணும் பாருங்கோ!

ஒரு மனிசனானவன் சரி பிழையளைச் சுட்டிக்காட்டி, கதைக்கிறதுக்கும் அதை எழுதுறதுக்கும் கட்டுப்பாடோ அல்லாட்டி ஒரு தடை உத்தரவோ இருக்குமாயிருந்தால், அவன் அந்த நாட்டுக் பிரசையுமில்லை. அந்த நாடும் தன்னை ஒரு ஜனநாயக நாடு என்று சொல்லுறதுக்கும் தகுதி இல்லை.

மஹிந்தவின்ர ஆட்சியில அனைத்துச் சுதந்திரங்களும் முடக்கப்பட்டதெண்டும், மைத்திரி வந்தாப்போல அதுபடிப்படியாக நீக்கப்பட்டாச்செண்டும் உங்கினேக்கை சனங்களுக்கு நடுவில அரசல் புரசலாக் கதையள் அடிபட்டதென்னவோ உண்மைதான் பாருங்கோ!

ஆனா - விசயம் வெளிப்பார்வைக்குத் தான் அப்படித் தெரிஞ்சுதேயொழிய, மறுபுறத்தில பலபேர் சுருக்கமாகச் சொன்னா உந்தப் பேப்பர் காரனுங்கள் உண்மையைக் கதைக்கிறதுக்கும், மனசில பட்டதை வெளிப்படையாக எழுதி உந்தப் பேப்பருகளுக்கு அனுப்புறதுக்கும் இப்பவும் பின்னடிக்கினம்... எண்ட சங்கதி வெளியே வராமல் கிடக்கிறது ஆருக்கேன் தெரியுமே...?

என்ன பிரச்சினையெண்டால்-

அண்டைக்குப் பாருங்கோ! யாழ்ப்பாண ரவுணுக்குள்ள எனக்குத் தெரிஞ்ச ஒரு பொடியனை எதிர்பாராமல் சந்திக்க வேண்டி வந்திட்டுது.

பொடியன்ர முகத்தில முந்தின 'களை' இல்லை. ஏதோ முகமனுக்காக சிரிச்சுக்கொண்டு, என்னோடை கதைச்சான். சண்டைக்கு முன்னம் வன்னியில இயக்கத்தின்ர கட்டுப்பாட்டுக்குள்ள இருக்கேக்கை அவையளின்ர ஊடகங்களில வேலை செய்தவன். பலதும் பத்தும் எழுதினவன். மனதில பட்டதை சட்டெண்டு வெளிப்படுத்தினவன்.

இயக்கத்தின்ர கட்டுப்பாட்டுக்கை இருக்கேக்கை அவனுக்கு எழுதுறதுக்கு நிறையச் சுதந்திரம் இருந்தது. எங்கெங்கை அக்கிரமம் அநியாயம் நடக்குதோ, எந்தெந்த அரசியல்வாதியள் தங்கட 'திருக் கூத்துகளை' செய்யினமோ அனைத்தையும் அவன் ஆதாரங்களோடை வைச்சுக் கொண்டு எழுதிக் காட்டினவன்.

போர் ஒண்டு வந்து போன பிற்பாடு, அவன் உந்த எழுத்து வேலையளைக் கைவிட்டிட்டு, ஊருக்குள்ள ஏதோ அண்டண்டு கூலி வேலைக்கெண்டு போய் வந்து, தன்ர வயித்துப்பாட்டைப் பார்த்துக் கொண்டிருக்கிறான்.

''இயக்கத்தின்ர கட்டுப்பாட்டுக்குள்ள இருந்து சுதந்திரமாக எழுதின எனக்கு, இப்ப தமிழ்ச் சனத்துக்குச் சுதந்திரம் கிடைச்சிட்டுது... எண்டு சொல்லுற காலத்தில, எனக்குச் சுதந்திரமாக எழுதேலாமல் கிடக்குது அப்பு...'' எண்டு சொல்லிக் கவலைப்பட்டான்.

என்ன பிரச்சினையெண்டு அறியப் போனால்-

அவன் பொய்யளுக்கு அலங்காரம் செய்ய விரும்பேல்லை. இப்பத்தே நாட்டு நடப்புகளை, எங்கட அரசியல்வாதிமாருடைய சீத்துவக் கேடுகளை வெளிப்படையாக எழுத வெளிக்கிட்டு, அதாலை ஏதும் பிரச்சினையள் வந்து மாட்டுப்பட்டுப் போனாலும் எண்டு... பொடியன் பயப்படுறான்.

எங்கட நாட்டில உண்மையளை எழுத வெளிக்கிட்டு, உடம்பில உயிர் இல்லாமல் போன ஆள்கள் ஏராளம்! ''சில பேர் பிச்சை வேண்டாம் நாயைப் பிடி...'' எண்டு சொல்லிக் கொண்டு வெளிநாட்டுக்குத் தப்பி ஓடியிட்டினம். இந்த லட்சணத்தில எந்தவொரு அரசியல் எம்.பிமார், புரக்கராசிமாருடைய ஆதரவுமில்லாத இந்தப் பொடியனைப் போல ஆள்கள் மனச்சாட்சியின்படி, அறம் சார்ந்து நிண்டு எழுத ஏலுமே...? சொல்லுங்க பாப்பம்.

''வெளிப்பவறுக்குப் பார்த்தால் இப்ப எல்லாம் சுதந்திரமாத்தான் தெரியுற மாதிரிக்கிடக்குது. பிறகு காட்சியள் மாறி கதிரையள் கட்டிலுகளும் மாறி 'பேயள் - பினாத்துகள்' வந்து குந்திச்சுதுகள் எண்டால், நிலைமை படுமோசமாகத்தான் இருக்கும் அப்பு...'' எண்டும் பொடியன் சொல்லிப் போட்டுப் போனான் பாருங்கோ!



# அனைத்திலும் உப்பு

## நண்பனா, வில்லனா?

உணவின் ருசிக்கு அடிப்படையான வற்றில் உப்பும் ஒன்று. சோடியம் குளோரைட் எனும் இரசாயனப் பெயருடன் நம் வீட்டுச் சமையல் அறையில் நிரந்தர இடம்பிடித்திருக்கும் உப்பு நல்லதா.. கெட்டதா எனும் விவாதம் தொடர்ந்து நடந்து வருகிறது.

உப்பு என்றாலே அது நாம் அன்றாடம் உட்கொள்ளும் உணவுகளில் மட்டும் பயன்படுத்தப்படுகிறது என்றே புரிந்து கொள்கிறோம். முறுக்கு, தட்டை, 'சிப்ஸ்' போன்ற நொறுக்குத் தீனிகள் தொடங்கி சோடா, மென்பானங்கள், பிஸ்கட் - ரொட்டி வரை பல தின்பண்டங்களிலும் உப்பைச் சேர்க்கிறார்கள்.

உப்பு அதிகமுள்ள உணவு செரிக்காது, மலத்தைக் கட்டிவிடும். உப்பு அதிகம் சேர்க்கப்பட்ட பண்டங்களால் தாகம் அதிகரிக்கும். அதனால் தண்ணீரை அதிகம் குடிப்போம். அந்த நீர் ஆவியாகிவிடாமல் உப்பு காக்கும். அதனால், இதயத்துக்குச் செல்லும் ரத்தத்தில் நீரின் அளவு அதிகரித்து இதயத்தின் பணிச் சுமையை அதிகரிக்கும். ரத்தத்தில் அதிகமாகிவிட்ட உப்பைப் பிரிக்கும் வேலையைச்சிறுநீரகம்மேற்கொள்ளும்.



தொடர்ந்து உப்புப் பண்டங்களை அதிகம் சாப்பிட்டால் அதில் சிறிதளவு சிறுநீரகக் கல்லாகும்.

சிறுநீரகமும் நாள்படப் பழுதடையும். இறுதியில்தான் உப்பு பிரிக்கப் பட முடியாமல் ரத்தத்தில் யூரியா அதிகரிக்கும். அப்போது கை, கால், முகம், வயிறு வீங்கும். உடல் இப்படி 'உப்பு'வதால் இதை உப்பு வியாதி என்று அழைக்கிறார்கள். உப்பினால் ஒவ்வாமை, கொப்புளங்கள், மூக்கடைப்பு, மூக்கில் நீர் ஒழுகுதல் போன்றவை ஏற்படவும் வாய்ப்பு உண்டு.

அதே சமயம், உப்பு முழுக்க முழுக்க வில்லனா என்றால் இல்லவே இல்லை. உணவின் சுவையை நிர்ணயிப்பதுடன், எளிதில் செரிமானிக்கவும் உதவுகிறது. பசியைத் தூண்டுகிறது. பல பண்டங்களைக் கெடாமல் பாதுகாப்பதுடன், குணப் படுத்தும் மருந்தாகவும் செயற்படுகிறது. நம்முடைய வியர்வை, கண்ணீர், சிறுநீர் மூன்றிலும் உப்பு இருக்கிறது. உப்பு உடலில் ஏற்படும் வலிகளை நீக்கும் நிவாரணியாகவும் செயற்படும். தோலில் ஏற்படும் கொப்புளங்கள், கட்டிகளுக்கும், உலர்ந்த தோலாக இருந்தாலும் எண்ணெய் வடியும் தோலாக இருந்தாலும் வெந்நீரில் உப்பு சேர்த்துக் குளித்தால் நிவாரணம் கிடைக்கும்.



தொண்டையில் சளி கட்டி பேச முடியாமல் போகும்போது, உப்பு நீரில் வாய் கொப்பளிப்போம். மூக்கிலும் சைனஸ் குழாய்களிலும் அடைப்பு ஏற்பட்டு தலைவலியும் ஒவ்வாமையும் ஏற்படும்போது, உப்பு நீர் விட்டு கண், மூக்கைச் சுத்தப்படுத்துவது, வேது பிடிப்பதும் உண்டு. முன்பெல்லாம் வெந்நீரில் சிறிதளவு உப்பைப் போட்டுஅந்தத்தண்ணீரில்தான் குளிப்பார்கள். கண் நீர்ச்சத்து இன்றி உலர்ந்துவிட்டால் போட்டுக் கொள்ளும் களிம்பிலும் உப்பு சேர்க்கப்படுகிறது. சரியான அளவில் உப்பு சேர்த்துக் கொண்டால் உப்பு நம் நண்பன்தான்; அளவில்லாமல் பயன்படுத்தி அதைவில்லனாக்குவது நாம் தான்!

★

# 'ஜெ' யின் வாரிசு ...

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அந்த சமயத்தில், என்னைப் பொது வெளியில் மகன் என்று அறிமுகம் செய்வதாக ஜெயலலிதா கூறி னார். ஆனால், அப்படிச் செய்யக் கூடாது என்று ஜெயலலிதா உடன் இருந்த சசிகலா தடுத்துவிட்டார் என்று ஊடகங்களுக்குப் பேட்டி கொடுத்தார்.

சோபன்பாபுவும், ஜெயலலிதாவும் பிரிந்துவிட்டமையால் தான் ஈரோட்டில் ஒரு குடும்பத்துக்குத் தத்துக் கொடுக்கப்பட்டேன் எனவும், அதில் எம்.ஜி.ஆர் சாட்சி கையெழுத்துப் போட்டிருந்தார் எனவும் கூறினார். ஆனால், அவர் சொன்ன திகதியில் எம்.ஜி.ஆர் உடல் நலம் இல்லாமல் இருந்தார். மேலும், அவர் கொடுத்த ஆவணங்கள் எல்லாம் போலி எனத் தெரியவந்தது. இதையடுத்து அவரை சிறையில் அடைக்கும்படி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

மூன்றாவதாக வந்த அம்ருதா. இப்போது பெங்களூரைச் சேர்ந்த அம்ருதா என்பவர், நான்தான் ஜெயலலிதாவின் மகள் என்று சொல்லி உச்ச நீதிமன்றத்தில் மனுசெய்தார்.



அவரை பெங்களூர் உயர் நீதிமன்றத்தில் மனு செய்யும்படி உயர் நீதிமன்ற நீதிபதிகள் அறிவுறுத்தி மனுவைத் தள்ளுபடி செய்தனர். அம்ருதா சில ஊடகங்களுக்கு அளித்த பேட்டியில், நான் 1980 ஆம் ஆண்டு ஜெயலலிதாவுக்குப் பிறந்தேன். நான்தான் அவருடைய உண்மையான மகள். என்னை டி.என்.ஏ சோதனை செய்வதற்கும் நான் உடன்படுகிறேன்.

இந்த ஆண்டு மார்ச் மாதம் தான், நான் ஜெயலலிதாவின் மகள் என்பது எனக்குத் தெரியவந்தது என்று சொல்லி இருக்கிறார். இது ஒருபுறம் இருக்க ஜெயலலிதாவின் உறவினர் என்று சொல்லும் லலிதா என்பவர், ஜெயலலிதாவுக்கு குழந்தை பிறந்தது உண்மைதான்.

எனது பெரியம்மா தான் அவருக்குப் பிரசவம் பார்த்தார். 1980 இல் அவருக்கு குழந்தை பிறந் தது. யாரிடமும் இதைச் சொல்லக் கூடாது என்று ஜெயலலிதா சத்தியம் வாங்கி விட்டார் என்று சொல்லி இருக்கிறார்.

இப்படி ஜெயலலிதாவின் வாரிசு யார்என்றுநடக்கும்குழப்பங்களுக்கு எப்போது முடிவு வரும் என்று தெரியவில்லை. இன்னொரு புறம் நாங்கள் தான் ஜெயலலிதாவின் வாரிசு என்று ஜெயலலிதாவின் அண்ணன் மகளான தீபா, மகன் தீபக் ஆகியோர் கோரிக்கை விடுத்து வருகின்றனர். இந்த சர்ச்சையில் சட்டம்தான் தன் கடமையைச் செய்ய வேண்டும். அதுவரை அனைவருக்கும் குழப்பமா கத்தான் இருக்கும்.

நன்றி - ஜூனியர் விகடன்

# விலங்குகள் விளையாட்டு உலகில் பலவிதம்

ஜல்லிக்கட்டு பிரபலமான வீர விளையாட்டு என்பது நமக்கும் உலகிற்கும் மெரீனா போராட்டத்திற்கு பிறகு தெரிந்திருக்கும். அதேபோல் உலகம் முழுவதும் விலங்குகளுக்கு என நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள் அநேகம். அவற்றில் சில...!



## கிரிக்கெட் துப்புதல் (spitting)

அமெரிக்காவின் பிரபலமான விளையாட்டில் இதுவும் ஒன்று சின்ன வயதில் நாம் யார் அதிக தூரம் துப்புவார்கள் என்ற விளையாட்டை விளையாடி இருப்போம் அதுபோல அமெரிக்காவில் கிரிக்கெட் என்கிற பூச்சியை சாகடித்து அதனை வாயினுள் வைத்துக்கொண்டு நீண்ட தூரத்துக்கு யார் துப்புகிறார்களோ அவர்கள் வெற்றியாளர்கள் என அறிவிக்கப்படுகிறார்கள்.



## நாய் சண்டை

நாய் என்பது மனிதனின் உண்மையான நண்பன் என்ற ஆங்கில பழமொழி ஒன்று உள்ளது. நாய்களை நம்மில் ஒருவராக வீட்டில் வளர்த்து பார்த்து இருப்போம். ஆனால், இன்றும் நாய்களை வைத்துக் கொடூரமான விளையாட்டு விளையாடப்படுகிறது. நாய் சண்டை எப்படி நடத்தப்படுகிறது என்றால் ஒரு வட்டத்திற்குள் இரண்டு நாய்களை ச் சண்டையிடச் செய்து ஒரு நாய் மற்றொரு நாயைக் கொல்லும் வரை அல்லது ஒரு நாய் மற்றொரு நாயை பார்த்து பயந்து வட்டத்தை விட்டு ஓடும்வரை இந்தச் சண்டை தொடர்ந்து நடைபெறுமாம். மேலும் நாய் தோற்றுவிட்டால் அந்த நாயின் உரிமையாளர் அதனைத் துப்பாக்கி யால் சுட்டுவிடுவது வழக்கமாகக் கொண்டுள்ளனர். இந்தக் கொடூரமான விளை யாட்டும் அமெரிக்கா போன்ற நாடுகள் தடை செய்திருந்தாலும் இன்றும் ஸ்பெயின், ஜப்பான் போன்ற நாடுகளில் நடைமுறையில் இருப்பது குறிப்பிடத்தக்கது.



## நத்தை ஓட்டப்பந்தயம்

'நத்தை என்பது மிகவும் மெதுவாக ஊரும் ஒரு கடல் இனம் என்பதுதான், இது நம்மிடம் கிடைத்தால் நிச்சயம் குழம்பு வைத்துவிடுவோம், ஆனால் நத்தைகளுக்கு என ஓட்டப்பந்தயமுனைடெட் கிங்டமில் நடத்தப்படுகிறது பத்து நத்தைகளை வரிசையாக நிற்க வைத்து அதன் ஓட்டுமேல் எண்களைப் பதிவு செய்து 15 அடிவரை ஓட வைக்கிறார்கள். நத்தைகளுக்கு ஓட்டப்பந்தயம் நடத்தும் அளவுக்கு இங்கு வேலை இல்லாமல் பலரும் உள்ளனர் என்பதை இந்த விளையாட்டு உணர்த்துகிறது.



## புறா பந்தயம்

இதனை நீங்கள் மாரி படத்தில் பார்த்து இருப்பீர்கள். புறாக்களுக்கு கூகள் மேப்பை விடப் பலமடங்கு ஜிபிஎஸ் சக்தி அதிகம் என்பது ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனால் என்னவோ இந்தியா மட்டுமன்றி உலகளவில் புறா பறக்கும் பந்தயம் பிரபலமாக உள்ளது. பல மைல்கள் புறாக்களைப் பறக்க விடுகின்றனர் மேலும் குழந்தைகள் தொலைந்து போகாமல் இருக்கக் காலில் கொலுசு மாட்டுவது போல் புறாக்களும் பறக்கும் போது தொலைந்து போகமல் இருக்கக் கால்களில் ஒரு நவீன சிப் மூலமாகக் கண்காணிக்கப்படுகிறது.


## ஒட்டகச் சண்டை

அரேபிய நாடுகளில் பிரபலமான சண்டை விளையாட்டு ஒட்டக சண்டை ஆகும். இதனைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருந்தாலும் இதன் வரலாறு நிச்சயம் தெரிந்திருக்காது. அதாவது, ஒரு பருவமடைந்த பெண் ஒட்டகத்தை அடைய இரண்டு ஆண் ஒட்டகங்கள் சண்டை போடுமாம். இதில் யார் வெற்றி பெறுகிறார்களோ அந்த ஒட்டகத்திற்கு பெண் ஒட்டகத்தைத் திருமணம் செய்து வைப்பார்களாம்.

## பூச்சிகள் சண்டை

சண்டை அல்லது சண்டை படங்கள் இவை இரண்டுக்கும் பெயர்போன நாடு சீன என்பது உலகம் அறிந்த வியம் ஆகும்.

இங்கு பூச்சிகளை சாதாரணமாகவே கடைகளில் காசு கொடுத்து வாங்கி சாப்பிடுபவர்கள் உள்ளனர். அதேபோல் அந்த பூச்சிகளை வைத்து சண்டையும் போடவைகின்றனர் சீன மக்கள். இந்த சண்டை பாரம்பரியமான சண்டைகளில் ஒன்றாகும். பல ஆயிரம் வருடங்களாக இந்தப் பாரம்பரியம் தொடர்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.



## பன்றிகள் ஒலிம்பிக்

ரஷ்யன் நாட்டில் ஒவ்வொரு வருடமும் மிகவும் பிரம்மாண்டமான முறையில் நடத்தப்படும் விளையாட்டு தான் பன்றிகள் ஒலிம்பிக். ஒரு மைதானத்தில் எண்ணெயை ஊற்றி அதில் 20 பன்றிகள் இரு அணியாகப் பிரிந்து கால்பந்து போட்டி நடைபெறுமாம். இதில் வழுக்கிக் கொண்டே எந்த பன்றி வெற்றிபெருகிறதோ அதற்கு பரிசு வழங்கப்படுமாம். மேலும் இந்தப் பன்றிகளைக் கொல்வதற்குத் தடை விதித்துள்ளது ரஷ்யன் பன்றிகள் சங்கம் என்பது குறிப்பிடத்தக்கது.



## காளைகள் விளையாட்டு

ஸ்பெயின் மற்றும் ரஷ்யாவில் விளையாடப்படும் விளையாட்டு தான் இது. அதாவது அங்குள்ள மக்கள் காளைகள் இனம் அழிந்துவிடக்கூடாது என்பதற்காக இந்த விளையாட்டை விளையாடி வருகின்றனர். ஒரு காளையின் கழுத்தில் ஆயிரம் கிலோ எடையை இழுக்க வைப்பது இந்த விளையாட்டின் முக்கிய அம்சம் ஆகும். அதேபோல் மற்றொரு விளையாட்டு ஒரு காளை முன்னால் சிவப்பு கம்பளத்தைக் காட்டி கோபமடைய செய்வது ஆனால், உண்மை என்ன வென்றால் காளைக்கு சிவப்பு நிறம் தெரியாது என்பதுதான். மேலும் இந்த விளையாட்டுக்கு பின் இந்த காளையை அனைவரது முன்பும் கொன்றுவிடுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. நம்மை விட அதிகளவில் வளர்ச்சி அடைந்த நாடுகளாக இருந்தாலும் அவர்களது பாரம்பரியத்தை இன்று பின்பற்றுவது அந்த நாட்டிற்கு பெருமையைச் சேர்க்கின்றது.



## வான்கோழி பவுலிங்

கேட்கவே வித்தியாசமாக இருக்கும். இந்த விளையாட்டு வான்கோழி இறைச்சியை குளிர செய்து சாதாரண பவுலிங் விளையாட்டில் விளையாடப்படும் பந்துக்குப் பதிலாக வான்கோழி இறைச்சியை வைத்து விளையாடப்படுகிறது. இந்த விளையாட்டு அமெரிக்கா மற்றும் கனடா நாட்டில் பிரபலமான விளையாட்டாகும்.

# சீனாவில் அடுக்குமாடியில் தீ விபத்து; 10 பேர் உடல் கருகிப் பரிதாபச் சாவு!





பீஜிங்,டிசெ.03

சீனாவின் துறைமுக நகரான தியான்ஜென் பகுதியில் உள்ள அடுக்குமாடிக் கட்டடத்தில் ஏற்பட்ட தீவிபத்தில் சிக்கி 10 பேர் உடல் கருகிப் பலியாகியுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சீனாவின் வடக்குக் கடலோரப் பகுதியில் அமைந்துள்ள நகரம் தியான்ஜென். துறைமுக நகரான இதன் மையப்பகுதியில் உயரமான அடுக்குமாடிக் கட்டடம் உள்ளது. பல மாடிகளை கொண்ட இந்த அடுக்குமாடிக் கட்டடத்தில் தற்போது சீரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில், அந்த அடுக்குமாடிக் குடியிருப்பில் ஊழியர்கள் நேற்றுமுன்தினம் சீரமைப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அந்த அடுக்குமாடிக் குடியிருப்பின் 38ஆவது மாடியில் திடீரெனத் தீ பிடித்தது. கொளுந்துவிட்டு எரிந்த தீ, மளமளவென அடுத்தடுத்த மாடிகளுக்கும் பரவியது.

தகவலறிந்த தீயணைப்பு படைவீரர்கள் அங்கு விரைந்து வந்தனர். அவர்கள் தீயை அணைக்கப் போராடினர். இந்தத் தீ விபத்தில் சிக்கி உடல் கருகி 10 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 5 பேர் தீக்காயம் அடைந்தனர். இதையடுத்து, மீட்பு படையினர் காயம் அடைந்தவர்கள் மீட்டு அருகில் உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சைக்காகச் சேர்த்தனர்.

முதல் கட்ட விசாரணையில், உள் அலங்காரப் பொருள்களில் தீப்பிடித்ததால் இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2015ஆம் ஆண்டில் தியான்ஜென் நகரில் அனுமதியின்றி பதுக்கி வைக்கப்பட்ட வெடி பொருள்கள் வெடித்ததில் 173 பேர் பலியானமை குறிப்பிடத்தக்கது.

# திறந்தவெளியில் போப் பிரான்சிஸ் பிரார்த்தனை

## 80 ஆயிரம் பேர் பங்கேற்றனர்





டாக்கா,டிசெ.03

பங்களாதேஷ் நாட்டுக்கு வந்துள்ள போப் பிரான்சிஸ், டாக்கா நகரில் உள்ள மிகப்பெரிய பூங்காவில் நேற்று நடத்திய ஜெபக் கூட்டத்தில் சுமார் 80 ஆயிரம் பேர் பங்கேற்றனர்.

மியான்மர் நாட்டில் சுற்றுப் பயணம் செய்து உள்நாட்டுக் கலவரத்தால் பங்களாதேஷ் நாட்டுக்குப் புலம்பெயர்ந்த ரோஹிங்கியா மக்கள் மீள்குடியேற்றம் தொடர்பாக அந்நாட்டு அரசுடன் ஆலோசனை செய்த போப்பிரான்சிஸ் நேற்று முன்தினம் பங்களாதேஷ் நாட்டுக்கு வந்தார்.

டாக்கா நகரில் உள்ள சுஹ்ராவார்டி உட்யன் பூங்காவில் நேற்று மாபெரும் ஜெபக் கூட்டத்தை அவர் நடத்தினார். இந்தக் கூட்டத்தின்போது 16 பேரை பாதிரியார்களாக்கி ஆசீர்வதித்தார். இந்த ஜெப கூட்டத்தில் சுமார் 80 ஆயிரம் பேர் பங்கேற்றனர்.

முஸ்லிம், இந்து, புத்த, கிறிஸ்தவ மதங்களைச் சேர்ந்த மக்களுக்காகக் கூட்டுப்பிரார்த்தனை நடத்தும் போப் பிரான்சிஸ், அங்குள்ள ரோஹிங்கியா முஸ்லிம்களின் தலைவர்கள் சிலரைச் சந்தித்துப் பேசுகிறார். பின்னர், டாக்காவில் உள்ள வத்திக்கான் தூதரகத்தில் பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனாவை சந்தித்து ரோஹிங்கியா அகதிகளின் புனர்வாழ்வு தொடர்பாக ஆலோசனை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஆர்.கே.நகர் இடைத்தேர்தல்:

# அ.தி.மு.கவின் வெற்றி பிரகாசமாக உள்ளது

## முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி நம்பிக்கை

சேலம்,டிசெ.03

ஆர்.கே.நகர் இடைத்தேர்தலில் அ.தி.மு.கவுக்கு வெற்றி பிரகாசமாக உள்ளது என்று முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி நிருபர்களிடம் அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

சேலம் திருவாகவுண்டனூரில் பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் 26.77 கோடி ரூபா மதிப்பீட்டில் கட்டப்பட்ட மேம்பாலப் பணி கடந்த மாதம் நிறைவு பெற்றது.

முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி நேற்றுப் பாலத்தைத் திறந்து வைத்தார். பாலம் வழியாகப் போக்குவரத்தையும் தொடங்கி வைத்தார்.

பின்னர் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி நிருபர்களிடம் கூறியவை வருமாறு:-

ஆர்.கே. நகரில் ஜெயலலிதா வெற்றி பெற்ற பின்னர் பல்வேறு திட்டப்பணிகளை நிறைவேற்றி உள்ளார். மேலும், திட்டப்பணிகள் நடந்து வருகின்றன. இதனால் ஆர்.கே. நகர் இடைத்தேர்தலில் எங்களுக்கு வெற்றி வாய்ப்புப் பிரகாசமாக உள்ளது.



மழையால் பாதித்த பகுதிகளை அமைச்சர் தங்கமணியும், ஐ.ஏ.எஸ். அதிகாரிகளும் பார்வையிட்டு வருகின்றனர். மக்களுக்கு எந்தப் பாதிப்பும் இல்லாமல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தற்போது மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 3 ஆயிரத்து 500இற்கும் மேற்பட்ட மின்கம்பங்கள் சரிந்துள்ளன. இதனைச் சரிசெய்யும் பணியில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர். பாதிக்கப்பட்ட பகுதிகளில் உடனே மின் தட்டுப்பாடு நீக்கப்படும். தினகரன் அ.தி.மு.கவில். அடிப்படை உறுப்பினர் கூடக் கிடையாது என்று தெரிவித்துள்ளார்.

# மார்க்கின் சகோதரிக்கு அமெ.விமானத்தில் பாலியல் தொல்லை

சியாட்டில்,நவ.03

பேஸ்புக் நிறுவுநர் மார்க் ஸுகர்பெர்க்கின் சகோதரிக்கு அமெரிக்க விமானத்தில் பயணி ஒருவர் பாலியல் தொந்தரவு கொடுத்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பேஸ்புக் நிறுவுநரான மார்க் ஸுகர்பெர்க்கின் சகோதரியும் பேஸ்புக் நிறுவனத்தின் முன்னாள் நிர்வாகியுமான ரண்டி ஸுகர்பெர்க் சமீபத்தில் தனக்கு விமானத்தில் நடந்த மோசமான அனுபவத்தை சமூக வலைத்தளத்தில் பதிவு செய்தார். அத்துடன், அது சம்பந்தப்பட்ட விமான நிறுவனத்திற்கும் முறைப்பாட்டுக் கடிதம் அனுப்பி உள்ளார். அதில் அவர் கூறியிருப்பவை வருமாறு:-

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் இருந்து மெக்சிகோவின் மசட்லான் நகருக்கு அலாஸ்கா விமானத்தில் பயணம் செய்தேன். அப்போது என் இருக்கைக்கு அருகில் அமர்ந்து பயணம் செய்த நபர், என்னிடம் தகாத முறையில் நடந்துகொண்டார்.

குடிபோதையில் இருந்த அந்த நபர், பாலியல் தொடர்பாகவும் ஆபாசமாகவும் பேசினார். விமானத்தில் இருந்த மற்ற பெண் பயணிகளின் அங்க அசைவு தொடர்பாகவும் வர்ணித்தார்.

இதுபற்றி விமானப் பணியாளர்களிடம் முறைப்பாடு செய்தேன். ஆனால், அந்த நபர் வழக்கமாக அந்த வழித்தடத்தில் பயணம் செய்பவர் என்பதால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தனிப்பட்ட முறையில் இதனைத் தவறாக எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று கூறியதுடன், எனது இருக்கையை பின்புறம் மாற்ற முன்வந்தனர்.

அவரது முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணையைத் தொடங்கியிருக்கின்றோம் என அலாஸ்கா ஏர்லைன்ஸ் தெரிவித்துள்ளது.



## டில்லி டெஸ்ட்:
# விஜய் மற்றும் கோஹ்லியின் சதம் அதிரடி மழை பொழிந்தது இந்தியா

டில்லியில் நடைபெற்று வரும் இலங்கைக்கு எதிரான 3ஆவது டெஸ்டில் முரளி விஜய் மற்றும் விராட் கோஹ்லி சதம் அடித்துள்ளனர். இதனால் இந்தியாவின் ஓட்ட எண்ணிக்கை அதி வேகத்தில் உயர்ந்தது.

இந்தியா – இலங்கை இடையிலான 3ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி டெல்லி பெரோஸ்ஷா கோட்லா மைதானத்தில் நடைபெற்று வருகிறது. நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் கோஹ்லி துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார்.

அதன்படி இந்திய அணியின் முரளி விஜய், தவான் ஆகியோர் ஆரம்ப வீரர்களாகக் களம் இறங்கினார்கள். இருவரும் ஆரம்பம் முதலே அதிரடி ஆட்டத்தில் ஈடுபட்டனர். அணியின் ஓட்ட எண்ணிக்கை 42 ஆக இருக்கும்போது தவான் 23 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தார். அடுத்து வந்த புஜாராவும் 23 ஓட்டங்களில் வெளியேறினார்.

புஜாரா ஆட்டமிழக்கும்போது இந்தியா 2 விக்கெட் இழப்பிற்கு 78ஓட்டங்கள் எடுத்திருந்தது. அதன்பின் முரளி விஜய் உடன் விராட் கோஹ்லிஜோடி சேர்ந்தார். இருவரும் இலங்கைப் பந்து வீச்சைத் துவம்சம் செய்தனர். இதனால் இந்தியாவின் ஓட்ட எண்ணிக்கை ஓவருக்கு நான்கு ஓட்டங்களுக்கு மேல் சென்று கொண்டிருந்தது.

13 ஓவரில் 50 ஓட்டங்களைத் தொட்ட இந்தியா 23.5 ஓவரில் 100 ஓட்டங்களை எட்டியது. முரளி விஜய் 67 பந்தில் 7 பவுண்டரியுடன் அரை சதம் அடித்தார். இந்தியா முதல் நாள் மதிய உணவு இடைவேளை வரை 27 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 116 ஓட்டங்கள் எடுத்திருந்தது. அப்போது முரளி விஜய் 51 ஓட்டங்களுடனும், விராட் கோஹ்லி 17 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

மதிய உணவு இடைவேளை முடிந்த பின்னர் இருவரும் ஆட்டத்தைத் தொடர்ந்தனர். இந்தியா 35.5 ஓவரில் 150ஓட்டங்களைத் தொட்டது. விராட் கோஹ்லி 52 பந்தில் 10 பவுண்டரியுடன் 50 ஓட்டங்கள் சேர்த்தார்.

இந்தியா 45.5 ஓவரில் 200ஓட்டத்தைத் தொட்டது. சிறப்பாக விளையாடிய முரளி விஜய் 163 பந்தில் 9 பவுண்டரியுடன் சதம் அடித்தார். நாக்பூர் டெஸ்டிலும் முரளி விஜய் சதம் அடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியா தேநீர் இடைவேளை வரை 57 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 245 ஓட்டங்கள் எடுத்திருந்தது. முரளி விஜய் 101 ஓட்டங்களுடனும், விராட் கோஹ்லி 94 ஓட்டங்கடனும் களத்தில் இருந்தனர்.

தேநீர் இடைவேளை முடிந்ததும் விராட் கோஹ்லி சதம் அடித்தார். அவர் 110 பந்தில் 14 பவுண்டரியுடன் இந்த சதத்தை அடித்தார். இது அவரின் 20ஆவது சதம் ஆகும்.

தொடர்ந்து விளையாடிய முரளி விஜய் 155 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து களம் இறங்கிய ரகானே ஷண்டகன் பந்து வீச்சில் 1 ஓட்டத்தை மட்டும் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். இந்திய அணி ஆட்ட நேர முடிவில் 4 விக்கெட்டுகளை இழந்து 371 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. கோஹ்லி 156 ஓட்டங்களுடனும் ரோகித் சர்மா 6 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

இலங்கை அணி சார்பாக ஷண்டகன் 3 விக்கெட்டுகளையும் பெரேரா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றியுள்ளனர்.



# 96 ஆண்டுகால சாதனையை முறியடித்த மார்கோ மரைஸ்

முதல் தரக் கிரிக்கெட் போட்டி ஒன்றில் தென் ஆபிரிக்க வீரர் மார்கோ மரைஸ் அதிவேகமாக 300 ஓட்டங்கள் எடுத்து உலக சாதனை படைத்தார்.

லண்டனில் நடைபெற்ற உள்நாட்டு முதல் தர போட்டியில், Border அணிக்காக ஆடிய மார்கோ மரைஸ், 191 பந்துகளில் 300 ஓட்டங்களை Eastern Province அணிக்கு எதிராக எடுத்துச் சாதனை படைத்துள்ளார்.

இதில் 35 பவுண்டரிகள் மற்றும் 13 சிக்ஸர்கள் அடக்கம், இதற்கு முன்பு, 1921ஆம் ஆண்டு சார்லி மெக்கார்ட்னி என்ற ஆஸ்திரேலிய வீரர், 221 பந்துகளில் நாட்டிங்கம் அணிக்கு எதிராக அடித்த முச்சதமே 96 ஆண்டுகளாகச் சாதனையாக இருந்து வந்தது. 24 வயதான மார்கோ மரைஸ் இந்த வரலாற்றுச் சாதனையை முறியடித்துள்ளார்.

Border அணி 82 ஓட்டங்களுக்கு 4 விக்கெட் என்ற நிலையில் தத்தளித்துக் கொண்டிருந்தபோது களமிறங்கிய மார்கோ மரைஸ், தனது இணை வீரர் பிராட்லி வில்லியம்ஸுடன் சேர்ந்து 428 ஓட்டங்களை குவித்தார். மார்கோ 300 ஓட்டங்களும், பிராட்லி 113 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.



# படுமோசமான சாதனை படைத்த அறிமுக வீரர்!



மேற்கிந்திய அணியின் அறிமுக வீரர் சுனில் அம்பிரிஸ் மிக மோசமான சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து டெஸ்ட் தொடரில் வெஸ்ட் மேற்கிந்தியக் கிரிக்கெட் அணி விளையாடி வருகிறது.

முதல் டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் ஆரம்பமாகிய நிலையில் மேற்கிந்திய அணி முதல் இன்னிங்ஸில் 134 ஓட்டங்களில் சுருண்டது. இப்போட்டியில் அறிமுக வீராக மேற்கிந்தியத்தீவு அணிக்காக களமிறங்கிய சுனில் அம்பிரிஸ் தான் எதிர்கொண்ட முதல் பந்திலேயே ஹிட் அவுட் ஆனார்.

இதன் மூலம் சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டில் முதல் பந்திலேயே ஹிட் அவுட் ஆன உலகின் முதல் வீரர் என்று படுமோசமான சாதனையைப் படைத்துள்ளார். இதோடு அறிமுகப் போட்டியில் ஹிட் அவுட் ஆன வீரர்கள் பட்டியலில் 11 ஆவது வீரராகவும் சுனில் இணைந்துள்ளார்.

## டெஸ்ட் கிரிக்கெட்:
# அம்லா சாதனையை தகர்த்தார் கோஹ்லி



டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் 5 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த இந்திய அணியின் கப்டன் விராட் கோஹ்லி, அம்லாவின் சாதனையை முறியடித்தார்.

இந்தியா–இலங்கை கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான 3ஆவது மற்றும் டெஸ்ட் போட்டி டெல்லி பெரோஸ் ா கோட்லா மைதா னத்தில் நடைபெறுகிறது. நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி கப்டன் விராட் கோஹ்லி, துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார். ஷிகர் தவான் மற்றும் புஜாரா இருவரும் தலா 23 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தனர். 4ஆவது வீரராக கோஹ்லி களமிறங்கினார்.

இப்போட்டியில் அவர் 25 ஓட்டங்களைக் கடந்தபோது, டெஸ்ட் போட்டிகளில் 5ஆயிரம் ஓட்டங்கள் என்ற மைல்கல்லை எட்டி அவர் சாதனை படைத்தார்.

63 டெஸ்ட் போட்டிகளில் பங் கேற்று 105 இன்னிங்ஸில் இந்தச் சாதனையை எட்டியுள்ளார். இதன் மூலம், 5ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த 11ஆவது இந்திய வீரர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார். வேகமாக 5ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த இந்திய வீரர்களில் 4ஆவது இடத்தையும் பிடித்தார்.

## பொறுப்புக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தில்தயக்கத்தைகாட்டுகின்றது என்று தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெஹான் பெரேரா தெரிவித்தார்.

காணாமற்போனோர்குறித்து ஆராயும் அலுவலகத்துக்கான ஆணையாளர்களை நியமிக்கும் சாத்தியம் இருந்தும் அதனை அரசு தாமதிக்கின்றது. பெரும்பாலும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவடைந்ததும் இதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று நம்புகின்றேன்என்றும்அவர்குறிப்பிட்டார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:

நல்லாட்சி அரசு நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல்செயற்பாட்டைவாக்குறுதியளித்தபடி முன்னெடுக்கும் என்று எனக்கு நம்பிக்கை உள்ளது. அதாவது, இந்தச் செயற்பாடுகள்தாமதம் அடைந்தாலும் முன்னெடுக்கப்படும் என்ற நம்பிக்கை வலுவாகவே உள்ளது.

அதாவது நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் செயற்பாடு தொடர்பில் புரிந்துகொண்டுள்ள அரசின் தலைமையே தற்போது பதவியில் உள்ளது. நல்லிணக்கம் எந்தளவு தூரம் முக்கியத்துவம் மிக்கது என்பதனை இந்த அரசு புரிந்து கொண்டுள்ளது.

ஆனால், கூட்டு எதிரணி மிகவும் பலமான முறையில் செயற்படுவதன் காரணமாக அரசால் இந்தச் செயற்பாடுகளைச் சரியான முறையில் முன்னெடுக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது. காணாமற்போனோர் குறித்து ஆராயும் அலுவலகத்துக்கான ஆணையாளர்களை நியமிக்கும் சாத்தியம் இருந்தும் அதனை அரசு தாமதிக்கின்றது.

அத்துடன் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு மற்றும் நட்டஈடு வழங்கும் அலுவலகம்என்பனவற்றைஅமைப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளபோதிலும், அவற்றைச் சட்டமாக்குவதற்கு அரசு தயங்குகின்றது. காரணம் தற்போது உள்ளூராட்சிமன்றத் தேர்தலும் நடைபெறவிருப்பதால் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் விடயங்களை அரசு மேலும் தாமதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. காரணம் தற்போதைய சூழலில் காணாமற்போனோர்அலுவலகத்துக்கு ஆணையாளர்களை நியமித்தால் எதிர்க்கட்சிகள் அதனை வேறுவிதமாகத் தேர்தல் காலத்தில் பிரசாரம் செய்ய ஆரம்பித்துவிடும்.

எனவே அரசுக்கு இந்தச் சூழலில்காணப்படுகின்றசவால்களையும் நாங்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

ஆனால் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலை முன்னெடுக்க வேண்டும் என்ற தேவையும் அரசுக்கு உள்ளது. எனவே தாமதித்தாவது இந்தச் செயற்பாட்டை அரசாங்கம் முன்னெடுக்கும்என்றுநம்புகின்றோம் – என்றார்.

## ரிசாத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கிழக்கு மாகாணத்தில் அனைத்து மாவட்டங்களிலும் தமது கட்சி போட்டியிடவுள்ளதாகத் தெரிவித் துள்ளார்.

இணைந்து போட்டியிடுவது குறித்து, சில கட்சிகளுடன் பேச்சுக்களை நடத்தி வருவதாகவும், எதிர்வரும் நாள்களில் வேட்பு மனுக்கள்தாக்கல்செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

## 20 இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மீனவர்கள் தமிழ்நாடு நாகை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எனவும், இவர்களிடமிருந்து இரண்டு இழுவைப்படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் என்பன கைப்பற்றப்பட்டதாகவும் கடற்படை அதிகாரியொருவர் கூறினார்.

கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள், விசாரணைகளை அடுத்து யாழ். மாவட்ட நீரியல் வளத்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். அவர்களைப் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ-7)

## கே.பிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) 7 கப்பல்கள், வெளிநாட்டுப் பணம், தங்கம் மற்றும் வெளிநாட்டு வங்கிக் கணக்குகள் என்பவை தொடர்பான 193 குற்றச்சாட்டுக்களை முன்வைத்து ஜே.வி.பியின் பிரசாரச் செயலர் விஜித ஹேரத் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

ஏற்கனவே இந்த வழக்கின் அடிப்படையில் கே.பி. வெளிநாடு செல்வதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடையை விதித்திருந்தது. அந்த இடைக்காலத் தடையும் நீதிமன்றால் நீக்கப்பட்டுள்ளது.

செய்தித்தாள்கள், இணையங்கள் உட்பட்ட பல்வேறு சான்றுகளைக் கொண்டே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஜனவரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இதனை முன்னெடுப்பதா என்ற இழுபறியில் இவ்விரு பிரதான கட்சிகளும் பேச்சு நடத்தி வருகின்றன.

மேலும் சுதந்திரக் கட்சியிலுள்ள சிலர், கூட்டு அரசில் இருந்து பிரிந்து முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பொது எதிரணியுடன் இணைவது குறித்த பேச்சுக்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இது இவ்வாறிருக்க, சில தமிழ்க்கட்சிகள், ஐக்கியதேசியக் கட்சியின் தலைவரும், பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவுடன் இரகசிய சந்திப்புக்களையும் நடத்தி வருகின்றன.

இவ்வாறான நிலையில் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி அரசியல் களத்தில் அதிரடி மாற்றங்கள் ஏற்படலாம் என்ற தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

## இடரால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) துள்ளது. 5 பேர் காணாமற்போயுள்ளனர் எனப் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 56 பேர் வரை படுகாயம் அடைந்துள்ளனர் எனக்கூறப்படுகிறது.

மீட்டியாகொட மற்றும் அம்பலன்கொட கடற்கரைப் பகுதியில் மீனவர்கள் நான்கு பேரின் சடலங்கள் கரையொதுங்கியுள்ளன.

சீரற்ற காலநிலையால் தற்போதுவரை 14 மாவட்டங்களில் 18 ஆயிரத்து 752 குடும்பங்களைச் சேர்ந்த 61 ஆயிரத்து 165 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 481 வீடுகள் முழுமையாகவும், 15 ஆயிரத்து 780 வீடுகள் பகுதி அளவிலும் சேதமடைந்துள்ளன.

இதேவேளை, பாதுகாப்பான 30 தற்காலிக வசிப்பிடங்களில் 961 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 509 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (ஐ)

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) முல்லைத்தீவுப் படைத் தளத்துக்குத் தனது முதலாவது உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்ட அவர், அங்கு படையினர்மத்தியில்உரையாற்றியபோதே இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அனைத்து மட்டங்களிலும் உள்ள இராணுவத்தினரதும் ஒழுக்கம் முக்கியமானது – அவசியமானது. தேசிய பாதுகாப்பு விடயத்தில் அவர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

பொதுமக்களுடன்சிறப்பான உறவைப் பேணுவதை இராணுவம் இலக்காகக் கொண்டிருக்கவேண்டும். அத்துடன் நல்லிணக்கத்தை ஊக்குவிக்கும் முயற்சிகளிலும் அவர்கள் ஈடுபடவேண்டும்.

சட்டவிரோதச் செயற்பாடுகளில்ஈடுபட்டு இராணுவத்துக்கு உள்ள நற்பெயரைக் கெடுத்து விடக்கூடாது – என்றார்.

முல்லைத்தீவு சென்ற இராணுவத் தளபதியை முல்லைத்தீவுக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் துஷ்யந்த ராஜகுரு வரவேற்றார்.

அங்கு படையினர் மற்றும் அதிகாரிகளைச் சந்தித்த இராணுவத் தளபதி அவர்களின், தேவைகள், வசதிகள் தொடர்பில் விரிவாக ஆராய்ந்தார்.

## மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கூட்டு எதிரணியைக் கூட்டு பொதுஜன முன்னணி என்ற புதிய அரசியல் கூட் டணியாக உருவாக்க, ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணி முடிவு செய்துள்ளது.

20 அரசியல் கட்சிகள் அடங்கிய இந்தக் கூட்டணி, தாமரை மொட்டுச் சின்னத்தில், வடக்கு, கிழக்கு உள்ளிட்ட அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்கும் போட்டியிடவுள்ளது.

கூட்டு எதிரணியில் உள்ள அனைத்துஅரசியல்கட்சிகளும் இந்தக் கூட்டு பொதுஜன முன்னணியில் இணைந்து கொள்ள இணங்கியுள்ளதாகவும், இது தொடர்பான உடன்பாடு ஏற்கனவே, கையெழுத்திடப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கூட்டுபொதுஜன முன்னணியின் முதலாவது பரப்புரைக் கூட்டம் நாளை திங்கள்கிழமை பதுளை வின்சன்ட் டயஸ் மைதானத்தில் மஹிந்தராஜபக்ஷவின்தலைமையில்நடைபெறவுள்ளது. (ஐ)

## 2020 இல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ராஜபக்ஷ வருவதற்கு 38.18 சதவீதமானவர்களின் விருப்பைப் பெற்றுள்ளார்.

அடுத்த இடத்தில் ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர் சஜித் பிரேமதாச 28.64 சதவீத விருப்பைப்பெற்றுள்ளார். எதிர்க்கட்சித் தலைவராக ஜே.வி.பி. கட்சியின்தலைவர்அனுரகுமார திசாநாயக்க அதிகளவான மக்களின் விருப்பைப் பெற்றுள்ளார்.

அதேவேளை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு 9.18 சதவீதமும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு 8.64 சதவீத விருப்பும் கிடைத்துள்ளன.

# கிழக்கில் மக்களுக்கு வீடமைப்பு கடனுதவி

மட்டக்களப்பு, டிசெ .03

மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வீடமைப்பு கடனுதவி நேற்று வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வு மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சினால் 500 பயனாளிகளுக்குதலா ஒரு லட்சம் ரூபா கடனுதவி வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறைப் பிரதியமைச்சர் இந்திக்க பண்டாரநாயக்க பிரதம அதிதியாக கலந்து கொண்டிருந்தார்.

மேசன் பயிற்சிகளை நிறைவு செய்த 200 பேருக்குத் தொழில் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# வவுனியா விவேகானந்தா பாடசாலைக்கு உதவிகள்

வவுனியா – மதியாமடு விவேகானந்தா வித்தியாலயத்திற்கு தேவையான பாடசாலை உபகரணங்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களால் வழங்கப்பட்டுள்ளன.

மாகாண சபை உறுப்பினர்களுக்கான நிதியிலிருந்து இந்த உபகரணங்கள் குறித்த பாடசாலைக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

வடமாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் பாடசாலைக்கான பாண்ட் வாத்தியத்தையும், தியாகராஜா மற்றும் மயூரன் இணைந்து கதிரைகளையும், சத்தியலிங்கம்குடிதண்ணீர்த்தாங்கியையும் வழங்கினர்.

பாடசாலை அதிபர் சி.சிவராசாதலைமையில்நடைபெற்ற குறித்த நிகழ்வில், வடமாகாண சபைஉறுப்பினர்கள்,முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துக் கொண்டனர்.

# எதிரணியின் சரத் காமினி நேற்று சு.கவில் இணைவு

கம்பளை நகரசபையின் முன்னாள்நகரசபைத்தலைவர் சரத் காமினி ஹெட்டியாராச்சி நேற்று ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொண்டுள்ளார்.

அவர் ஜனாதிபதியினால் சுதந்திரக் கட்சியின் கண்டி மாவட்ட அமைப்பாளராக நியமிப்பட்டுள்ளதுடன், அதற்கான நியமனக் கடிதத்தையும் பெற்றுக் கொண்டார்.

சரத்காமினிஹெட்டியாராச்சி கடந்தசில வருடங்களாகக்கூட்டு எதிரணியுடன் இணைந்து செயற்பட்டுவந்த உறுப்பினராவார்.

இதேவேளை, சுதந்திரக் கட்சியின் 19 புதிய அமைப்பாளர்கள் நேற்று முற்பகல் ஜனாதிபதியின்உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து ஜனாதிபதியிடமிருந்து தமது நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொண்டனர்.

# போலி நாணயத் தாள்களுடன் இளைஞர்கள் இருவர் சிக்கினர்

திருகோணமலை இறக்கக் கண்டி பகுதியில் ஆயிரம் ரூபா பெறுமதியான போலி நாணயத் தாள்களை எடுத்துச் சென்ற இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நிலாவெளி கடற்படையினர் வழங்கிய இரகசியத் தகவலை யடுத்து இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் இறக்கக்கண்டி மற்றும் வாழையூற்று பிரதேசத்தைச் சேர்ந்த எம்.பீ.றிஷாத் (வயது – 29) மற்றும் ஏ.எச்.றிஸ்வான் (வயது– 29) எனவும் பொலிஸார் கூறியுள் ளனர்.

இதேவேளை,கைதுசெய்யப்பட்ட இருவரும் திருகோணமலை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

## முல்லைத்தீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தால் மக்கள் போக்குவரத்தில் இடர்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஒட்டுசுட்டானில் பல் வேறு பகுதிகளில் வீடுகள், கடைகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது. இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இடம் பெயரும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

## வேலையற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) யற்ற பட்டதாரிகளால் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சந்திரிகா ஆட்சியில் 65 ஆயிரம் – மஹிந்த ஆட்சியில் 20 ஆயிரம் வேலைவாய்ப்புக்கள். ஆனால் நல்லாட்சியில்...?, நியமனம் வழங்குவதைத் துரிதப்படுத்து, அரசே வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எங்கே?, எதிர்க்கட்சித்தலைவரே தூங்காதே ஆகிய வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு பட்டதாரிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது வேலையற்ற பட்டதாரிகளால் துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

இந்தப் போராட்டத்தின் பின்னரும் தமக்கான நியாயமான தீர்வு வழங்கப்படாவிட்டால் தொடர் போராட்டங்களை முன்னெடுக்கத்தீர்மானித்துள்ளதாக வேலையற்ற பட்டதாரிகள் மேலும் கூறினர். (ஐ -100)

# தற்கொலை முயற்சி மடைமையடா!

பாடசாலை மாணவன் தற்கொலை, மாணவிகள் கூட்டாகத் தற்கொலை போன்ற செய்திகள் சமீபத்தில் பெரும் அதிர்வலைகளை எழுப்பியிருக்கின்றன. தற்கொலைகள் அதிகரிப்பதற்கு இது தான் காரணம் என ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சுட்டிக்காட்ட முடியாது. எல்லா தற்கொலைகளும் ஒன்றுபோலவே நடைபெறுவதில்லை. மனிதர்கள் ஒரு சமூக விலங்குகள். மனிதர்களின் அகமும் சமூகம் என்னும் புறமும் கொண்டுள்ள உறவுகளில்ஏற்படும்சிக்கல்கள்கைமீறும் நிலையில், மனது தற்கொலைக்கு முடிவெடுக்கிறது.

சில தற்கொலைகளில் அகக் காரணிகளின் பங்கு அதிகமாக இருக்கும். தீவிர மனநோய்கள், குறிப்பாக மூளையில் ஏற்படும் இரசாயனக் குறைபாடுகளால் வரும்மனநோய்களால் நிகழலாம். உதாரணமாக, மனச்சிதைவு நோயில் சிலருக்குக் காதினில் யாரோ இறந்துபோகக் கட்டளையிடுவதுபோல் தோன்றும். சில தற்கொலைகளில் புறக் காரணிகளின் பங்கு அதிகமாக இருக்கும். உதாரணமாக, விவசாயம் பொய்த்துப் போவதால் விவசாயிகள் தற்கொலை செய்துகொள்கின்றனர்.

**பதின்ம வயது பிரச்சினைகள்**

அண்மைய காலத்தில் அதிகரிக்கும் பதின்மவயது மாணவத் தற்கொலைகளில் அக மற்றும் புறக் காரணி கள் பின்னிப் பிணைந்திருக்கின்றமையை உணர முடிகிறது. மாணவர்களின் மனநிலையைத் தாண்டி, பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமூகம், கல்வி முறை, ஊடகங்கள்எனப்பலபரிமாணங்களும்கோணங்களும் உள்ள பிரச்சினை இது.


தற்போதைய இளம் தலைமுறையினரிடம் சில ஆளுமைக் கோளாறுகள் இருக்கவே செய்கின்றன. குறிப்பாக,



ஈகோ எனப்படும் தன்னைப் பற்றிய முனைப்பு அதிகமாகவே காணப்படுகிறது என்பதைப் பதிவுசெய்ய வேண்டியிருக்கிறது. கூட்டுக் குடும்பங்களில் வேறு பல பிரச்சினைகள் இருந்தாலும் குழந்தைகளைப் பொறுத்தவரை பகிர்ந்துகொள்ளல் இருந்தது. பொருள்களை மட்டுமல்ல உணர்வுகளையும் பகிர்ந்துகொள்ள கூட்டுக் குடும்பத்தில் வழியிருந்தது.

இப்போது பலரும் ஒரு குழந்தையுடன் நிறுத்திவிடுகின்றமையால் குழந்தைகளுக்குக் கிடைக்கும் கவனம் அதிகமாகி ஈகோ பெரிதாக வளர்கிறது. தன்னையும் தனது தேவைகளையும் பூர்த்திசெய்யவே எல்லோரும் உள்ளனர் என்ற குறுகிய பார்வை தோன்றுகிறது. அதனால், தன்னை யாரும் ஒன்றுமே சொல்லிவிடக் கூடாது என்ற எண்ணம் வளர்கிறது. முகம்திரிந்து நோக்கினால்கூட வாடிவிடும் அனிச்சமலர் போல் ஒரு சுடு சொல்கூட அவர்களை வாடச்செய்து விடுகிறது.

மேலும், கல்வி முறையால் ஏற்பட்டிருக்கும் சுமையை இறக்கு வதற்கும் இறுக்கத்தைக் குறைப்பதற்கும் எந்தவித ஆக்கபூர்வமான பொழுதுபோக்குகளும் குறைவு. மன அழுத்தத்தைக் குறைக்கும் உடற்பயிற்சி, விளையாட்டுகள் போன்றவை அறவே இல்லை என்றே சொல்லலாம். குறிப்பாக, பெண் குழந்தைகள் நிலைமை இன்னும் மோசம். வெளியே சென்று விளையாடுவதற்குப் பெற்றோர்கள் அனுமதிப்பது இல்லை என்பது மிக முக்கியமான பிரச்சினை.



சமீபத்தில் மாணவியரே அதிகம் தற்கொலை செய்துகொண்டமையை இதனுடன் தொடர்புபடுத்திப்பார்க்கவேண்டும். அவர்களைப் பொறுத்த வரை விளையாட்டு என்பது ஆங்க்ரி பேர்ட்ஸ், கேண்டி கிரஷ் போன்ற செல்பேசி விளையாட்டுகள்தான்.

**பெற்றோர்களின் கடமை**

தனியார்மயம், உலகமயமாக்கலால் போட்டிமய மான சூழலில் பெற்றோர்கள் மிகையான எதிர்பார்ப்புகளை வைத்துக்கொண்டு மன அழுத்தத்துக்கு ஆளாவதுடன், குழந்தைகளிடமும் அழுத்தத்தை உருவாக்கிவிடுகிறார்கள். பிற மாணவர்களுடன் ஒப்பிட்டு விமர்சிப்பதும் அதிகம் நடக்கிறது. குழந்தைகள் தனித்தன்மை கொண்ட ஆளுமைகள் என்று பார்ப்பதில்லை.

குழந்தைகளின் தனித்தன்மை மிளிரும் வகையில் நேர்மை, துணிச்சல், பொறுமை, பொறுப்புணர்வு, விடா முயற்சி போன்ற ஆளுமைப் பண்புகளை வளர்ப்பதற்கு வழிகாட்டியாகவும் முன்மாதிரியாகவும் இருப்பது பெற்றோரின் கடமை. இந்தப் பண்புகள் குழந்தைகளின் எதிர்காலத்தைக் கட்டமைப்பதில் பெரிய அளவில் உதவும். உங்கள் குழந்தைகளுக்குச் சில விஷயங்களில் திறமை இருக்கலாம். ஆனால், ஆர்வம் இருக்க வேண்டும்.

ஆர்வமும் திறமையும் உழைப்பும் சேர்ந்தாலே முழுமையானதாக இருக்கும். உடற்பயிற்சி, விளையாட்டுக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். தேர்வுகள் நடக்கும்போது நாள் முழுவதும் படித்துக் கொண்டேயிருக்க வேண்டும் என்று அழுத்தம் கொடுக்கக் கூடாது.

முன்பெல்லாம் ‘கண்ணை மட்டும் விட்டுவிட்டு எல்லா இடத்திலேயும் அடிங்க!’ எனப் பெற்றோர்கள் ஆசிரியர்களிடம் கூறுவார்கள். அது போன்ற உடல்ரீதியான துன்புறுத்தலை அறிவுள்ள யாரும் ஆதரிக்க மாட்டார்கள். அதேசமயம், கொஞ்சம் கடுமையான சொற்களைக்கூடத் தாங்கிக்கொள்ளாமல் போகும் அளவுக்குக் குழந்தைகளை உருவாக்காதீர்கள்.

சுடுசொற்களை, ஏமாற்றத்தை, வலிகளைத் தாங்கிக்கொள்ள குழந்தைகளைத்தயார் செய்வது பெற்றோர்களின் கடமை. வெற்றி அடையக் கற்றுக் கொடுப்பது முக்கியம்தான் என்றாலும், தோல்விகளை எதிர்கொண்டு முன்னேறி வரவும் கற்றுத்தர வேண்டும். தவறுகளை யாரேனும் சுட்டிக்காட்டினால் உணர்ச்சி வசப்படாமல் ஒப்புக்கொள்ளக் குழந்தைகளுக்குக் கற்றுத் தரவேண்டும். யாரேனும் சீண்டினால் பயந்துபோகாமல் போராடக் கற்றுக்கொடுக்க வேண்டும்.

**ஆசிரியர்களின் பொறுப்பு**

குழந்தைகளின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் மிகப் பெரிய பொறுப்பு ஆசிரியர்களுக்கு உண்டு. பள்ளிக்கூடம் என்பது மதிப்பெண்கள் எடுக்கக்கூடியவர்களை உற்பத்திசெய்யும் தொழிற்சாலைகள் அல்ல. விளையாட்டுப் பாட வகுப்புகளில் பிற பாடங்களை நடத்துவது தவிர்க்கப்பட வேண்டும். ஒவ்வொரு குழந்தைக்கும் ஒவ்வொரு வகையான திறமையும் வேகமும் இருக்கும். ஒரே வயது என்ற ஒரே அடிப்படை யில் வகுப்பில் இருக்கும் எல்லாக் குழந்தைகளும் ஒரேமாதிரி இருப்பார்கள் என்று கருதுவது தவறு.

மூளை வளர்ச்சிக் குறைபாடு, அதீத துறுதுறுப்பு (ஹைப்பர் ஆக்டிவிட்டி), கற்றல் குறைபாடு (டிஸ்லெக்சியா), ஆட்டிசம் என்று குழந்தைகளிடம் காணப்படும் பாதிப்புகளைப் பற்றி பெரும்பாலான ஆசிரியர்கள் அறிந்திருப்பதில்லை. இந்தக் குழந்தைகளையும் மற்ற குழந்தைகள்போல் மதிப்பெண் இயந்திரமாக மாற்ற நினைப்பது தவறு. மேலும், இக்காலப் பதின்ம வயதினர் எளிதில் உணர்ச்சிவசப்படுபவர்களாக இருக்கின்றமையால், தவறுகளைச் சுட்டிக்காட்டும்போது மிகுந்த கவனம் தேவை. புண்படுத்தாத வார்த்தைகளைப் பயன்படுத்துவது, குழந்தைகளிடம் ஆக்கபூர்வமான மாற்றத்தை ஏற்படுத்தும். தவறான செயலை மட்டும் கண்டிக்க வேண்டும்.



தற்கொலைகள் தொடர்பான செய்திகளைக் கையாள்வதில் ஊடகங்களுக்குப் பெரிய பங்குள்ளது. ஒரு நிகழ்வின் பின்புலம், நிகழ்ந்ததாகச் சொல்லப்படும் குற்றங்களின் நம்பகத்தன்மை, நாம் கொடுக்கும் காட்சி, செய்திகளின் தாக்கங்கள் என்னவென்னவாக இருக்கும் என்றெல்லாம் பொறுப்புணர்வோடு ஊடகங்கள் இருக்க வேண்டும். இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நடக்காமல் இருக்க ஆக்கபூர்வமான வழிமுறைகளை ஆராயவேண்டும். பரபரப்புக்காக மிகைப்படுத்தப்படும் செய்திகள் சமூகத்தில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துவதைக் கணக்கில்கொள்ள வேண்டும். குழந்தைகள்தான் எதிர்காலத்தில் உலகின் போக்கைத் தீர்மானிப்பவர்கள் என்பதைஅனைத்துத்தரப்பினரும்உணர்ந்துகொண்டால் இதுபோன்ற பிரச்சினைகளைப்பெருமளவில் குறைக்கலாம்!

> “ சில தற்கொலைகளில் அகக் காரணிகளின் பங்கு அதிகமாக இருக்கும். தீவிர மனநோய்கள். குறிப்பாக மூளையில் ஏற்படும் இரசாயனக் குறைபாடுகளால் வரும் மனநோய்களால் நிகழலாம். உதாரணமாக. மனச் சிதைவு நோயில் சிலருக்குக் காதினில் யாரோ இறந்துபோகக் கட்டளையிடுவதுபோல் தோன்றும். சில தற்கொலைகளில் புறக் காரணிகளின் பங்கு அதிகமாக இருக்கும். ”



**மாணவர்களை நல்வழிப்படுத்துவது ஆசிரியர்களின் கடமையும் கூட**

காலைக்கதிர்
Kalaikkathir



# 36 கோடி ரூபா செலவில் அரச பொது ஓய்வு விடுதி

## அதிநவீன வசதிகளுடன் பண்ணை கடற்கரையில் அமைக்கப்படுகிறது

யாழ்ப்பாணம், டிசெ.03

யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் நன்மை கருதி பண்ணைக் கடற்கரைப் பகுதியில் பெரிய அரச பொது ஓய்வு விடுதியொன்று 36 கோடி ரூபா செலவில் அமைக்கப்படுவதாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் வடக்கு மாகாணப் பணிப்பாளர்



வை.ஏ.ஜி.கே. குணதிலக தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:


இந்த விடுதி யாழ்ப்பாணம் – காரைநகர் வீதியில் பண்ணைக் கடற்கரைப் பகுதியை அண்டி யாழ்.சிறைச்சாலைக்கு அண்மையாக அமைக்கப்படுகிறது.

40 அறைகளைக் கொண்ட சகல நவீன வசதிகளுடன் மக்கள் பயன்படுத்தும் விதமாக இந்த விடுதி அமைக்கப்படுகிறது. தற்போது முதற்கட்டக் கட்டுமானங்கள் கடற்கரைப் பகுதியில் மண் நிரப்பப்பட்டு 6 கோடி ரூபாவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அடுத்த வருடம் இந்த ஓய்வு விடுதியின் கட்டுமானங்கள் 30 கோடி ரூபாவில் மேற்கொள்ளப்பட்டு அழகிய இரண்டுமாடிக் கட்டடமாக அது அமையவுள்ளது.

பண்ணை சுற்றுலாக் கடற்கரையை அண்டி அமையும் இந்த ஓய்வு விடுதியால் மிகுந்த பயனைச் சுற்றுலாப் பயணிகள் பெறுவர். அத்துடன் யாழ்.மாவட்டச் சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கும் இந்த விடுதி பங்களிப்பைச் செய்யுமென எதிர்பார்க்கின்றோம்.

ஏற்கனவே மண்கும்பான் பகுதியில் அரச பொது ஓய்வு விடுதி அமைக்கப்பட்டுச் செயற்பட்டுவரும் நிலையில், மக்களுக்கான அரச பொது விடுதி யாழ்ப்பாண நகரிலும் அமைக்கப்படுகின்றது – என்றார்.

## தமிழ்க் கூட்டமைப்பின் பக்கத்தை அங்கீகரித்தது முகநூல் நிறுவனம்




கொழும்பு, டிசெ.03

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முகநூல் பக்கத்தை முகநூல் நிறுவனம் உத்தியோகபூர்வ பக்கமாக அங்கீகரித்துள்ளது.

இலங்கையின் அரசியல் கட்சிகளின் வரலாற்றில் முகநூல் நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட மூன்றாவது அரசியல் கட்சியின் முகநூல் இது என்பது குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய தேசியக் கட்சியின் முகநூல் பக்கமும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முகநூல் பக்கங்களும் மாத்திரமே இலங் கையில் அங்கீகரிக்கப்பட்ட முகநூல் பக்கங்களாகச் செயற்பட்டு வந்தன.

இலங்கையில் மூன்றாவது அரசியல் கட்சியாகத் தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முகநூல் பக்கத்திற்கு தமது அங்கீகாரத்தை வழங்கியிருக்கிறது முகநூல் நிறுவனம்.

## முல்லைத்தீவுக் கடலில் சிவப்பு - மஞ்சள் கொடி!



முல்லைத்தீவு, டிசெ.03

முல்லைத்தீவின் வடமேல் கடற்பரப்பில் சிவப்பு மற்றும் மஞ்சள் நிறங்களையுடைய கொடியொன்று மிதந்துகொண்டிருப்பதாகக் கரையோரப் பகுதி மீனவர்கள் தெரிவித்தனர்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாகக் கடல் கொந்தளிப்புடன் காணப்படுகின்றது. இந்தக் கொந்தளிப்புக்கு மத்தியிலும் இந்த மஞ்சள் சிவப்புக் கொடி மிதந்துகொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## மஹிந்தவும் மைத்திரியும் ஒன்றிணைய வேண்டும்

### முன்னாள் பிரதமர் விருப்பம்

கொழும்பு, டிசெ.03

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் இணைந்து சுதந்திரக் கட்சியை மீண்டும் வலுப்படுத்த வேண்டும் என முன்னாள் பிரதமர் டி.எம். ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

கண்டியில் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களிலும் சுதந்திரக் கட்சியில் பிளவுகள் ஏற்பட்டன. எனினும் தற்போது வரை கட்சி பிளவின்றி முன்னோக்கி வந்தது. இதனால், ஜனாதிபதியும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் ஒன்றாக இணைந்து கட்சியை வலுப்படுத்த வேண்டும் – என்றார்.

## இன்று விளக்கீடு



கொழும்பு, டிசெ.03

இந்துமக்களால் இன்று கொண்டாடப்படும் திருக்கார்த்திகை விளக்கீட்டுக்காக நேற்று சிட்டி விளக்குகளை மக்கள் மிகவும் ஆர்வத்துடன் கொள்ளவனவு செய்து வருகின்றனர்.

திருநெல்வேலி மற்றும் யாழ். நகர் கடைத் தொகுதிகளில் சிட்டிகளை மக்கள் ஆர்வத்துடன் கொள்ளவனவு செய்தனர்.

இன்று வீட்டு வாசலில் வாழைக்குற்றி நாட்டி வைத்து அதன் மேல் தீப்பந்தம் ஏற்றியும், வீடுகளுக்குள்ளும் வெளியிலும் சிட்டி விளக்குகளில் தீபமேற்றியும் அழகுபடுத்தி மக்கள் வழிபடுவர். (த)

## ஒதியமலை படுகொலை! நேற்று நினைவு நாள்!







முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைப்புற கிராமமான ஒதியமலை கிராமத்தில் 1984.12.02 அதிகாலை வேளையில் இராணுவம் சந்திப்புக்கென அழைத்துச் சென்று சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட 32 அப்பாவி பொதுமக்களின் 33 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு படுகொலை நடைபெற்ற இடத்தில் ஒதியமலை கிராம அபிவிருத்தி சங்க ஏற்பாட்டில் நடைபெற்றது.

இதன்போது படுகொலை செய்யப்பட்ட 32 அப்பாவிப் பொதுமக்களுக்கு உறவுகளால் சுடரேற்றி மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஒதியமலை பிள்ளையார் ஆலயத்தில் ஆத்ம சாந்திபிரார்த்தனைகளும் அன்னதானமும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா, வடமாகாண சபை பிரதி அவைத் தலைவர் வ.கமலேஸ்வரன், முன்னாள் வடமாகாண சுகாதார அமைச்சரும் தற்போது மாகாண சபை உறுப்பினருமான ப.சத்தியலிங்கம், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் உள்ளிட்ட அதிதிகள் பலர் கலந்துகொண்டிருந்தனர். (இ-81)

## 273 விவசாயக் கிணறுகளை சீரமைக்கக் கொடுப்பனவு

### 100 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது






யாழ்ப்பாணம், டிசெ.03

வடக்கு மாகாணத்தில் 273 விவசாயக் கிணறுகளைச் சீரமைப்பதற்காக 100 விவசாயிகளுக்குக் காசோலைகள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணம் – திருநெல்வேலியில் அமைந்துள்ள விவசாயத் திணைக்களத்தில் நேற்று மாலை இடம்பெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண விவசாய அமைச்சால் இந்த நிதி வழங்கப்பட்டது.

இயக்கச்சியில் இயங்கும் பீற்றா பவர் ஜூல் பவர் நிறுவனத்தால் சமூகக் கடப்பாடு நன்கொடையாக வடக்கு மாகாண விவசாய அமைச்சுக்கு ஆண்டு தோறும் 20 மில்லியன் ரூபா நிதி வழங்கப்படுகிறது.

இந்த நிதியிலிருந்தே வடக்கு மாகாணத்தில் 273 விவசாயக் கிணறுகளைச் சீரமைக்க 100 விவசாயிகளுக்குக் கொடுப்பனவு வழங்கப்பட்டது. 50 ஆயிரம் ரூபா தொடக்கம் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வரை மதிப்பீட்டுக்கு அமைவாகக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் தவராசா, வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் சிவாஜிலிங்கம், ஜெயசேகரம், கஜதீபன், வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் சிவகுமார் மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர். (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.12.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.